www.padippakam.com

# வள்ளுவம்

தி.ஆ.2031 வைகாசி - ஆனி



படிப்பகம்

www.padippakam.com

# மணிவாசகர் பதிப்பகம்

*நிறுவனர்: பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்*

*நாற்பதாண்டுப் பணி (1960 - 2000)*

## சிறப்பு வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழ் மொழி வரலாறு - முனைவர் சு. சக்திவேல் | 95-00 |
| தமிழக வரலாறும் பண்பாடும் - வெ.தி. செல்லம் | 125-00 |
| பண்பாட்டு மானிடவியல் - பக்தவச்சலபாரதி | 130-00 |
| சங்க இலக்கியக் களஞ்சியம் - சு. அமிர்தலிங்கம் | 175-00 |
| சங்க இலக்கிய தொன்மக் களஞ்சியம் - வெ. அண்ணாமலை | 100-00 |
| விவிலியமும் தமிழும் - சரோஜினி பாக்கியமுத்து | 75-00 |
| தொல்காப்பியம் *(எழுத்து-சொல்)* - முனைவர் தமிழண்ணல் உரை | 60-00 |
| திருக்குறள் - பரிமேலழகர் உரை *(நான்கு தொகுதிகள்)* *(முனைவர் இரா. சாரங்கபாணி உரைவிளக்கம்)* | 250-00 |
| அறிவியல் ஆயிரம் *(10 தொகுதிகள்)* - கு. அருணாசலம் | 45-00 |
| வாழ்வியல் ஆயிரம் *(5 தொகுதிகள்)* - கு. அருணாசலம் | 175-00 |
| அப்துல் கலாம் - நெல்லை சு. முத்து | 55-00 |
| சி. சுப்பிரமணியம் - சிற்பி பாலசுப்பிரமணியம் | 30-00 |
| திரை இசை அலைகள் - வாமனன் | 150-00 |
| அறிவியல் அகராதி - அ.கி. மூர்த்தி | 150-00 |
| வேதியியல் அகராதி - அ.கி. மூர்த்தி | 40-00 |
| இயற்பியல் அகராதி - அ.கி. மூர்த்தி | 40-00 |
| வெற்றி மெகா அகராதி - அ.கி. மூர்த்தி *(ஆங்-ஆங்-தமிழ்)* | 175-00 |

**8/7, சிங்கர் தெரு,**
**சென்னை – 600108.**
**தொலைபேசி : 5361039**

**12–பி, மேலசன்னதி,**
**சிதம்பரம் – 608001.**
**தொலைபேசி : 30069**

படிப்பகம்

www.padippakam.com

# எழுத்தை உவமையாக்கிய முதல் எழுத்தாளன்

*ஈரோடு தமிழன்பன்*



வள்ளுவ!
எழுத்தையே உவமை யாக்கிய
முதல்
எழுத்தாளன் நீ!

'அகரமுதல' எனத் தொடங்கினாய்
னகரம் வரை
என்ன இன்ப அதிர்வுகள்!
சிகரம் தொட்ட சிலிர்ப்பு
அகரத்திற்கு

பிறந்த எழுத்துக்கள்
பெருமையில் மிதந்தன!
பிறவா எழுத்துக்கள்
தலைமை அகரத்தின் தாள்களைத்
தியானித்தன.

ஆதிபகவன்
தனக்கு உவமையான
அகரம் பற்றி அறியத்
தமிழ் படித்தான்.

இரண்டாவது அடியில் நின்ற
ஆதிபகவன்
முதலடியில் நின்ற முதல் எழுத்துக்கு
நன்றி சொன்னான்.

உலகுக்குத் தான் முதன்மையான
உண்மையை
ஓர் உவமையாகி உணர்த்திய
அகரத்தை
ஒப்பற்ற பொருளாகவே
ஆராதித்தான் ஆதிபகவன்.

படிப்பகம்

www.padippakam.com

பொருள்
தனக்கு உவமையானதைப்
பொருளாக்கிக் கொண்ட
அதிசயம் நடந்தது.

வள்ளுவ,
போல, புரைய, மான, கடுப்ப
அன்ன இன்ன, ஏய, இயைய........
உருபுகள் ஊடுருவாதபடி
அகரத்தை-ஆதிபகவனை அருகருகே
நிறுத்தி நிறுவினாய் நெருக்கத்தை!

ஆதிபகவன்
அகரத்தின் நறுமணத்தில்
தமிழை நுகர்ந்தான்.

'அகரமாக இருப்பதா?
ஆதிபகவனாக இருப்பதா?
உவமையின் உயர்வில்
ஊசலாடியது பகவன் உள்ளம்

அகரத்தின் தலைமையில்
ஓர் எழுத்தாக அவாவியது உலகம்.

வைகறை
அள்ளிக் கொள்ள ஆசைப்பட்டது
அகரத்தின் ஒளியை!

காற்று
அகரத்தைத் திறந்து
ஓசையின் தாதுகளை உடம்பெல்லாம்
பூசிக்கொண்டது.

ஆதிபகவன்,
எல்லா எழுத்துக்களுக்குள்ளும்
போய்ப்போய் வந்தவன்.....
என்னவோ சொல்லிக் கொண்டிருந்தான்
அகரத்திடம்!

"அகரமே!
நீ எனக்கு உவமையானது போல்
உனக்கு நான் உவமை யாவேன்
ஒருநாள்.

என்னை முதலாக உடைய
உலகம்.....
உன்னை முதலாக உடைய
எழுத்துக்களிடமிருந்து கற்றுக்கொள்ள
எவ்வளவோ உண்டு....."

வள்ளுவ!
அகரத்தைத் திறந்து
ஒரு
நகரத்தை உருவாக்கித்தந்தாய்
ஆதி பகவனுக்கு......

ஒளிபிலிற்றும்
ஒவ்வொரு தெருவிலும் எழுத்துக்கள்!

ஒவ்வொன்றின் ஓசையிலும்
ஓடையில் நீந்துவது போல் நீந்தினான்.....
ஒவ்வொன்றின் உடம்பிலும்
ஓவியங்களை முத்தமிட்டான்!

தன்னை உயர்த்தும் எண்ணங்கள்
தமிழில் இருப்பதைக் கண்டான்.

ஆதிபகவன்
தனது தமிழ் அனுபவத்தை
அறிக்கையாய்த் தயாரித்து
அகரத்திடம் கொடுத்தான்!

அகரம்
அந்த அறிக்கையை உன்னிடம்
கொடுத்தது!

வள்ளுவ!
அந்த அறிக்கையைநீ
எப்போது வெளியிடுவதாய் எண்ணம்?

www.padippakam.com

சிறப்பாசிரியர்
ச. மெய்யப்பன்

ஆசிரியர்
பல்லடம் மாணிக்கம்
இ. சுந்தரமூர்த்தி

நெறியாளர் குழு
தமிழண்ணல்
ச.வே. சுப்பிரமணியன்
இரா. இளங்குமரன்

ஆசிரியர்குழு
க.ப. அறவாணன்
ஈரோடு தமிழன்பன்
இரா. இளவரசு
சிற்பி பாலசுப்பிரமணியம்
கி. நாச்சிமுத்து

அச்சாக்கம்
இரா. குருமூர்த்தி

ஓவியர்
மாரிமுத்து

விலை : **25** உருபாய்

பல்லடம் மாணிக்கம்
திருக்குறள்
பண்பாட்டு ஆய்வு மையம்
கவிதா நிலையம்
31, பணிபூண்டார் வீதி
(திருமுதுகுன்றம்) விருத்தாசலம் - 606 001

# வள்ளுவம்

(இருதிங்கள் இதழ்)

'பண்புடையார்ப்பட்டுண்டு உலகு'

தி.ஆ. 2031 வைகாசி - ஆனி. மே - சூன் 2000

1. எழுத்தை உவமையாக்கிய முதல் எழுத்தாளன்
- ஈரோடு தமிழன்பன் 1

2. ஆல்பர்ட் சுவைட்சர் வியந்த திருக்குறள்
- பேராசிரியர் க. அன்பழகன் 5

3. வள்ளுவம் : சில பின்னணிச் செய்திகள்
- க.ப. அறவாணன் 13

4. திருவள்ளுவரின் குறள்நூல்
- ஜெ. நாராயணசாமி 23

5. திருவள்ளுவர் என்ற மனிதர்
- முனைவர் ந. முருகேசபாண்டியன் 35

6. குறள் தரும் பொருள்
- செங்கோலரசு 41

7. காமத்துப்பாலில் புறத்திணைக்கூறுகள்
- கருவை பழனிசாமி 46

8. கட்டளைக் கல்
- புலவர் பூ. அரங்கசாமி 49

9. ஊழலை ஒழிக்க வள்ளுவர் கூறும் வழிகள்
- மு. சதாசிவம் 55

10. புயலைத் தாண்டினால் தென்றல்
- ஏ.பி.ஜே. அப்துல்கலாம் 59

11. வள்ளுவப் பிரகாசர்
- ம.ரா.போ. குருசாமி 64

12. புலவர் குழந்தை திருக்குறள் பதிப்பு
- இ. சுந்தரமூர்த்தி 72

13. திருக்குறள் ஆவணங்கள்
- கவிஞர் தமிழ்நாடன் 85

14. குறளும் அயோத்திதாசரும்
- இரா. முத்துக்குமாரசாமி 90

15. திருக்குறள் கட்டமைப்பைச் சிதைத்து ஓர் உரையாக்கம்
- க.சி. அகமுடை நம்பி 94

| | | |
|---|---|---|
| புரவலர் | - ரூ.2000/- | 100 டாலர் |
| நிறுவன உறுப்பினர் | - ரூ.1000/- | 50 டாலர் |
| ஆண்டு உறுப்பினர் | - ரூ.150/- | 15 டாலர் |
| தனி இதழ் | - ரூ.25/- | 2 டாலர் |



படிப்பகம்

www.padippakam.com

## வள்ளுவம்.. வள்ளுவம்.. வள்ளுவம்.

பழைமை அகதிகளின் பிடியிலிருந்தும், ஆதிக்கவாதிகளின் அட்டூழியங்கள் நிறைந்த வழியிலிருந்தும் சிறை மீண்ட திருக்குறளின் வரலாற்றில் கீழ்வானம் சிவந்து கிழக்கு வெளுத்தது.

ஒளிப்பிழம்பாய் உதித்தெழுந்து திருக்குறட் சூரியனின் உன்னதமான பயணமும் தொடங்கியது.

ஆரவாரமான விழாக்களும், ஆர்ப்பாட்டமான வரவேற்புகளும், அழகான பதிப்புக்களும், ஆய்வேடுகளும் அய்யன் திருவள்ளுவனின் காலடித் தாமரைகளில் காணிக்கை ஆக்கப்பட்டன.

நெருப்பாற்றுச் சோதனைகளை நீந்திக் கடந்து வந்த வள்ளுவனுக்கு இது பொற்காலம் என்றும், புகழ்க்காலம் என்றும் பேசப்படுகிறது.

இருக்கட்டும்! பொற்காலம் என்ற புகழ்மாலைகள் உண்மையானதாகவே இருக்கட்டும்! திருக்குறளைப் புகை சூழ்ந்தது போலப் புகழ் சூழ்ந்திருக்கும் இந்த வேளையில், எல்லோருமே அந்தப் ,புகழ்மாலை மணத்தில் ஆழ்ந்து தாழ்ந்து போய்விடாமல் அறிவு பூர்வமாகச் சிந்தித்திருப்பது நல்லது.

ஏனெனில் திருக்குறளுக்கு நாம் செய்திருப்பதும் செய்திருக்க வேண்டியதுமான அடிப்படைப் பணிகளைப் பற்றிச் சிந்தித்துத் தெளிவுபெறுவதற்கு இது ஏற்ற தருணம்.

திருக்குறளைப்பற்றி நாம் நிறையவே பேசியும், எழுதியும் தீர்த்துவிட்டோம். எழுதியதில் நிலையானதும், அடிப்படையானதும், அவசியமானதுமான படைப்புக்களைத் தேடித்தேடித்தான் கண்டறிய வேண்டி உள்ளது.

எண்ணிக்கை மிகுதி! தரம் குறைவு! திருக்குறள் வயல் வெளியில் ஏர்பூட்டி உழுத பலரும் அகல உழுதவர்களே! ஆழ உழுதவர்கள் ஒரு சிலர் மட்டுமே! திருக்குறளின் அழகில் மயங்கியவர் பலர் என்றாலும் அதன் செய்தி அறிந்தவர் சிலர்தான்.

திருக்குறளின் உள்ளும் புறமும், அகலமும் ஆழமும், வெளிப்படும்படியும், தெளிவுபடும்படியும் அதன் சகல பரிமாணங்களும் புலப்படும்படியுமான படைப்புக்களைக் கொண்டுவர வேண்டும்.

இந்தப் பணிகளுக்கும் - ஆய்வுகளுக்கும் அடிப்படையாக ஆதார சுருதியாக இருக்கவேண்டிய ஒரு பணி பற்றி எந்த முயற்சியும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. திருக்குறள் இருக்கைகளைக் கொண்டு ஆய்வுநிகழ்த்தும் பல்கலைக்கழகங்கள் கூட இதுவரை இது பற்றி எவ்வித முயற்சியும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

நம்பகத் தன்மைகொண்ட திருத்தமான செம்பதிப்பொன்று திருக்குறளுக்கு வரவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தி அல்லவா? அறிவியல் வளர்ச்சியின் அடையாள வடிவமான அச்சில் திருக்குறள் வெளிவந்து ஏறக்குறைய 200 ஆண்டுகள் ஆன பின்பும் கூட இம்முயற்சி மேற்கொள்ளப்படாதது. இலக்கியங்கள் பற்றிய நமது ஆய்வுகளின் நம்பகத் தன்மையற்ற நிலைக்கு எடுத்துக்காட்டாகும்! ஆக்கப்பூர்வமாக இல்லாததும், ஆரவாரம் கொண்டதுமான ஆய்வுகளை விட்டுவிட்டு ஆழமாகவும் நுட்பமாகவும் சிந்தித்து அடித்தளம் போட்டுத் தருகிற ஆய்வில் பதிப்புக்களைக் கொண்டுவர நம் கவனம் திரும்பியாக வேண்டும்.

நாம் விழுதுகளைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, வேர்களைத் தேடி நட்புப் பயணம் மேற்கொண்டாக வேண்டும்.

திருத்தமான செம்பதிப்பு இல்லாத நூலைப்பற்றிய எந்த ஆய்வும் முழுமை பெற்றதாகவும், நிறைவு தருவதாகவும் அமையாது! செறிவும் கனமும், தீர்க்கமும் நிறைந்த படைப்புக்கள் வருவதற்கு மூலநூலுக்குச் செம்பதிப்பு இருந்தே ஆகவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து திருக்குறளுக்கு எண்ணற்ற பதிப்புகள் வெளிவந்துள்ளன. ஆயினும் நம்பகரமான திருத்தப்பதிப்பு (Critical Edition) திருக்குறளுக்கு இன்றளவும் வெளிவரவில்லையென்பது குறிப்பிடற்குரிய செய்தியாகும். பயிற்சியில் உள்ள பதிப்புக்கள் பலவும் முந்திய பதிப்புக்களைப் பின்பற்றி மாற்றங்கள் சிறிதுமின்றி மூலபாடத்தை அமைத்துக் கொண்டுள்ளன. பழைய பதிப்புக்கள் அனைத்தும் தரமானவையென்ற நம்பிக்கையே இதற்குக் காரணம். இத்தகு பழம் பதிப்புக்களிலும் பிழைகள் நேர்ந்துள்ளமையை அறிஞர் பலரும் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளனர். பதிப்புப்பணிக்குப் பயன்படுத்தப்பெறாத திருக்குறள் ஏடுகள் பல தமிழகத்திலும், பிற இந்திய மாநிலங்களிலும் உள்ள சுவடி நிலையங்களில் இன்னும் காணப்படுகின்றன. இதுபோலவே இலங்கை, பிரிட்டன் முதலிய பிறநாடுகளிலும் திருக்குறள் ஓலைச் சுவடிகளும், கடிதப்பிரதிகளும் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி, ஒப்புநோக்கி, ஆராய்ந்து திருத்தமுள்ள செம்பதிப்பொன்று திருக்குறளுக்கு வெளிவந்தாலன்றிக் குறளின் மூலபாடத்தில் தெளிவு ஏற்படாது; திருக்குறள் ஆராய்ச்சியும் முழுமையுறாது.

எழுபதுகளின் தொடக்கத்தில் தமிழ்ப் பெருமகனார் வ.அய். சுப்பிரமணியம் சொன்னதைக் கவனத்தில் கொள்ளத் தவறினோம்.

தமிழகத்தின் முதல் கல்வி அமைச்சராகவும், திருக்குறளுக்குப் புதுவாழ்வு தந்தவர்களில் முதன்மையானவராகவும் விளங்கிய தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் குறளுக்குச் செம்பதிப்பு ஒன்று கொண்டுவர ஆசைப்பட்டு முயற்சியும் மேற்கொண்டார். ஆனால் அது வேறு மாதிரியான பதிப்பாக அமைந்துவிட்டது.

நம்முடைய பழைய இலக்கியங்கள் எதற்கும் இதுவரை திருத்தமான செம்பதிப்பு வரவில்லை என்ற குறைபாட்டுக்கு மத்தியில் குறளுக்கும் வரவில்லை என்பது மிகப்பெரிய குறைபாடே ஆகும். இந்தக் குறைபாடு களையப்படும் வரை திருக்குறள்மீது நாம் காட்டும் அக்கறையும், கொண்டிருக்கும் பற்றும் பொய்யானதாகவே இருக்கும்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொள்ள நாம் விரும்புவது உண்மையாக இருக்குமானால் செம்பதிப்புக்குரிய சிந்தனையும், செயல்பாடும் இன்றிலிருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com




# ஆல்பர்ட் சுவைட்சர் வியந்த திருக்குறள்

பேராசிரியர் க. அன்பழகன்



உலகமும், உயிர்களும், மானிட வாழ்வும் கனவுமல்ல. பொய்யுமல்ல, மாயையுமல்ல. மாறாக மானிடன் உணரலாகும் உண்மையே என்னும் ''இன்மை மறுப்பு உடன்பாட்டுக் கொள்கையை'' (Positive Outlook about world and Life) ஏற்றுக்கொண்டதாகவும், மனிதனைச் செயற்பாட்டு வாழ்வில் நின்று ஒழுகச் செய்வதற்கும் ஊக்கமளித்திடும் நெறியாகவும், திருவள்ளுவர் வகுத்த குறள் அறம் விளங்குவதைத் தமது இந்தியத் தத்துவ நூல்களைப் பற்றிய ஒப்பீட்டு ஆய்வில் கண்டறிந்த ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பெரிதும் வியந்து போற்றிப் பாராட்டியுள்ளார். இளமையிலேயே கிறித்தவசமயத்துறையில் சேர்ந்த பின்னும், மனித நேயம் வளர்த்திடும் மானிடத் திற்கான தொண்டே இறைப்பணியாகும் என உளங்கொண்டு, அதற்காகவே மருத்துவத்துறையில் பயின்று பட்டம் பெற்று, தொண்டு மிகவும் தேவைப்படும் ஆப்பிரிக்க நீக்ரோ மக்களுக்குப் பணியாற்றத் தீர்மானித்து, ஆப்பிரிக்காவில் உள்ள லேம்பர்னேயில் அரை நூற்றாண்டுக்கு மேல் தொண்டாற்றிய பெருமைக்குரியவர் ஆல்பர்ட் சுவைட்சர், தத்துவ ஆய்விலும் ஈடுபட்டு, மனிதநேயம் வளர்த்திடும் நூல்கள் இயற்றியவர். அவரது அன்பின் வழிப்பட்ட தூய தொண்டு 'நோபல்' பரிசும் பாராட்டும் பெற்றது. திருக்குறள் நெறி குறித்து அவர் பாராட்டி உரைத்தவையே இக்கட்டுரையில் விவரிக்கப்படுகிறது.

வடமொழியில் தருமம் பற்றி விளங்கு வதாகக் கருதப்படும் மனுஸ்மிருதியில் உள்ள விதிகளில் காணப்படுவது போன்றே, திருக்குறளிலும் அறநிலையில் தவறாது செயற்படுவதற்கு ஊதியம் (பயன்) உண்டென்னும் கருத்தும் இடம் பெற்றுள்ளது. நல்லறநெறி நிற்றல், உயர்ந்த (மறு) பிறவிக்கோ, அன்றிப் பிறப்பறுத்தலாகிய 'வீடு' பெறுவதற்கோ





படிப்பகம்

www.padippakam.com



மறுபிறவி, வீடு பற்றிய கருத்து குறளில் இடம்பெறினும், "நல்லொழுக்கத்தில் நிற்றலே உலக வாழ்வில் நன்மையைத் தரும், அந்நெறி தவறுதல் (ஒழுக்கக் கேடு) உலக வாழ்வில் கேட்டினையே தரும்'' என்னும் இயல்பான இந்த அறக்கொள்கை சீன அறநூல்களில் விளக்கப்பட்டுள்ளது போன்றே குறளிலும் காணப்படுகிறது.

துணையாகும் என்பதாக அவ்வறவழி போற்றிக் கூறப்படுகிறது.

மறுபிறவி, வீடு பற்றிய கருத்து குறளில் இடம்பெறினும், ''நல்லொழுக்கத்தில் நிற்றலே உலக வாழ்வில் நன்மையைத் தரும், அந்நெறி தவறுதல் (ஒழுக்கக் கேடு) உலக வாழ்வில் கேட்டினையே தரும்'' என்னும் இயல்பான இந்த அறக்கொள்கை சீன அறநூல்களில் விளக்கப்பட்டுள்ளது போன்றே குறளிலும் காணப்படுகிறது. அறச்செயலுக்கு மனிதன் இறந்த பின்னும் பயன் உண்டு என்னும் ஊதியம் காட்டும் கொள்கையோடு, உலகியல் வாழ்வில் அடையும் நன்மையை உறுதிப்படுத்தும் கொள்கையும் வலியுறுத்தப்படுகின்றது.

பிராமண வைதிக மததருமத்திலும், பகவத்கீதையிலும், பவுத்த மதக் கொள்கையிலும் விளக்கப்படும் நல்லற ஒழுகலாறு (தருமம்) என்பது வாழ்வுக்குப் பின் விளையக்கூடிய பிற்பயன் என்னும் ஊதியக் கருத்துக்கு அடிமைப்பட்டுள்ளது போன்று, குறளின் 'அறநெறி ஒழுகலாற்றின் பயன்' அடிமைப்படுத்தப் படவில்லை.

நன்மையை, அந்த நன்மைக்காகவே, (மற்றவருக்கு நன்மையாவது தமக்கும் நன்மையே என்னும் உணர்வுடன்) வேறு பலன் கருதாது, செய்ய வேண்டும் என்னும் கருத்து குறளில் ஒளிர்கின்றது.

'நல்லனவெல்லாம் கடன் என்ப' என்னும் அறிவும், அவற்றைச் செய்தலால் விளையும் நல்லின்பத்துக்காக அவற்றைச் செய்வதுமே 'அறநெறிக் கடமை' என்னும் தெளிவும் பலப்பல குறட்பாக்களிலும் காணப்படுகிறது.

*''நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்*
*இல்லெனினும் ஈதலே நன்று''*

என்னும் வள்ளுவர் வாக்கு இந்தக் கோட்பாட்டிற்குச் சான்று.

பிறர்க்கு ஒன்று ஈவார் செய்யும் புண்ணியத்தால், மேலுலகில் நல்வாழ்வு பெறுவர் எனவும், பிராமணர்கட்கு அளிக்கும் தானதருமம், மறுபிறவியில் மேலான கதி அளிக்கும் எனவும், பிற நெறிகளில் பேசப்படுவதைக் கண்டே, மேலுலகும் மறுபிறவியும் இல்லாவிடினும், இவ்வுலக வாழ்வில் பிறர்க்கு உதவும் ஈதலே சிறந்த நன்மையாவது என்றார் வள்ளுவர்.

'ஏற்பது இகழ்ச்சி' என்னும் ஔவை அறவுரைக்கு மாறாக, சாதி தருமத்தின்படிப் பிச்சை ஏற்பதும் முறையே என்று பிறநெறிகளில் வழங்குவதும் மறுக்கப் பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார் சுவைட்சர். மேல் உலகம் இல்லை என்று ஒருவர் கருதினாலும், அப்பொழுதும் ஈதல் நன்மையானதே; நல்லநெறிதான் என்று கூறப்பட்டாலும், ஏற்றல் தீமையானதே.

*''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு*
*என்ஆற்றுங் கொல்லோ உலகு''*

உண்மையான ஈகைக் குணம், பிறரிடம் தோன்றும் இரக்கத்தால் கொடுக்கும் இயல்பாதலின், ஒரு பயனையும் எதிர் நோக்காது, தன்னை





படிப்பகம்

www.padippakam.com



**ஒருவன் உழைப்பினால் தேடிய பொருட் செல்வமெல்லாம், உரிய பிறர்க்கு உதவுவதாய நற்கடமையில் ஈடுபடுவதற்கே என்பதும், குறள் நெறியின்படி மனிதனின் கடமை பகவத் கீதையைப் போன்று, வருணசாதி அடிப்படையில் கடமை வரையறுக்கப்படவில்லை.**

அழித்துக் கொள்வது அன்றிக் கைம்மாறு எதையும் கருதாது மழைபொழியும் கொண்டலை ஒத்தது அவர்தம் ஈகை.

மாறாக வடமொழியில் எழுந்த பகவத் கீதையில், உலகியல் வாழ்க்கை, வருணதரும ஒழுக்கமுறைக்குப் பொருத்தமாக உள்ளதனால் உலக ஒழுங்கோடு (விதிக்கப்பட்ட தருமக் கட்டளைகட்கு ஏற்ப) செயற்பட்டு வாழ்வில் நாம் ஈடுபட்டுள்ளோம் என்று விளக்கி, அந்தச் செயல்முறை வாழ்வு, நம்மீது சுமத்தப்பட்ட ஒன்றாகவே, கசப்புடன் பேசப்படுகின்றது. ஆனால், குறளோ நல்லற ஒழுகலாற்று வாழ்க்கையே முறையானது (விரும்ப வேண்டியது) என்று எண்பிக்கிறது.


வாழ்வதற்கான உழைப்பும் அதில் பெறும் ஊதியமும், ஒரு மனிதனை நன்மை செய்யும் ஆர்வமும் ஆற்றலும் உடையவனாக உயர்த்துகின்றன.

*"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"*

இல்லறத்திலே ஈடுபட்டுப் பொருள் ஈட்டிக் காத்து வாழ்வதெல்லாம், வருவிருந்தைப் போற்றி உண்பித்து, மற்றவர்க்கு ஈவதற்கேயாகும்' என்பதும்,

*"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"*

ஒருவன் உழைப்பினால் தேடிய பொருட் செல்வமெல்லாம், உரிய பிறர்க்கு உதவுவதாய நற்கடமையில் ஈடுபடுவதற்கே என்பதும், குறள் நெறியின்படி மனிதனின் கடமை



பகவத் கீதையைப் போன்று, வருணசாதி அடிப்படையில் கடமை வரையறுக்கப்படவில்லை. அனைவருக்கும் பயனாகும் நல்லனவெல்லாம் கடமை எனக் காட்டப்பட்டுள்ளது குறளில்.

இந்தியாவின் நாவிலிருந்து - ஆரிய வடமொழி நூல்களில் இருந்து, ஒருவன் எதிர்பார்க்க முடியாத அளவு தனித்தன்மை உடைய செயற்பாட்டு வாழ்வில், கடமையைச் செய்வதால் தோன்றும் இன்பத்தைச் சிறப்பிக்கும் குறள்பாக்களே அந்நூலில் பொதிந்துள்ள உலகு, உயிர், வாழ்வு உடன்பாட்டுக் கொள்கையின் வலிமைக்குச் சான்றாவன.

*"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்"*

ஒருவரது முயற்சி (உழைப்பு) வெற்றிபெற (சூழ்நிலைத் தாக்கமாம்) விதி விடவில்லை ஆயினும், அந்த உழைப்பு அவரது உடல் பாட்டிற்கேற்ற பயனைத் தவறாது கொடுக்கும்.

*"இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்*
*ஒன்னார் விழையுஞ் சிறப்பு"*

தான் ஆற்றும் கடமையில் அடையும் துன்பமே தனக்கு இன்பம் என்று ஒருவன் மனங்கொள்வானாயின், தன் பகைவரும் விரும்பத்தக்க பெருமை வந்து சேரும்.

புத்தரைப் போன்றும், பகவத்கீதை கூறுவது போன்றும், உலகியல் வாழ்வின் இன்ப துன்பங்களினின்றும், உள்ளத்தாலாகிய விடுதலையையும், பிறரிடம் வெறுப்புக் கொள்ளாத அன்பு நிலையையும் திருக்குறளும்



படிப்பகம்

www.padippakam.com



**உலகத்தில் தோன்றியுள்ள இலக்கியங்களில், நாம் காணும் இந்த அளவு (அறவுரை) மெய்யுணர்வு மேலோங்கும் மூதுரைத் தொகுப்பு வேறொன்றும் இல்லையென்றே கூறலாம்.**

விரும்புகிறது. புத்தரைப் போன்று குறளும் உயிர்க்கேடும் (துன்புறுத்தலும்) கொலையும் கூடாதெனவும் விதிக்கின்றது. இவ் வகையில், உலகமும் வாழ்வும் பொய் (மாயை) என்னும் எதிர்மறைக் கொள்கையில் எழுந்த ஒழுகலாற்று முடிவுகளை எல்லாம் குறள் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த உள்ளத்து உணர்வாகிய விடுதலையை மட்டுமேயன்றி, எந்நாளும் செயற்படும் உயிருள்ள 'அன்பு' நெறியையும் சிறப்பாக ஒளிரச் செய்துள்ளது.

*''அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு''*

அன்புணர்ச்சி இல்லாத ஒருவன் எல்லாவற்றையும் (பிறர்க்குரிய வற்றையுங்கூட) தனக்கே உரித்தாகக் கருதுகிறான். மாறாக அன்பால் இரக்கம் கொள்பவர் தம் எலும்பையும் பிறருக்கு உரிமை உடையதாக்வே கருதி வழங்குவர்.

*''அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரந்தளிர்த் தற்று''*

உள்ளத்திலே அன்பு என்னும் உணர்ச்சி மலராதவன் வாழ்க்கையானது, வலிய பாலை நிலத்திலே, பட்டுப்போன மரம் துளிர்க்காதது போன்று மடிந்த தன்மையதாய் இல்லாததாகும்.

*''புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை*
*அகத்துறுப்பு அன்பி லவர்க்கு''*



உடம்பின் உள்ளுறுப்பான உள்ளத்தில் நிலவவேண்டிய அன்பு இல்லாதபோது, உடம்பின் புறத்துறுப்பான மற்றவை எல்லாம் என்ன நன்மையைச் செய்யும்? அவற்றால் பயனில்லை என்பதாம்.

*''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலிற் பெரிது''*

தமக்கு விளையக்கூடிய ஊதியத்தைக் கருதாது ஒருவர் செய்த உதவியின் சிறப்பை ஆராயுமிடத்து அதன் உயர்வு கடலினும் பெரியதாம்.

*''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி''*

ஏழை ஒருவனை உள்நின்று வருத்தும் பசிக் கொடுமையை நீக்குதலாகிய கடமை ஒன்றே, பொருளுடைய ஒருவன் அதனைப் பாதுகாத்து வைக்கும் ஒப்பற்ற காப்பிடம் ஆகும்.

*''அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
*பூரியார் கண்ணும் உள''*

பிறர் மீது சுரக்கும் அன்புணர்ச்சியே ஒருவன் பெறக்கூடிய நன்மைகளுக்குள் எல்லாம் மேலான நன்மையாம் - பொருட்செல்வம் அன்பற்ற, இழிஞரிடமும் உள்ளதாவது கண்கூடு.

இவற்றால் மன்பதை வாழ்வு சிறத்தற்குரிய தெளிவான நல்லாற்றில் நிற்றற்கு வேண்டிய குறிக்கோளைத் திட்டவட்டமாகத் தீட்டிக் காட்டுகிறது திருக்குறள்.

மனிதன் தனக்கும் பிறருக்குமாகவும் (உலகத்துக்காகவும்) மேற்கொள்ள



படிப்பகம்

www.padippakam.com



**உடல் அழுக்கை நீக்கித் தூயதாக்குதல் எளிதிலே இயல்வதாம். உள்ளத்து அழுக்கற்றித் தூயதாக்குதல் பொய்யாமை ஒன்றாலேயே இயல்வதாம்.**

வேண்டிய ஒழுகலாற்றைக் குறித்து எழுகின்ற பல்வேறு கேள்விகளுக்கு, குறள் அளிக்கும் விடைகள் பண்பினால் உயர்ந்த நோக்கமும், நல்லறிவும் பூண்டவை.

உலகத்தில் தோன்றியுள்ள இலக்கியங் களில், நாம் காணும் இந்த அளவு (அறவுரை) மெய்யுணர்வு மேலோங்கும் மூதுரைத் தொகுப்பு வேறொன்றும் இல்லையென்றே கூறலாம்.

இந்த முடிவிற்குச் சான்றாக அவர் மேலும் எடுத்துக்காட்டும் குறட்பாக்கள் இவை.

*"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடைய யான்கண் படின்"*

பயனுள்ள பழமரம் ஊர் நடுவே வளர்ந்து பழுத்து நிற்றலை ஒத்தது. சமுதாயத்திற்கு (பிறர்க்கு) உதவும் நல்லுணர்ச்சியுடையானிடம் சேர்ந்த செல்வம்.

*"அருள் என்னும் 'அன்புஈன் குழவி' பொருள்என்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு"*

அன்புணர்ச்சி கனிதலால் எவ்வுயிரிடத்தும் தோன்றும் இரங்குதலாகிய அருள் என்னும் குழந்தை - பொருட் செல்வம் என்னும் வளர்ப்புத் தாயால் வளர்வதாகும்.

*"அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்*
*பெற்றாள் தமியள்மூத் தற்று"*

வறியவர்கட்கு எந்த அளவும் உதவாது நின்று ஈதலால் மகிழ்ச்சியுற அறியாதவன் காத்த பொருள், மிகுந்த அழகுடைய பெண்ணாள், கேள்வன் இன்மையால் அந்நலத்தைத் துய்த்து மகிழ்வானுமின்றித் தானும் அதனால் இன்பப் பயன் காணாமையின் தனியே முதிர்ந்தவளாய் இளமை நலந்தானும் வீணே தொலையப் பெற்றதனை ஒக்கும்.



*"உதவி வரைத்தன்று உதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து"*

ஒருவருக்குச் செய்யப்பட்ட உதவியின் அளவு அதன் பொருள் அளவு அன்று, செய்தார் புகழ் அளவும் அன்று. அவ்வுதவியைப் பெற்றவர்தம் நல்ல பண்பாட்டின் மேலான நன்றியுணர்வின் அளவேயாகும்.

*"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து*
*இன்சொல னாகப் பெறின்"*

இல்லத்திலே உறைந்து, பிறர்க்கு ஒன்றைக் கொடையாக கொடுத்தலினும், (உணவு, உடை, உறையுள் அளிக்கச் செய்யும் செயலினும்) தாமே வாடியவர் தம் முகத்தை இனிதாக நோக்கி, அன்பான உரை வழங்குவானாதல் சிறந்த பயனுடையதாம்.

*"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்*
*பகலும்பாற் பட்டன்று இருள்"*

நண்பருடன் கலந்து மகிழ்தலைச் செய்யமாட்டாதவர்க்கு இந்த விரிந்த நானிலமும், ஒளியுடைய பகலைப் பெற்றதாகாது, இருளே சூழ்ந்ததாகும். (பகல் ஒளியே காணார் என்பதால், உலகத்தில் அவர் வாழும் வகையான நன்மை ஒன்றும் அவர்க்குப் புலனாகாது என்பதாம்) நல்லதும் கெட்டதுமுடைய உலகில் கெடுதலையே காண்பவராவார் (ஒளி, நன்மை; இருள், தீமை).



படிப்பகம்

www.padippakam.com



*"விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்*
*அழுக்காற்றின் அன்மை பெறின்"*

எப்படிப்பட்டவரிடத்தும் அவரது ஆக்கங்கண்டு பொறாது அழுங்குதலைச் செய்யாதிருக்கும் நல்ல உள்ளம் அமையுமானால், ஒருவர் பெறத்தக்க சிறந்த பேறுகளுள் அதற்கு ஈடான நன்மை வேறில்லை.

*"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று"*

பிறர் செய்த நன்மையை மறந்துவிடும் இயல்பு அவருக்கே நன்மையாகாது (நாளடைவில் தீதாகும்). பிறர் செய்த நன்மையல்லாத தீதானவற்றை அப்பொழுதே மறந்துவிடுதல் அவருக்கே நன்மையாம். (அவர் உள்ளம் அத்தீமையையே எண்ணிப் பழிவாங்கும் குற்றத்தில் ஈடுபடுபடாமலும், அஃதியலாத போது அதனையே எண்ணிக் கவலாமலும், தன் இயல்பான கடமையை மேற்கொண்டு நன்கு வாழப் பிறர் செய்த தீமைகளை மறத்தல் வேண்டும்.)

*"துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்"*

தமக்குரிய வரம்பு கடந்து பேசுபவர் கூறும் கொடிய சொற்களையும் (அதனைக் கேட்டுணர்ந்து) உளமாரப் பொறுத்துக் கொண்டு மறப்பவர், உலக வாழ்வினில் பற்றற்றுத் துறந்தவர்தம் உள்ளத் தூய்மையினும் உயர்ந்த தூய்மை உடையவராவார். தன்னைக் கடியும் உரிமை பெறாதவன். தன்னைக் கூறினான் என்னும் சினம் அடங்கப் பொறுத்தவர்தம் உள்ளத்தின் பண்பட்ட இயல்பு. துறந்தார் உளவியல்பினும் உயர்ந்தது என்பதாம்.

*"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும்"*

தனக்கு இன்பமாவதையே நாடும் வேணவாவினை அடக்குதல் ஒருவரை மனநிறைவு காணச் செய்தலால் அமரருள் ஒருவராக்கும், மனவேட்கை அடங்காத தன்மை நீங்காத இருளிலே (துன்பத்திலே) ஒருவரை ஆழ்த்திவிடும்.

*"இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்*
*துன்பம் உறுதல் இலன்"*

தனக்கு இன்பமாவதொன்றையே விரும்பும் இயல்பில்லாதவனவாய், துன்பமும் இயல்பே என்று கருதுபவன், துன்பம் வரினும் அதற்கு வருந்துதல் இலனாவான்.

*"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை*
*வாய்மையால் காணப் படும்"*

உடல் அழுக்கை நீக்கித் தூயதாக்குதல் எளிதிலே இயல்வதாம். உள்ளத்து அழுக்கற்றித் தூயதாக்குதல் பொய்யாமை ஒன்றாலேயே இயல்வதாம்.

*"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை உடைத்திவ் வுலகு"*

தனது கடமை தவறாமல் பிறரிடத்துக் குற்றம் கண்டவிடத்தும் இரக்கங் காட்டிப் பொறுக்கவல்லார்க்கு, உலகோர் கடமைப்பட்டவராவர்.

*"பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்*
*தகைமைக்கண் தங்கிற்று உலகு"*

தன்னிடத்தே பகைமை பாராட்டுவோரையும், நண்பரைப்போல் கருதி நெறியோடு நிற்கவல்ல குணமுடையாரது பெருந்தன்மையினாலேயே உலகோர் வாழ்வு உண்மையாகிறது.

*"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்*
*கீழல்லார் கீழல் லவர்"*



மேட்டுக் குடியினராயிருந்தும் (மேல் சாதியாயினும்) உயர்ந்த பண்பில்லாதவர் உயர்ந்தவராகார். வாழ்க்கையில் தாழ்நிலையினராயிருந்தும் தாழ்ந்த

www.padippakam.com



குணமற்றவர் இழிந்த குலமக்கள் ஆகமாட்டார்.

*"பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா*
*பிற்பகல் தாமே வரும்"*

பிறருக்குக் கேடானவற்றை ஒருவன் ஒருநாட் காலையில் செய்வானேயானால், அவனுக்கு, அந்நாள் மாலையே தன்னியல்பால் துன்பம் வந்து சேரும்.

*"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா*
*ஊக்க முடையா னுழை"*

சோர்வு அடையாத உள்ளத்து ஆர்வ முடையவன் முயற்சியுடையவனாகலின், அவனிடத்து நன்மை யாவையும் வழி கேட்டுச் சென்றடையும்.

*"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்"*

தன் குடியுயர முயற்சிப்பேன் என்னும் உறுதி கொண்டவனுக்குத் தெய்வமும் (விதியும்) மடியை (துணியை) வரிந்து கட்டிக்கொண்டு தானாகவே துணைசெய்ய முற்படும்.

தனக்குக் காலம் கைகூடி வரவில்லை என்று பிறரெல்லாம் குறைப்பட்டிருக்கும் வேளையிலும் முயற்சியுடையனாய் உழைப்பவனுக்கு எல்லாம் கூடிவரும் என்பது கருத்து. 'தெய்வச் செயல்' என்னும் மனித ஆற்றலைக் கடந்த இயற்கை விதி துணையாகும் அளவும், ஊக்கமுடையவன் இகழ்ச்சி கருதாது விடாமுயற்சி உடையவன் ஆவான் அன்றோ!

*"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்*
*தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று"*

சூதாட்டத்தில் ஈடுபடுபவன் வெற்றி பெற்றானாயினும் ஒருவன் சூதினை விரும்புதலாகாது. பெற்றதொரு வெற்றியும் தூண்டிலில் கிடந்த இரையை விழுங்கிய மீன், அத்துடன் மறைந்திருந்த முள்ளினையும் விழுங்கிய தன்மையை உடையது.

வென்ற அப்பொருளே ஒருவனைச் சூதிலே சிக்கவைத்துப் பின்னர் அவன் தன்பொருளை இழத்தல் அன்றித் தன்னைக் காத்துக் கொள்ளற்கும் இடமளிக்காத தன்மையதாம். சூதில் ஒருவன் எய்திய வெற்றியே அவனை அழித்தற்கு ஏதுவாகும் இயல்புடைமை யினாலேயே அதற்குச் 'சூது' என்னும் பெயர் உளதாயிற்றுப் போலும்!

*"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்*
*பின்நீர பேதையார் நட்பு"*

சான்றாண்மைப் பண்பால் நீர்மை யுடைய பெரியோர்களது நட்பு, பிறைமதி நிறைவுடையதாகும் நிலையை ஒத்து வளரும், அறிவினால் சிறுமையுடையார்தம் நட்பு, முழுமதியின் பின்நிலை ஒப்ப நாளும் தேயும். நட்பு தேய்தலாவது, அதன் பண்பாலும், பயனாலும் குன்றும் என்பதாம்.

*"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து"*

உழவுத் தொழிலை மேற்கொள்ளாது பிறவகை முயற்சி செய்வாரை எல்லாம் தாங்கி நிற்றலான், உழுதொழில் செய்வார் உலகம் என்னும் தேருக்கு அச்சாணி போல்வார். உலகத்தாருக்கெல்லாம் உணவு வழங்கிடலால் வாழ்வளிக்கும் மேலோன் அவன் என்றும் கொள்ளலாம்.

இத்தனைக் குறட்பாக்களையும், அவற்றின் கருத்து மேன்மையையும் கண்டு தேர்ந்து வியந்து பாராட்டிய சுவைட்சர் குறள் நெறியின் தனிச்சிறப்பு இதுவென உணர்த்துகிறார்.

பிராமணீயம், புத்த சமயம், பகவத்கீதை காட்டிய இந்து தருமம் ஆகியவற்றில், உலகமும் உயிர் வாழ்க்கையும் உண்மையே என்னும் இயற்கை சார்ந்த, நல்லறக் கொள்கை ஒரு சிறிதும் காணப்படா திருந்தும், கிறித்தவ





படிப்பகம்

www.padippakam.com



ஆண்டுத் தொடக்க நாளிலேயே இந்திய மக்களிடையே அக் கொள்கை நிலவி வந்திருக்கிறது என்பது இதனால் விளங்கும்.

உழைத்து வாழும் கீழ்க்குடியில் பிறந்து, அம்மக்களோடு கலந்து வாழ்ந்து அவர்தம் உணர்ச்சியுடன் தாமும் ஒன்றித் தெளிந்து, அறநெறி கண்ட ஆன்றோர்களின் பக்திப் பாடல்களால் இக்கொள்கை 'இந்து சமயம்' சார்ந்த நூல்கள் பலவற்றில் காலப் போக்கில் ஊடுருவி இடம் பெற்றுள்ளது என்பதும் புலனாகின்றது.

மேலும் சுவைட்சர் கூறுகிறார்:

திருக்குறளின் இறுதிப் பகுதியாகக் காணப்படும், காமத்துப் பாலில் உள்ள 250 பாக்களிலும், உலகியல் காதல் சிறப்பாக விவரிக்கப்படுகிறது. உலகம் நிலையற்றதெனத் துறவைப் போற்றுபவர்கட்கு இவை கலக்கம் விளைவித்தமையின், இது இறைவன் மேல் உயிர் கொள்ளும் காதலையே, உள்ளுறைப் பொருளாக அமைத்துப் பாடியது எனப் பிற்காலத்தில் கற்பிக்கலாயினர். சாலமன் பாடிவைத்த பாடல்கட்கும் கிறித்தவ சமயவாதிகள் இவ்வாறே விளக்கம் கூறிக் கொண்டனர். இது தொன்னாட்களில் மணவிழாக்களில் பாடப்பட்டு வந்ததெனினும், விண்ணுலக இறைவனுக்கும், மண்ணுலக உயிருக்கும் உள்ள உறவையே அப்பாட்டு கற்பனையாகக் கூறுகிறது என்று ஓர் விளக்கம் கற்பித்துப் பழைய ஏற்பாட்டினில் சேர்த்து அதன் பகுதியும் ஆக்கப்பட்டு விட்டது.

(குறிப்பு: உலக வாழ்வு துன்பமயமானது. அதனின்றும் விடுபடப் பற்றற்ற உள்ளம் வேண்டும். பற்று அறுத்திடும் வழியே துறவு - என்று கொண்ட சமயத்தினர், இறைப பற்று வளர்ந்த நிலையில் இறை பக்தியே நாயகன் நாயகி பாவத்தில் காதல் உணர்வு வடிவிலும் வளர்வதாகும் என்று அடியார் பாடல்களைக் கொண்டு பல சான்று காட்டுவர். மேலும் சிறந்த ஞானிகள் எல்லாம் துறவு மேற்கொண்டிருப்பர் என்பதும் அவர்கள் கருத்து. அதனால் திருக்குறள் காமத்துப்பாலும் இயற்கையான தலைவன் - தலைவி காதலாக இருக்க முடியாது என்று தவறான விளக்கம் கூறுவாராயினர். நாயகன் - நாயகி பாவம் எழுந்ததே இந்த உயிர் இயற்கைக் காதலில் இருந்தே என்பதை ஏனோ மறுத்தனர்! மேலும் உலகியல் வாழ்வில் அறம் தழைக்கவும், பொருள் பயனால் சிறக்கவும், உயிர் தழைக்கவும், உணர்வு பண்படவும், தன்னலம் மறையவும், சமுதாய ஒப்புரவு மேம்படவும் மானிடக் காதலே ஏதுவாவதை அவர்கள் உள்ளம் கொண்டிலர் எனலாம். மானிட வாழ்வில் ஒவ்வொருவரும் நெறி தவறாது ஒழுகவேண்டும். அதன் மூலமே அன்பைப் பெருக்கி இன்புற்று அமர்ந்த வாழ்வு எய்தலாம் என்பதை வலியுறுத்திக் கூறவந்த திருவள்ளுவர், இயற்கைக் காதலை ஒதுக்கவும் கூடுமோ? காமத்துப் பாலில் தூய காதலை விவரித்ததன் மூலம், திருவள்ளுவர் உலகு, வாழ்வு பற்றிய உடன்பாட்டுக் கொள்கையினர் என்பது மேலும் தெளிவாகும்).

திருக்குறளைக் கடந்த நூற்றாண்டில் ஜெர்மன் மொழியில் கார்ல்கிரவுல் மொழிபெயர்த்திருந்தார். அந்த மொழி பெயர்ப்பு நூலைக் கொண்டே இந்த அளவு குறளின் குறிக்கோள் மேன்மையையும், மெய்யறிவுத் திறத்தையும் சுவைத்துப் பாராட்டும் சுவைட்சர், அதன் தமிழ் வடிவிலான மூலநூலையே கற்க நேரிட்டிருக்குமானால், அந்நூலில் மேலும் எவ்வகைச் சிறப்புக்களைக் கண்டிருக்கக் கூடுமோ என்ற எண்ணம் எவருக்குத் தான் எழாது?



www.padippakam.com



# வள்ளுவம்: சில பின்னணிச் செய்திகள்

க.ப. அறவாணன்



திருவள்ளுவரின் தொடக்கப் பெயர் திருவள்ளுவர் அன்று. தமக்குத் தாமே திருவள்ளுவர் எனப் பெயர் சூட்டிக் கொள்ளும் பழக்கம் திருவள்ளுவர் போன்ற மாமேதையிடம் இருந்திருத்தல் முடியாது. அன்றியும், திருவள்ளுவரையும், திருக்குறளையும் பாராட்டி எழுதப் பெற்ற திருவள்ளுவமாலை 54 வெண்பாக்களை உடையது. இதில் ஒன்று குறள் வெண்பா, ஏனையவை 4 அடி வெண்பாக்கள். இவற்றுள் 46 பாக்கள் வள்ளுவர் என்றே அவர்தம் பெயரைக் குறிப்பிடுகின்றன. ஓரிரு சான்றுகள் வருமாறு:

*வள்ளுவனாய்த் தந்துரைத்த (4)*
*வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா (5)*
*வள்ளுவன் என்பான் (8)*

பரிமேலழகரும் தம் உரைப்பாயிரத்தில் வள்ளுவர் எனும் பெயரையே முன் நிறுத்துகிறார். 'வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருள்' என்பது பரிமேலழகரின் உரைச் சிறப்புப்பாயிரம்.

வள்ளுவர் எழுதிய தம்முடைய நூலுக்கு அவர் வைத்த பெயர் முப்பால் என்பதாகவே இருந்திருத்தல் வேண்டும். திருவள்ளுவ மாலையில் இடம் பெற்ற 15 பாடல்கள் என்றே சுட்டுகின்றன, வேறு சில 'குறள்' என்று சுட்டுகின்றன.

மிகமிகப் பிற்காலத்து எழுதப் பெற்ற கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைப் பட்டயங்கள் ஆகியவற்றில் திருவள்ளுவர் பற்றிய குறிப்புகள் வந்துள்ளமை அண்மையில் கண்டறியப் பெற்றுள்ளது. (செ. இராசு, ஆவணங்களில் திருவள்ளுவரும் திருக்குறளும், வள்ளுவம், நவம்பர் - திசம் 1999).

அவற்றிலும் வள்ளுவர் முப்பால் என்றே பெயர்கள் குறிக்கப்படுவது சுட்டத்தக்கது.

*இன்சொல்லால் இனிது அளித்து வள்ளுவர் மரபு காத்து*
*முப்பால் மொழியின் படிக்கு*
- பழனி வீரமுடியாளர் செப்பேடு





படிப்பகம்

www.padippakam.com



திரு எனும் சிறப்புச் சொல் திருக்குறளை ஒட்டிப் பெற்ற புனிதத் தன்மை பிற்காலத்தில் சமஸ்கிருதம் உள்ளிட்ட பிற மொழிகளுக்கும் ஸ்ரீ என உருமாறிப் பரவி இருக்க இடம் இருக்கிறது.

*வள்ளுவர் மரபு காத்து*
*முப்பால் மொழியின் படிக்கு*
*அல்லவை கடிந்து*
*நல்லவை நாட்டி*

- பல்லடம் செப்பேடு.

*வள்ளுவர் உரைத்த முப்பால்*
*மொழியின்படியே*
*செங்கோல் நீதி வழுவாமல் நாட்டி*

- பூந்துறை நாட்டார் மேலோலை
கி.பி. 1617.

*வள்ளுவர் உரைத்த முப்பால்*
*மொழியின்படியே*
*அறமே அறிந்து அல்லவை கடிந்து நல்லவை நாட்டி*

- காரையூர்ச் செப்பேடு.

மேற்கண்ட குறிப்பில் இருந்து தெரிய வருவன:

***1. மிக மிகப் பிற்காலம் வரை வள்ளுவர் என்ற பெயரும், முப்பால் என்ற பெயரும் முதன்மைப் பழக்கத்தில் இருந்து வந்துள்ளன.***

***2. பிற்காலத்து ஆளுவோரும், சான்றோரும் வள்ளுவ முப்பாலை முன்னிறுத்தும் பழக்கம் இருந்து வந்துள்ளது.***

காலப்போக்கில் வள்ளுவர் நூலின் அருமையை அறிந்த அறிஞர் பெருமக்கள் திரு எனும் முன்னொட்டைச் சேர்த்திருத்தல் வேண்டும். அதன் பின்பே திருவள்ளுவர்; திருக்குறள் என்ற வழக்காறுகள் வந்திருத்தல் வேண்டும். தமிழில் எழுதப் பெற்ற மிகச் சிறந்த நூலுக்கும், நூலை எழுதிய மிகச் சிறந்த அறிஞருக்கும் திரு எனும் ஒட்டு, பெயர் முன்பு சேர்க்கப் பட்டதால் திரு எனும் சொல்லே ஒரு பெருஞ்சிறப்பை எய்தி இருத்தல் வேண்டும். ‘திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்’ என விரிவாகப் பேராசிரியர் திருக்கோவையாருக்கு உரை எழுதுவதும் இங்கே கருதத்தக்கது. திருக்குறளை ஒட்டித் திரு என்ற சொல் பெற்ற சிறப்பின் பின் விளைவே தேவாரம் முதலானவை கல்வெட்டுகளில் முதன் முதலாகத் திருப்பதிகம் எனப் பாராட்டப் பெற்றன. சைவத் தேவாரங்கள் அடங்கிய தொகுப்பு திருமுறை எனக் குறிக்கப்பட்டதும், சைவ நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடப்பெற்ற தலங்கள் திரு என முன்னொட்டுப் பெற்றதும் ஆகும்.



திரு எனும் சிறப்புச் சொல் திருக்குறளை ஒட்டிப் பெற்ற புனிதத் தன்மை பிற்காலத்தில் சமஸ்கிருதம் உள்ளிட்ட பிற மொழிகளுக்கும் ஸ்ரீ என உருமாறிப் பரவி இருக்க இடம் இருக்கிறது.

தமிழ் இன வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் திருவள்ளுவரே தம் சமகாலத் தமிழ்ச் சமுதாய, அரசியல், பொருளியல் போக்குகளை எதிர்த்தவர் ஆதல் வேண்டும். தம் கால மானுடர் தமிழர் மீது திருவள்ளுவருக்குச் சீற்றம் மிகவாக இருந்துள்ளது. அவர்தம் கோபம் கயமை எனும் (108) அதிகார வழித் தெள்ளெனப் புலப்படுகிறது. அதனுடன், மரம் என்றும் மிருகம் (விலங்கு) என்றும் அவர் திட்டுவதாலும் தெளிவாகிறது.

*மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ*
*டியைந்துகண் ணோடா தவர் 576*

*உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்*
*மரமக்க ளாதலே வேறு 600*

*அரம்போலும் கூர்மைய ரேனும்*
*மரம்போல்வர்*
*மக்கட்பண் பில்லா தவர் 997*

www.padippakam.com



**திருவள்ளுவருக்கு இன்பம் முன்னிறுத்தப்படுவதில் உடன்பாடு இல்லை. எனவேதான், இம்முறையைத் தலைகீழாக மாற்றி அறம் பொருள் இன்பம் என அமைத்துள்ளார். இவ்வரிசையைத் திருவள்ளுவரே திட்டமிட்டுச் செய்தல் ஆதல் வேண்டும்.**

படிக்காத மக்களை 'விலங்கு' என்று சாடுகிறார்.

*விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்*
*கற்றாரோ டேனை யவர்* 410

எனவே, இவரை முதல் எதிர்ப்பாளர் (PROTESTANT) எனக் குறிக்கலாம். சமகாலத் தமிழர்கள் பின்பற்றிய நெறிமுறைகளைத் திருவள்ளுவர் எதிர்த்தமையைப் பின்வருமாறு பட்டியல் இடலாம்:

1. கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழ்நாட்டில் தமிழர் சமயம் பரவி இருந்தது. இந்நிலையில் வட இந்தியாவில் இருந்து ஆரிய மதமும், தொடர்ந்து ஆரியத்திற்கு எதிரான சைன, பௌத்த மதங்களும் தமிழ்நாட்டில் பரவின. தமிழரிடையே இச்சமயங்கள் தமிழர் சமயத்தை மறுக்கவைத்தன, புதிய சமயங்களைப் பின்பற்றுவதில் பிளவுகளை ஏற்படுத்தின. சமயப் பகைமையும், மக்களிடையே சமயத்தை முன்னிறுத்திய பூசல்களும் நிகழ்ந்தவண்ணம் இருந்தன. இச்சூழலில், திருவள்ளுவர் சமயக் காழ்ப்பை ஒழிக்க விரும்பி இருத்தல் வேண்டும். எனவேதான் கடவுள் வாழ்த்தில் சமயச் சார்பு எதனையும் வெளிப் படையாகப் புலப்படுத்தவில்லை. அனைத்துச் சமயங்களுக்கும் வேறான வழிபாட்டை மட்டும் முன்னிறுத்துகிறார். சுருக்கமாகக் கடவுளை உடன்படுகிறார்; சமயங்களை உடன்படவில்லை.

2. ஆரியமதப் பரவுதலால் தொழில் அடிப்படையில் பிரிந்து இருந்த தமிழர்கள் வருண அடிப்படையிலும், சாதி அடிப்படை யிலும் பிரியத்தொடங்கினர்; வேறுபாடு காணத்தொடங்கினர். இதை ஒழித்துக் கட்டவே,

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்*
- பெருமை 972

*மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்*
*கீழல்லார் கீழல் லவர்*
- பெருமை 973

எனத் திருக்குறளை யாத்தார். அதனுடன் கல்வி மூலம் (அதிகாரம் 40) மேன்மை, கீழ்மை என்ற பிறப்பு அடிப்படையிலான வேறுபாடு ஒழிக்கப்பட்டுவிடும் என்று வற்புறுத்தினார்.

*மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்*
*கற்றார் அனைத்திலர் பாடு*
- கல்வி 409

3. சங்ககால இலக்கியங்களைக் குறிப்பாக அகப்பாடல்களைப் பயிலுகிறபோது தமிழர் ஆண் பெண் அகஇன்ப வாழ்வில் மேலோங்கி இருந்தனர் என்று கருத வேண்டியுள்ளது. திருவள்ளுவருக்கு இது உடன்பாடு அன்று என்பது மெய்உணர்தல் எனும் அதிகாரத்தில் மொழிந்துள்ள கருத்தால் புலப்படுகிறது.

*காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்*
- மெய்யுணர்தல் 360





படிப்பகம்

www.padippakam.com



**திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் எதிர்ப்பு இருந்ததைத் திருவள்ளுவர் தொடர்பாக வழங்குகின்ற தொன்மக் கதைகளும் வற்புறுத்துகின்றன.**

பண்டைய தமிழர் வாழ்க்கை அகம், புறம் என இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தது. இன்பம் தொடர்பான அகம் முன்னிறுத்தப் பட்டிருந்தது. பின்னாளில் இவை இரண்டும் விரிவடைந்து இன்பம், பொருள், அறம் எனத் தொல்காப்பியரால் நிரல்படுத்தப்பட்டன.

*இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை*

- களவியல் 89

இங்கும் இன்பம் முன்னிறுத்தப் பட்டிருந்தது. திருவள்ளுவருக்கு இன்பம் முன்னிறுத்தப்படுவதில் உடன்பாடு இல்லை. எனவேதான், இம்முறையைத் தலைகீழாக மாற்றி அறம் பொருள் இன்பம் என அமைத்துள்ளார். இவ்வரிசையைத் திருவள்ளுவரே திட்டமிட்டுச் செய்தல் ஆதல் வேண்டும்.

தான் செய்த வரிசை தமிழரைப் பொறுத்த அளவிற்கு மிகச் சரி எனுங் கருத்துத் துலங்க திருவள்ளுவர்

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல* 39

எனத் தெளிவுபடுத்தலும், அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தைத் (4) தனியாக வகுத்திருத்தலும் கருதத்தக்கவை. வரைவின் மகளிர் (92) எனும் அதிகாரத்தின் மூலம் சங்ககாலத்தில் இயல்பாகப் பின்பற்றப்பட்டு வந்த பரத்தமையைக் கடிதலும் இங்கே சுட்டிக் காட்டத்தக்கது. இன்பத்திற்கு என ஒரு தனிப் பாலையும், சிக்கனத்திற்குப் பெயர் போன திருவள்ளுவர் 250 திருக்குறள் பாக்களையும் எழுதி யிருந்தும், சங்க காலத்தில் கருதப்பட்ட பரத்தையர் பிரிவை இணைக்காதது சேர்த்துக் கருதத்தக்கது. சங்ககால அதிஇன்ப வாழ்விற்குத் திருவள்ளுவர் முதல் எதிர்ப்பாளர் என்பது தெளிவு.



திருவள்ளுவர் புதுவதாகச் சேர்த்த ஓர் அதிகாரம் பிறனில் விழையாமை (15) ஆகும். திருவள்ளுவருக்கு முன்பு இக்கருத்து தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்டதாகத் தெரியவில்லை. திருவள்ளுவர் முன் எடுத்துப் பேசுவதற்குத் தனிக் காரணம் இருத்தல் வேண்டும்.

4. திருக்குறளில் புதுவதாக இடம் பெற்ற கருத்துருக்களுள் பிறனில் விழையாமை என்பது மிக முதன்மையானது. திருவள்ளுவத்துக்கு முன்பு இக்கருத்து சங்க இலக்கியத்துள் எங்கும் இடம் பெறவில்லை என்பது வினாவுக்கு உரியதாகவும், வியப்புக்கு உரியதாகவும் இருக்கின்றது. முதன் முதலில் இக்கருத்து ஏன் எடுத்து ஓதப்பெற்றது என்பது வினவத் தக்கது.

கிருத்துவம், பௌத்தம் ஆகிய சமயங்களின் வரலாறு விடையளிக்கிறது. ஜெர்மனியைச் சார்ந்த மார்ட்டின் லூதரால் (1483 - 1546) அதுவரை நடைமுறையில் இருந்த கிருத்துவத்துக்கு எதிர்க்குரல் எழுப்பப்பட்டது. அப்போதைய கிருத்துவம் திருமணம் செய்து கொள்ளாது துறவியரைக் கொண்டும், இத்தாலி ரோம் நகரில் உள்ள போப்பைத் தலைமை யாகவும் கொண்டு இயங்கியது. துறவியருடைய ஒழுக்கநெறி பற்றிக் கடுமையாகச் சாடப்பட்டது. இன்னொரு வரின் மனைவியரோடும் ஆங்காங்கே துறவியர் கள்ள உறவு கொண்டிருந்தனர். இது கண்டுபிடிக்கப்பட்டது. பிறனில்


படிப்பகம்

www.padippakam.com




**இம்மட்டுமின்றித் திருக்குறள் ஆரிய வேதங்களுக்கும், ஆரிய நூல்களுக்கும் சமமானது அன்று, தாழ்வானது எனுங் கருத்தும் அக்காலத்துப் பரப்பப்பட்டது.**

விழைதல் பற்றிய பேச்சும் பைபிளில் இடம் பெற்றிருந்தது. பௌத்த சமயத் துறவியரிடமும் இதுபோன்ற போக்கு காணப்பட்டது. ஆரிய புராணக் கதைகளிலும், துறவியர்களின் ஒழுக்கக்கேடு இடம்பெற்றுள்ளது. கௌதம முனிவரின் மனைவியைத் தேவேந்திரன் பெண்டாடியது முதலாயவற்றைச் சுட்டலாம்.

திருவள்ளுவர் முதன் முதலாகப் பிறனில் விழைதலைப் பற்றிப் பேசுதற்குத் துறவியரால் ஏற்பட்ட அக்காலநிலைமை காரணமாக இருந்திருக்க வேண்டும்.

5. இரவு அச்சம் (107), கயமை (108), கள் உண்ணாமை (93), கொல்லாமை (33), சிற்றினம் சேராமை (46), சூது (94), புலால் மறுத்தல் (26), ஆள்வினை உடைமை (62), பெண்வழிச் சேறல் (91), வரைவின் மகளிர் (92) ஆகிய அதிகாரக்கருத்துகள் அனைத்தும் சமகாலச் சமுதாயத்தில் மக்களால் பின்பற்றப்பட்டு வந்த பழக்கவழக்கங்களை மறுதலிப்பன ஆகும். திருவள்ளுவர் சமகாலத்தை மறுதலிக்க மேற்கொண்ட கொள்கை ஒவ்வொன்றும் விரிவாக அவர் காலச் சமுதாயப் பின்னணியில் ஆராயத் தகுந்தவை.

திருக்குறள் ஆரிய சமயத்தால் எதிர்க்கப்பட்டதற்குத் திருவள்ளுவரின் சமகால எதிர்ப்புக் குரலே தலைமைக் காரணமாக இருந்திருத்தல் வேண்டும். திருவள்ளுவருக்கு முன்பு எழுதப்பட்ட தொல்காப்பியம் முதலான தனி ஆசிரியர் நூல்கள் அரசன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டிருக்க, திருக்குறள் எனும் பெருநூல் அரங்கேற்ற வாய்ப்பை இழந்தது தற்செயலான நிகழ்வு அன்று.



திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் எதிர்ப்பு இருந்ததைத் திருவள்ளுவர் தொடர்பாக வழங்குகின்ற தொன்மக் கதைகளும் வற்புறுத்துகின்றன.

தமிழ்ப் புலவர்கள் சங்கத்தில் அரங்கேற்றுவதற்குக் கொண்டுவரும் நூல்களை அவர்கள் படித்து விளக்கும்போது, சங்கப் புலவர்கள் கீழறையிலுள்ள சிலரைக் கொண்டு அவற்றை எழுதுவித்து, பிறகு அந்நூல்கள் சங்கத்திலும் உள்ளன என்று கூறி அவற்றை எடுத்துக் காட்டி, அன்னோரை அவமதித்து அனுப்பி வந்தனர் என்றும், அவ்வடாத செயலை ஒழிக்க வேண்டி இடைக்காடனாரும் ஆசிரியர் திருவள்ளுவனாரும் முறையே ஊசிமுறியும், திருக்குறளும் இயற்றிக்கொண்டு தமிழ்ச்சங்கத்திற்குச் சென்றனர் என்றும், அப்போது ஊசிமுறிப் பாடல்களைக் கீழறையிலிருந்தோர் தம் செவியுணர்வு கொண்டு எழுத முடியாமையால் சங்கப் புலவர்கள் தம் செயலில் தோல்வியுற்றனர் என்றும், பிறகு திருக்குறள் அரங்கேற்றப் பெற்றபோது அந்நூலாசிரியரோடொப்பச் சங்கப்புலவர்கள் வீற்றிருக்க இயலாமையால் சங்கம் அழிவுற்றதென்றும், எனவே திருக்குறள் அரங்கேற்றமே கடைச்சங்கம் வீழ்ச்சி எய்தியமைக்குக் காரணமாகும் என்றும் கூறுகின்றனர். அன்னோர் கொள்கைகள் வலுவுடையனவா என்பது ஆராயற்பாலதாகும்.

(டி.வி. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 250 - கி.பி. 600), பக். 10)



படிப்பகம்

www.padippakam.com



**திருவள்ளுவர் வேத விளக்கம் பாடியவர் அல்லர்; வேதத்தை எதிர்த்துப் பாடியவர் என்பதற்கு நூல் உள்ளே நிறைய சான்றுகள் உள்ளன.**

திருவள்ளுவர் காலச் சமுதாயத்தில் ஆரிய சமயம் மேலோங்கிய நிலையிலும், சைன, பௌத்த மதங்கள் அடுத்த நிலையிலும் இருந்திருத்தல் வேண்டும். சைன, பௌத்த மதங்களைச் சார்ந்திருந்த களப்பிரர் வீழ்ச்சி (கி.பி. 575இல்) பாண்டியன் கடுங்கோன் ஆட்சியில் ஏற்பட்டது. இவ்வீழ்ச்சியை ஒட்டி ஆரிய சமயமும், ஆரியத்தையும், ஆரிய வட மொழியையும் ஏற்றுக் கொண்ட தேவார, திருவாசகச்சமயமும் மேலெழுச்சி பெறலாயின. இவ்வெழுச்சியே பக்தி இயக்கம் எனக் குறிப்பிடப்படுகிறது. பக்தி இயக்கம் ஆரியச் சார்பானது என்பதால் திருவள்ளுவத்தை வரவேற்றுப் போற்றினதாகச் சான்றுகள் இல்லை. தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியபிரபந்தம் ஆகிய பக்திப் பாடல்களில் திருவள்ளுவம் எங்கும் போற்றிக் குறிப்பிடப்படவில்லை. மாறாக, திருக்குறளை ஓதுதல் செய்யக் கூடாத செயலாகக் கருதப்பட்டது. ஆண்டாள் எழுதிய திருப்பாவையில்

*'வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்*
*செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்*
*பையத் துயின்ற பரமன் அடிபாடி*
*நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாள்காலே நீர்ஆடி*
*மைஇட்(டு) எழுதோம் மலர்இட்டு நாம் முடியோம்*
*செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றுஓதோம்*
*ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி*
*உய்யுமா(று) எண்ணி உகந்து ஏல்ஓர்*
*எம்பாவாய்'.*

எனும் வரி இடம் பெற்றுள்ளது. குறளை எனவரும் சொல் திருவள்ளுவர் செல்வாக்குப் பெற்ற பிற்காலத்தில் புறம் கூறுதலைக் குறிப்பதாக உரை விளக்கம் தரப்பட்டது. ஆனால், இது மெய்யான விளக்கம் அன்று. புறம்பேசுதலைப் புறம் கூறுதல் என்பதே மரபு. ஓதுதல் என்பது மரபு அன்று. எனவே, ஆண்டாளால் குறிப்பிடப்பட்ட தீக்குறளை என்பதற்குத் தீயதான திருக்குறளை என்பதே பொருளாகும். செய்யாதன செய்யோம் என்று முற்பகுதியில் கூறிவிட்டு அதனை விளக்கும் முகமாகத் திருக்குறளை ஓதுதல் செய்யக் கூடாத செயல், அதைச் செய்ய மாட்டோம் என்பது கருத்து. காஞ்சி சங்கராச்சாரியார், இதே கருத்தில் கல்கி ஏட்டுக் கேள்வி பதில் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இம்மட்டுமின்றித் திருக்குறள் ஆரிய வேதங்களுக்கும், ஆரிய நூல்களுக்கும் சமமானது அன்று, தாழ்வானது எனுங் கருத்தும் அக்காலத்துப் பரப்பப்பட்டது. அதனை மறுக்கும்முகமாகத் திருவள்ளுவ மாலையில் சில செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வாரிய வேத மறுப்பு பின்வரும் மூன்று நிலைகளில் இருந்தது.

1. ஆரிய வேதத்திற்குச் சமமானது திருக்குறள்.
2. ஆரிய வேதங்களைவிட உயர்வானது.
3. ஆரிய வேதங்கள் மட்டுமில்லாமல், ஆரிய நூல்களைவிட உயர்ந்தது.

### *ஆரிய வேதத்திற்குச் சமமானது*



திருவள்ளுவமாலையில் சரசுவதி பாடியுள்ளதாக இடம் பெற்றுள்ள பாடலில் (2) சரஸ்வதி சொல்வதாக ''முதலில் ரிக் முதலான நான்கு வேதங்களையும் பாடினேன்;



படிப்பகம்

www.padippakam.com



பெரும்பான்மை மக்கள் செய்யும் தொழிலாக உழவு இருப்பதுடன், ஏனைய மூன்று பிரிவினர்க்கும் சோறு இடும் தொழிலாகவும் உழவுத் தொழில் இருந்தும், அது கடைநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. இது வேதவிதியாகும். திருவள்ளுவர் இதனை முற்றுமாக மறுத்து, உழவு எனும் தனி அதிகாரத்தை வகுத்துப் பத்துத் திருக்குறள் பாக்களையும் (1031 - 1040) படைத்துள்ளார்.

இடைக்காலத்தில் பாரதத்தைப் பாடினேன்; அதற்கும் பிற்பட்ட கடைசிக் காலத்தில் திருக்குறளைப் பாடினேன்'' என்றும், உக்கிரப்பெருவழுதியார் பாடலில் (4) நான்கு வேதங்களில் சொல்லப்பட்ட முப்பொருளைத் திருவள்ளுவர் தந்துரைத்தார் என்றும் கருத்து இடம் பெற்றுள்ளது. இதே கருத்து கோதமனார் பாடலிலும் எதிரொலிக்கிறது (15).

*''ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்*
*போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் - ஏட்டெழுதி*
*வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்*
*சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று''*

வடமொழி மனிதனால் உருவாக்கப் படாது, கடவுளால் படைக்கப்பட்ட மொழி, எனவே, செய்யாமொழி. வடமொழியில் உள்ள வேதங்களுக்கு உரியவர் அந்தணர். திருவள்ளுவர் மொழி பொய்யாமொழி. அதற்கு உரியவர் அனைத்து மக்களும் எனுங் கருத்தில் வெள்ளிவீதியார் பாடுகிறார் (23).

*''செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த*
*பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே - செய்யா*
*அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை*
*இதற்குரியர் அல்லாதார் இல்''*



மாங்குடி மருதனார், காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் ஆகியோர் பாடல்களிலும் இக்கருத்து இடம் பெற்றுள்ளது.

பெருஞ்சித்திரனார் (32) பாடலில் வேதத்தைவிட 'ஓதிய ஒண்பொருள் எல்லாம் உரைத்ததனால் திருவள்ளுவம் உயரியது' எனுங் கருத்து காட்டப்படுகிறது.

ஆரியம், தமிழ் இரண்டையும் வேதம் திருக்குறள் பின்னணியில் ஒப்பிட்டு வண்ணக்கஞ்சாத்தனார் எழுதும் பாடல் இங்கே சிறப்பாகச் சுட்டிக்காட்டத் தக்கது.

*ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனின் இது*
*சீரிய தென்றொன்றைச் செப்பரிதால் - ஆரியம்*
*வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்*
*ஓது குறட்பா உடைத்து*

- (43 திருவள்ளுவமாலை)

இவ்வனைத்திற்கும் உச்சமாகப் பாரதம், இராமாயணம், மனுஸ்மிருதி, பண்டைய வேதங்கள் ஆகிய அனைத்தும் சேர்ந்தும் கூடத் திருக்குறளுக்கு நிகராக முடியாது எனுங் கருத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனார் எழுதியுள்ளார் (30).

திருவள்ளுவ மாலைக்கு உள்ளேயே புதுவதாகக் குரல் ஒன்று மாமூலனாரால் ஒலிக்கப்படுகிறது (8). இப்பாடலில் மறந்தாய வள்ளுவன் என்பான் ஓர் பேதை அவன் சொல் கேளார் அறிவுடையார் எனும் அடிகள் இடம்



படிப்பகம்

www.padippakam.com


ஆரிய, சைன, பௌத்த சமயங்கள் மிக வற்புறுத்திய தத்துவம் விதி தத்துவம் ஆகும். இவ்விதி, வினை, கர்மா, தலையெழுத்து எனப் பலவேறாக வழங்கப்பெறும். பழைய தமிழில் ஊழ் என்றும் இது குறிக்கப் பெற்றது. இந்தியரையே ஆட்டிப் படைத்த / படைக்கும் தத்துவம் ஆகும். தமிழர் முயற்சி இல்லாமல் முறிந்து போனதற்கு இத்தத்துவத்தின் பங்கு மிகப் பெரியது ஆகும்.

பெற்றுள்ளன. திருக்குறள் வடித்தெடுத்த மேதையைத் திரு என முன்னொட்டு இடாமல் வள்ளுவன் என்று பழிப்பவன் ஒப்பற்ற முட்டாள் ஆவான்; அம்முட்டாளின் சொல்லை அறிவுடையவர் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பது இப்பாடற் கருத்தாகும்.

திருவள்ளுவர் வேத விளக்கம் பாடியவர் அல்லர்; வேதத்தை எதிர்த்துப் பாடியவர் என்பதற்கு நூல் உள்ளே நிறைய சான்றுகள் உள்ளன. கடவுள் வாழ்த்தில் ஆரியக் கடவுளர் யாரையும் முன்னிறுத்திப் பாடாதது முன்பே சுட்டப்பட்டது. இது மட்டுமின்றி ஆரிய முறைப்படி மக்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் தொழிலும் வரையறுக்கப் பட்டிருந்தது.

1. பிராமணர் ஓதுதல், ஓதுவித்தல்.
2. சத்திரியர் போர்புரிதல்.
3. வைசியர் வணிகம்செய்தல்.
4. சூத்திரர் உழவு.

இதனுடன் பிராமணர் - ஓதுதலுடன் வைதிக மதங்களும், சத்திரியர் - போர் புரிதலுடன் பௌத்த மதமும், வைசியர் - வணிகம் செய்தலுடன் சமண மதமும், சூத்திரர் - உழவுத் தொழிலுடன் தமிழர் ஆதிசமயமும் ஆழமாக ஒருங்கு பட்டிருந்தன.



உழைப்போடு தொடர்புடைய உழவுத் தொழில் தாழ்வாகக் கருதப்பட்டதுடன், அத்தொழிலைச் செய்யும் சூத்திரத் தமிழர்கள் வருணத்திலும் கடைசிப் பிரிவு மக்களாகக் கருதப்பட்டார்கள். உழவுத் தொழில் இழிதொழிலாகக் கருதப்பட்டது. உழவர்கள் பிராமணர்களுக்கு உரிய ஓதுதல் தொழிலைச் செய்யக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு யாரேனும் செய்வாராயின் அவரை ஊரை விட்டே துரத்திவிடப் பிராமணர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது. (மனு 12, அ9/225 மற்றும் அ 10/.99).

பெரும்பான்மை மக்கள் செய்யும் தொழிலாக உழவு இருப்பதுடன், ஏனைய மூன்று பிரிவினர்க்கும் சோறு இடும் தொழிலாகவும் உழவுத் தொழில் இருந்தும், அது கடைநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. இது வேதவிதியாகும். திருவள்ளுவர் இதனை முற்றுமாக மறுத்து, உழவு எனும் தனி அதிகாரத்தை வகுத்துப் பத்துத் திருக்குறள் பாக்களையும் (1031 - 1040) படைத்துள்ளார். இப்பத்துப் பாக்களில் அவர் குறிப்பிடும்

*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் (1031)*
*உழுவார் உலகத்தார்க்கு ஆணி (1032)*
*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033)*

எனுங் கருத்துப் பாக்கள் உழவுத் தொழிலை மிகஉயரிய தொழிலாகத்


படிப்பகம்

www.padippakam.com



திருவள்ளுவர் கருதினார் என்பதற்குச் சான்று. இவ்விடத்தில் ஆடம்ஸ் மித் எனும் பொருளாதார அறிஞர் தாம் எழுதியுள்ள WEALTH OF NATIONS எனும் நூலில் குறிப்பிடும் பிரான்சு நாட்டு நிலையைச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும். அவர் குறிப்பிடுவதாவது:

Could it be that Valluvar was an anticipator of the Physiocrats of the eighteenth-century France? The Physiocrats held that land alone produced a net product, and agriculturists alone were the productive class. The artificers, manufacturers and merchants were, according to this school, an unproductive class. Explaining their theory, Adam Smit wrote:

"The unproductive class, that of merchants, artificers and manufacturers is maintained and employed altogether at the expense of the two other class, of that of proprietors, and of that of cultivators. They furnish both with the materials of its work and with the fund of its subsistence, with the corn and cattle which it consumes while it is employed about the work. The proprietors and cultivators finally pay both the wages of all the workmen of the unproductive class, and the profits of all their employers".

(Thirukkural 1959-60 to 1968-69, University of Madras, Pa:83)

மற்றவரிடம் சென்று பிச்சை எடுத்தலைச் சமணம், பௌத்தம், ஆரியம் ஆகிய அனைத்து மதங்களும் ஏற்றுக் கொண்டிருந்தன. துறவிகளுக்குப் பிச்சை போடுவது இல்லறத்தார் கடமை எனுங் கருத்து அச்சமயங்களால் வற்புறுத்தப் பட்டது. பிச்சை எடுத்தல் தவறு என்பதைத் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாகத் தாம் எழுதிய இரவு அச்சம் (107) எனும் அதிகாரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆரிய, சைன, பௌத்த சமயங்கள் மிக வற்புறுத்திய தத்துவம் விதி தத்துவம் ஆகும். இவ்விதி, வினை, கர்மா, தலையெழுத்து எனப் பலவேறாக வழங்கப்பெறும். பழைய தமிழில் ஊழ் என்றும் இது குறிக்கப் பெற்றது. இந்தியரையே ஆட்டிப் படைத்த / படைக்கும் தத்துவம் ஆகும். தமிழர் முயற்சி இல்லாமல் முறிந்து போனதற்கு இத்தத்துவத்தின் பங்கு மிகப் பெரியது ஆகும். திருவள்ளுவரே முதன் முதலில் இத்தவறான நம்பிக்கைக்கு எதிர்க் குரல் கொடுத்தார். ஆள்வினை உடைமை (62), ஊக்கம் உடைமை (60) எனும் அதிகாரங்கள் தலையெழுத்துத் தத்துவத்திற்கு எதிராக எழுதப்பட்ட நம்பிக்கை வாசகம் ஆகும்.

*ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்* 620

ஆரியர் இடையேயும், அவர் வழியாக நம்மிடையேயும் வெகுவாகப் பாராட்டப்படும் நூல் கண்ணன் அருளிய பகவத்கீதை யாகும். இதில் கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே எனும் வாசகம் மிகப் பெரியதாகப் பேசப்படும். திருவள்ளுவர் இக்கருத்திற்கு முழுதும் மாறான கருத்துடையவர் ஆவார். கடமைக்குக் கூலி வேண்டும், கிடைக்கும் எனுங் கருத்தில்



*தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்* 619

என எழுதியுள்ள குறள் சான்றாகும்.



படிப்பகம்

www.padippakam.com



இத்துணை மக்கள் வளர்ச்சிக்குரிய திருவள்ளுவக் கருத்துகள் தமிழரிடையே பரவாமல் போனமைக்குக் காரணங்கள் பல உள்ளன. அவற்றுள் முதன்மையானவை ஒருசில வருமாறு.

1. உணர்வு வழி ஒழுகும் தமிழரை அறிவு வழி மாற்றும் முயற்சி திருவள்ளுவர்தம் முயற்சியாக இருந்தது. இது தமிழர்க்கு ஏற்புடையதாக இல்லை. குறிப்பாக, மத மறுப்பு, சாதி மறுப்பு, கள், சூது முதலானவற்றின் மறுப்பு திருவள்ளுவர்தம் குறிக்கோள்களாக இருந்தது காரணமாகும்.

2. ஜெருசலத்தில் பிறந்த ஏசு தம் கருத்துகளைத் தாமே ஏழை எளிய மக்களிடம் எடுத்துச் சென்று பரப்பினார். அவருடன் அவர்தம் சீடர்களும் சேர்ந்து கொண்டனர். இவ்விரு முயற்சிகளுக்கு மேலாக ஏசுவின் கருத்துகளால் கவரப்பெற்ற ரோமஅரசர்கள் ஐரோப்பாவிற்கு அச்சமயத்தை எடுத்துச் சென்று ஏசுவின் கருத்துகளைப் பரப்பியதுடன், அவர்கள் சென்ற உலக நாடுகள் எங்கிலும் அக்கருத்துகளைப் பரப்பினர். மெக்காவிலும், மதினாவிலும் புதிய கருத்துகளைத் தோற்றுவித்த அண்ணல் நபி, தம் கருத்துகளை அவரே பல்வேறு இடங்களில் சென்று பரப்பினார். அவருக்குப் பின் இறைத் தூதுவர்கள் நபியின் கருத்துகளை நாடெங்கும் பரப்பினர். தொடர்ந்து அராபிய அரசர்கள் நபியின் கருத்துகளால் ஈர்க்கப் பெற்றுத் தம் நாடுகளிலும், தாம் சென்ற நாடுகளிலும் பரப்பினர்.

3. இந்தியாவில் புத்தர் போதிமரத்தின் அடியில் பெற்ற புதிய சிந்தனையை ஊர்தோறும் நடந்து சென்று மக்களிடையே நேர்முகமாகப் பரப்பினார். அவருடைய கருத்துப் பரவுதலுக்குத் தலைமைச் சீடர் ஆனந்தர் மிகவும் உதவியாக இருந்தார். சீடர் பலரும் புத்தகருத்தைப் பல்வேறு இடங்களுக்குப் பரப்பினர். எல்லா வற்றுக்கும் மேலாக மௌரியப் பேரரசன் அசோகன் உலகம் முழுதும் பௌத்த மதத்தை எடுத்துச்சென்றான்.

ஏசு, நபி, புத்தர் ஆகியோருக்கு வாய்த்தது போலத் திருவள்ளுவருக்குச் சீடர்களும் வாய்க்கவில்லை, அரசர்களும் வாய்க்கவில்லை, அவரும் நேர்முகமாக மக்களிடம் சென்று கருத்துப் பரப்பும் முறையைச் செய்யவில்லை. இந்நிலையே திருவள்ளுவர் தோன்றிய காலம் தொடங்கி அண்மைக்காலம் வரை நடந்து வந்தது. எனவே, கருத்துக் களஞ்சியமாகத் திருக்குறள் விளங்கினாலும், அது பின்பற்றப்படும் நெறியாகப் போற்றப் படாமல் இலக்கியப் பொருளாக மட்டும் இருந்து விட்டது.

www.padippakam.com



# திருவள்ளுவரின் குறள்நூல்

ஜெ. நாராயணசாமி



பல இடங்களில் வாழ்ந்த இந்தியச் சிந்தனையாளர்களுக்குத் தலையூற்றாக அமைந்தவை நடைமுறைப் பழக்கங்களும பண்பாட்டு வளர்ச்சியும் ஆகும். வள்ளுவம் தோன்றிய நோக்கம், பலசமயச் சழக்காலும் அல்தமிழ் நுழைவாலும் படர்ந்த இருளிலிருந்து மீண்டு ஒளிகாண, அக்காலத்தில் நிலவிய பல கருத்தியல் விளக்கங்களுக்கும் மேல் சென்று தனி அறங்களைக் கோட்பாடாகவும், அடிப்படைக் கொள்கைகளை வழிகாட்டியாகவும் தொகுத்தளிப்பதேயாகும். உலகின் ஒரு பகுதி நாட்டை மற்றைய நாடுகள் முழுதும் அறியாத காலகட்டத்தில் இருந்த சமுதாயச் சூழலில், குறுகிய எண்ணங்களைத் தவிர்த்து, மூட நம்பிக்கைகளையும், சமயச் சம்பிரதாயங்களையும் எதிர்த்து உலகப் பொதுமையைப் போற்றித் தோன்றியது திருக்குறள் நூல்.

திருக்குறள் எழுதி முடிக்கப்பட்ட நூல் அன்று; தொட்டனைத் தூறும் மணற்கேணி - என்றென்றும் மாறிக்கொண்டிருக்கும் இனிய நீரோட்டம். ஒருவரின் நாடு மொழி இனம் கலை பண்பு இவற்றின் தாக்கம் அவர் மனத்தின் நிழலாய்ப் பதிந்து, அவர் கருத்தில் மண்ணின் மணம் கமழும். தமிழ் நாட்டின் சொந்தச் சொத்திலிருந்து ஓர் உயர்ந்த கருவூலத்தைத் தந்த பேரறிஞர் வள்ளுவர். பண்டைய இந்திய நாகரிகத்தின் முழுமையில் முகிழ்த்த நூல் குறள், மக்கள் மக்களோடு பேசும் ஒழுக்கநெறி வெளிப்பாடாகத் திகழ்வது, மக்களினத்தின் முழுமையைப் போற்றுவது.

வடக்கிலிருந்து வந்த மதங்களின் தாக்கத்தால் பழம்பெரும் தமிழினத்தின் மொழி, மறைகள், கலைகள், பண்பாடு, நாகரிகம், விழுப்பயன் மதிப்பீடு (Values), சமுதாய அமைவு (Social order),





படிப்பகம்

www.padippakam.com



பண்டைய இந்திய நாகரிகத்தின் முழுமையில் முகிழ்த்த நூல் குறள், மக்கள் மக்களோடு பேசும் ஒழுக்கநெறி வெளிப்பாடாகத் திகழ்வது, மக்களினத்தின் முழுமையைப் போற்றுவது.

பொருள்முதல் பார்வை இவை சீர்கேடடைவதைத் தடுத்து நிறுத்தி, விழிப்புணர்வைத் தூண்டும் வகையில், மறைமுகிலைக் கிழித்துச் செங்கதிர் ஒளி பரப்பும் ஆதவனாக எழுந்த சிந்தனை, செயல்முறைக் கோட்பாட்டுப் பெருநூல் வள்ளுவம். திருக்குறளில் வாழும் வள்ளுவம் புதியதோர் உலகம் செய்ய பொதுப் பயனியல் நிலை தேடும், சமுதாயத் திட்டம் வகுக்கும் வாழ்க்கைக் கலைமுறை. உண்மைப்பொருள் (real intent) தேடி, இயங்காற்றல் பெற்ற சமுதாய அமைப்பு முறையில் (dynamic social order) அறுவகைக் காட்சிகள் மிளிரும் முழுமையான செயல்நூல். திருவள்ளுவர் ஒரு மறுமலர்ச்சிச் சமுதாயச் சிற்பி எனலாம். ‘பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்’ என்பது மணிமேகலை.

தமிழ் இனநலன் காப்பு நூலே திருக்குறள் என்ற பெருஞ்சித்திரனார், ஆரியப் பார்ப்பனரான சிற்றினத்தாரிடம் அரசர்கள் இணங்கியும் அடங்கியும் பணியும் போக்கு தமிழினத்தைக் கெடுக்கும் என்ற எச்சரிக்கையே வள்ளுவரின் சிறப்புப் பகுதியான ‘சிற்றினம் சேராமை’ (தொகுப்பு 46) என்றார். இதுபோலவே ‘கூடா ஒழுக்கம்’ (தொகுதி 28) மதவாதிகளின் போலித் தன்மையைப் பற்றிய எச்சரிக்கையாகும். தமிழ் மண்ணுக்கே உரிய தொல் அறிவியல் மூலமுதற் கொள்கையாகச் சிறந்து விளங்கிய வள்ளுவத்திற்கும் வட ஆரியரின் பிராமணியத்திற்கும் இடையிலான நீண்ட போராட்ட வரலாற்றைக் குறிப்பதே இந்நூல். நிற வேறுபாடுகளும், பாகுபாடுகளும் பகுத்தறிவிற்கும் மனித நேயத்திற்கும் ஒவ்வாத சடங்குகளும், பல சமயங்களும், சாதிகளும் காலூன்றத் தொடங்கிய நிலையில் பொதுச் சிந்தனைகளில் பற்றுக்கொண்டு, உலகறிய உணர்த்தும் பேராண்மை கொண்டு கிளர்த்தெழுந்த வள்ளுவப் பெருந்தகை ஓர் பெருநாவலர். செந்நாப்போதார் விதிகளைப் பொதுமைப் படுத்தும் அறிவு வளர்ச்சியில் உயர்நிலை எய்திய பேரறிவாளர். பல்சுவை உணவுப் பொருட் கலவையிலும் ஒரு சுவை சிறந்து தோன்றுவது போல, திருக்குறளின் உயிர்ப்பு, பல்சமய நெறிகளின் மேலான கூறுகளை உள்வாங்கிய தெளிவு, அறம், ஒழுக்கம், நன்றே செய்தல் பொதுத் தன்மையவை எனினும், வள்ளுவரின் கொளுத்த சிந்தனையில் சிறைப்பட்ட புரட்சி வெள்ளம் விடுபடும் இடங்களே சிறந்தவை.



வைதீக சமய நெறிகளை எதிர்ப்பதில் திருக்குறள் புத்த - சமணக் கோட்பாடுகளைப் பின்பற்றினாலும், அவற்றின் சடங்குகளையோ, இன்பநுகர்ச்சி மறுப்பினையோ ஏற்பதில்லை. ஆசையினின்றும் விடுதலை என்பது உலகியல் வாழ்க்கையிலிருந்து விலகுவதன்று;



படிப்பகம்

www.padippakam.com



நிற வேறுபாடுகளும், பாகுபாடுகளும் பகுத்தறிவிற்கும் மனித நேயத்திற்கும் ஒவ்வாத சடங்குகளும், பல சமயங்களும், சாதிகளும் காலூன்றத் தொடங்கிய நிலையில் பொதுச் சிந்தனைகளில் பற்றுக்கொண்டு, உலகறிய உணர்த்தும் பேராண்மை கொண்டு கிளர்த்தெழுந்த வள்ளுவப் பெருந்தகை ஓர் பெருநாவலர்.

உலகத் தளைகளிலிருந்து விடுபடுதல், கொல்லாமை, துன்புறுத்தாமை, வாழ்வின் நிலையின்மை இவற்றை விளக்குவது. உள்நோக்கிய ஒழுக்கம், அன்பெனும் வாழும் அறம், வாழ்வு ஏற்புக் கொள்கை (Living ethics of love); வாழ்வின் இயல்பினை ஏற்ற வெளிப்படை கூறல், குறிக்கோளுடைய இயல்பு முறை அணுகல் (idealistic pragmatism), உழைப்பாலும் ஒழுக்கத்தாலும் உயர்தல் (ethical pluralism), பயன் நோக்கிய அறம், வாய்மை, மனிதவள மேம்பாட்டின் மூலதனம் கல்வி (கேடில் விழுச் செல்வம்). புரட்சிக்கு வித்து வறுமை (அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்), நாகரிகத்தின் வளர்ச்சி சுட்டும் முரணி-இணையும் சிந்தனைகள் (dialectical thinking): நல்குரவு - ஈகை - இரவச்சம்; எதிர்மறைகள் வாயிலாக முழுமையான நுண்ணியல் வடிவம் (atomic structure) காணும் நெறி: பெருமை - சிறுமை; வேண்டுதல் - வேண்டாமை, மடி-குடி, பொறுத்தல்-ஒறுத்தல், அருள் பொருள், கனவு-நனவு, ஊடல்-கூடல்; நடையில் கவித்துவமும் அழகும், அறிவியலின் தெளிவு - பொதுமை, அறவழி அரசியலமைப்பு (ethical constitution), புத்தரின் தருக்கவியல், ஃகைகூவின் தத்துவவியல்;



சீன, சப்பான், கிரேக்க கவிதைக் கூறுகளுடன் ஒப்பிடத் தக்க செழிப்பான தமிழ்க் கவிதையியல் திருக்குறளின் பெருமையைப் பறைசாற்றுபவை.

'வள்ளுவத்தின் வீழ்ச்சி' என்ற நூலின் ஆசிரியர் திரு குணா அவர்கள் வள்ளுவத்தின் மீட்சியைப் பற்றிப் பின்வருமாறு சொல்வார்:

'பார்ப்பனீயத்திற்கு முந்திய வாழ்வியல் அமைப்பாகவும், அரசியல் நெறியாகவும், இலக்கணமாகவும் விளங்கியதே முற்கால வள்ளுவம், வள்ளுவம் என இந்நூற்றாண்டில் சொல்லப்பட்டு வருவது அணுக் கொள்கையோ, கணக்கியலோ, மருத்துவமோ முதலான அறிவியல் மெய்யியல் கோட்பாடுகள் அல்ல. திருக்குறள் கற்பித்த நன்நெறிகள் மட்டுமே இன்று நம்மிடையே வள்ளுவமாக உலா வருகின்றன. அது அகமை வடிவிலான புதிய வள்ளுவம், பழங்கால வள்ளுவம் வளர்த்த அறிவியலையும், மெய்யியலையும் இக்கால நெறிகளுக்கேற்ப மீட்பெதன்றே அது பொருள்பட வேண்டும். திருக்குறள் காட்டும் அறமும், பொருளும், இன்பமும் கூட, இன்றைய அறிவு இலக்கணங் களுக்கு ஏற்ற புதிய விளக்கங்களைக் காட்டப் பயன்படவேண்டும். வள்ளுவ அறிவுமரபே, ஆரிய பிராமணீயம்



படிப்பகம்

www.padippakam.com



குறள் கூறும் துறவு மனத்தால் துறப்பதேயாகும், சன்னியாசம் அன்று. நுகர்நலன் உள்ளபொழுதே, பொருட்கள் - இன்பங்களின் மேலுள்ள பற்றுக்களை முழுமையாகத் துறந்து, யான் - எனது என்னும் அகந்தையை அறவே நீக்குவதாகும்.

மடிபறித்துச் சென்று தனதாகப் பறைசாற்றிய கோட்பாடுகளின் அடிப்படை என்னும் உண்மையை உலகுக்குக் காட்ட வேண்டும்.

இந்த நூல் தொகுப்பின் குறிக்கோளும் அடிப்படையில் மேற்சொன்ன கருத்தைத் தழுவியே உள்ளது.

ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் சமுதாயப் போக்கறிந்து, புகலுணர்ந்து, நாடி பிடித்துப் பார்த்து நலம் சேர்ப்பவை இலக்கியங்கள், திருக்குறளின் முதன்மை, மதுரை சங்கப் பலகையில் தொடங்கி ஓலைகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள், உரைநூல்கள், பன்னாட்டு மொழியாக்கங்கள், ஆய்வுகள், மேற்கோள்கள், ஓவியங்கள், சிற்பங்கள், கணினி மூலம் ஒளி-ஒலிக் குறுந்தட்டுக்கள், உலகளாவிய கணிய இணைய வலைத் தளம் என்ற முறையில் முதன்மை தொடர்கிறது. எனினும் தரத்தின் முதன்மை, இனம் மொழி சமயங்களுக்கு அப்பாற்பட்ட முதன்மை மேலோங்கி நிலைக்கின்றன. மாற்று நெறிகளின் மயக்கத்தைத் தெளிவிக்கும் சித்த மருத்துவர் இருளைஒட்டித் தமிழினத்தை மீட்கக் குறள் என்னும் ஒளிவிளக்கை ஏந்தினார் திருவள்ளுவர்.

எஃப்.வி. எல்லிசு என்ற சென்னை மாவட்ட ஆட்சியராக இருந்த ஆங்கிலேயர் 1912ல் 100 குறட்பாக்களுக்கு உரை எழுதி வெளியிட்டார்; அதுவே குறளின் முதல் ஆங்கில மொழியாக்கம் எனக் கருதப்படுகிறது. தன்னிடம் சமயலராயிருந்த கந்தப்பன் (அயோத்திதாச பண்டிதரின் தாத்தா) கொடுத்த திருக்குறள் மூலச் சுவடிகளை ஆர்லிங்டன் என்ற ஆங்கிலேய அதிகாரி 1831இல், தமிழ் வித்வான்கள் தாண்டவராய முதலியார், முத்துசாமி பிள்ளை ஆகியோர் உதவியுடன் மர எழுத்துக்களில் அச்சிட்டு வெளியிட்டார். திருக்குறளை ஓலைச்சுவடிகளிலிருந்து தேர்ந்து 1837இல் அச்சேற்றியவர்கள் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரும், திருத்தணிகை விசாகப் பெருமாளய்யரும் ஆவர். திருவள்ளுவர் தொடர்பான கல்வெட்டுக்களை ஆய்ந்த அயோத்திதாச பண்டிதர் ‘தமிழன்’ இதழில் 550 குறட்பாக்களுக்கு ஆய்வுரைகள் எழுதி, நூலாகவும் வெளியிட்டார். 80க்கு மேற்பட்ட பன்னாட்டு மொழியாக்கங்கள் செய்யப்பட்டுள்ள, சமயங்களுக்கு அப்பாற்பட்ட உலகப் பொதுமறை நூல் திருக்குறள் ஒன்றே.

வள்ளுவர் காணும் (1) இறையியல், குணப்பண்பாடுகளே (எண்குணத்தான். 9); (2) மெய்யியல் ஒழுக்கநெறியே (பொய்தீர் ஒழுக்க நெறி. 6- உயிரினும் ஓம்பப்படும். 131). மெய்யியல் என்பது, பொருள் முதலியவைக் கொண்டு உள்பொருள்





படிப்பகம்

www.padippakam.com



வள்ளுவத்தில் ஊழ் என்பது ஊழியின் இயக்க முறைமை, இயற்கையின் சூழல்-ஆற்றல்; அது மனித எண்ணம். செயல்களுக்கு அப்பாற்பட்டு நிகழும் ஓர் ஒழுங்குமுறை.

உலகியலை ஆராய்வது; அதன் இரு பக்கங்கள் இல்வாழ்வு - சமுதாய வாழ்வு. சமுதாய வாழ்வின் இரு துறைகள் ஆட்சியியல் - பொருளியல். இவை நான்கின் இறுதிநிலை மெய்யறிவு பெறுதல், இயற்கையை உணர்தல், (3) குறள் அறம் மனத்துக்கண் மாசு இலனாதல். (34)


வள்ளுவர் காணவிரும்பிய சமுதாயம்: மனிதன் - குடும்பத்தின், சமுதாயத்தின், அரசின் உறுப்பென்று பார்த்தது குறள். மக்களின் அடிப்படைத் தேவைகளையும், துய்ப்பதற்கு உரியவற்றையும், வரைமுறை செய்து, நுகர்வதற்கு மட்டும் தனியுடைமை; பொதுநலத்திற்கு உகந்தபடி மாந்தர்தம் ஊக்கமும் ஆர்வமும் ஆக்கமுறையில் செயல்படல்; மக்களின் தனித் தன்மையைத் தகர்த்து விடாமல் தேவைக்கேற்ற கட்டுப்பாடுகளுடன் சனப் பயனியப் பொருளியல் வாழ்க்கை; ஏற்புடைய கூட்டமைப்புக் கொண்ட, ஒழுக்கம் சிறந்த ஒரு சமுதாயமேயாகும். திருக்குறள் போன்ற ஒரு சமுதாய நூல் அதற்கு முன்னும் பின்னும் தமிழில் தோன்றியதாகத் தெரிவதில்லை.

*வாழ வழிவகுத்தார் வள்ளுவர்*
*தமிழ்மறை பகன்றார், நல்லமுறை*
*நவின்றார்*

*பழந்தமிழ் நாட்டின் பண்பே பண்பென*
*அன்னவர் ஆய்ந்த அறமே அறமென*
*ஒழுக்கமே ஒழுக்கம் ஆம்என*
*வள்ளுவர்நாட்டினார் தெள்ளு சீர்த்தியை*
*திறம்பட எடுத்துக் காட்டினார்*
*வானுக்குச் செங்கதிர் ஒன்று - புனல்*
*வன்மைக்குக் காவிரி ஒன்று - நல்ல*
*மனதைக் காத்து வாழ எண்ணும் இந்த*
*வையத்துக்கு ஒன்று திருக்குறள்*

என்றார் பாரதிதாசன்.

திருக்குறள் உரைநூல்கள்: பிற்கால உரையாசிரியர்கள் நூலாசிரியருடைய கொள்கைகளை முற்றும் உணர்தல் இயலாது என்பது திரு உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் துணிபு. பழந்தமிழர் சமுதாய நிலையில் மதங்கள் ஏற்படுத்திய பிறழ்ச்சியை முறியடிக்கத் தோன்றியது குறள்நெறி. ஆயின், 12-13ஆம் நூற்றாண்டில் தோன்றிய உரையாசிரியர்கள் தம்முடைய காலச் சூழலுக்கு ஏற்ப, அன்றைய தமிழகத்தைக் கவ்வியிருந்த வடமொழி நூல்கள் மூலம் மனுவின் நால்வகை நிற வேற்றுமைகள், ஏற்றத்தாழ்வுகள், அறுவகைக் காட்சிகள், சமயக் கோட்பாடுகள், சாணக்கியரின் சுக்கிரநீதி, கவுடில்யரின் அர்த்தசாத்திரம் போன்றவற்றின் அடிப்படையில் குறளுக்கு வலிந்து விளக்கங்கள் தந்து, வள்ளுவரின் செயற்பார்வையையும், சமுதாய இலக்கையும் திசை திருப்பினார்கள். முரண்பட்ட, வேறுபட்ட அணுகுமுறை, பாடவேற்றுமைகள், கருத்துப் பிறழ்ச்சிகள்,



திரிபுகள், வடநூல் பொருளுரைத்தல் பொருள் மறைப்புக்கள் (suppressions) சிதைவுகள் (distortions) தழுவல்கள் (adaptations) ஊடுருவின. குறளின்



படிப்பகம்

www.padippakam.com



திருக்குறளின் இன்பத்துப்பால், தமிழ் மக்களின் அகவாழ்க்கை நெறிகளைக் களவியல், கற்பியல் என்ற தொகுத்து, ஒருங்கிணைத்த ஒரு ஒப்பற்ற இலக்கியம். பால் ஒருமைப்பாடு தருவது மெய்யின்பம். சமுதாய ஒழுங்கு, அமைதிக்கு, பால்அமைவு இல்லறத்தில் இன்றியமையாதது.

உள்ளுறையும் பயன்மதிப்புக்களும் (values) மாற்றப்பட்டன. சுருக்கமாக, வள்ளுவம் வடிவிழந்து, உரையாசிரியர் களின் கைப்பாவையாக உலாவிடப்பட்டது.

குறள்நெறியும் - வடநூல் சமயக் கோட்பாடுகளும்: வள்ளுவத்தின் கோட்பாடுகளுக்கும், சமயம் சார்ந்த எண்ணங்களுக்கும், மலைக்கும் மடுவுக்கும் ஆன வேறுபாடுகளும் முரண்பாடுகளும் உள்ளன.

1. கடவுள் கொள்கை: புத்தம் சமணம் போலவே வள்ளுவம் கடவுளைப்பற்றிக் கவலைப்படவில்லை, அதை ஏற்றுச் சொல்லவும் இல்லை. ‘இல்லை என்பார்சிலர், உண்டென்று சிலர் சொல்வார், எனக்கில்லை கடவுள் கவலை’ என்பது வள்ளுவத்தை எதிரொலிக்கின்றது.

2. பொருள்முதலியல் கொள்கை (materialism), உள்ளதுசிறக்கும் மெய்யியல் (evolution), அளவையியல் (logic), அறிவுமெய்யியல் (existensism), பகுத்தறிவு நன்னெறி (rational ethics), அறிவியல் பார்வை (scientific view) இவற்றைப் போற்றும் திருக்குறள், மதங்கள் போற்றும் கருத்துமுதலியல் (ஆன்மீகம் - Spiritualism), இறைமெய்யியல் (existence of god), நிறுவப்பட்ட சமயங்கள் (organised religions), இவை சொல்லும் படைப்பு, பாவ மன்னிப்பு, வேண்டுதல், கையேந்தல், வரம்பெறல், யோகம் (luck), நிலையான - நிலையற்ற ஆன்மா (சீவன்), கடவுளுடன் அதன் இணைப்பு - பிரிவு; வழிபாட்டு முறைப்பற்று (பக்தி), கன்மம் (karma), சன்னியாசம் (இல்லறத்தை நீங்கிய நிலை), மாயை (mysticism), விந்தைகள் (miracles) இவற்றை ஏற்கவில்லை.

3. அறத்தில் முதிர்ந்து, அன்பில் கனிந்து, அறிவில் தெளிந்த ஒளியே திருக்குறள் சொல்லும் அருள், பக்தி வழியில் சென்று மதங்கள் கடவுளிடம் பெறவிழையும் அருள், அளி அன்று. வைதீக நூல்கள் கூட அருளின்வழி வீடுபேற்றைக் காட்டவில்லை.

4. தனக்கு வரும் துன்பங்களைத் தாங்கிக்கொண்டு, பிறவுயிர்களுக்கு இன்னாதன செய்யாமல், நோன்பிருந்து தனது உடைமைகளைப் பிறருக்கு அளித்தல், புலன்களை அடக்கி உடலால் உயிரை இயக்கல்; தம் கருமத்தை (வினைகளை, கடமைகளை) இல்லறத்தில் இருந்தபடியே, செவ்வனே செய்தல் குறள் கூறும் தவம். இல்லறத்தைவிட்டுக் காட்டிற்குச் சென்று மோன நிலை ஏற்பது நல்தவம் அன்று.



5. குறள் கூறும் துறவு மனத்தால் துறப்பதேயாகும், சன்னியாசம் அன்று. நுகர்நலன் உள்ளபொழுதே, பொருட்கள் - இன்பங்களின் மேலுள்ள பற்றுக்களை



படிப்பகம்

www.padippakam.com



முழுமையாகத் துறந்து, யான் - எனது என்னும் அகந்தையை அறவே நீக்குவதாகும். இல்லறத்தைப் பற்றிச் சொல்லியவர் எங்கும் துறவறம், துறவி என்றும் பேசவில்லை.

6. குறள்நெறியில் மெய்யுணர்வு என்னும் பேராஇயற்கைநிலை (வானோரின் உயர்ந்த உலகம்) உலகியல் வாழ்வில் இன்பதுன்பங்கள், நிலையில்லாதவற்றை அறிதல்; பொருட்களின் - மாந்தரின் தன்மையையும், துன்பங்களுக்கான காரணங்களையும் பகுத்தறிவினால் தெரிந்து, உள்ளத்தால் உணர்ந்து, பேரவா, சார்தரு நோய்கள், சினம் அறியாமை இவற்றை அறவே நீக்கித் தெளிவு பெறுவதேயாகும். மதங்கள் சொல்லும் வீடுபேறு சீவன்முக்தியேயன்றி. அடிசேர்தலோ, பரம்பொருளுடன் கலத்தலோ, நிர்வாணமோ, மீட்சியோ, பிறவா நிலையோ சொல்லப்படவில்லை. வீடு என்று தனியாக எதைப்பற்றியும் தொல்காப்பியம், சங்கநூல்கள், திருக்குறள் பேசவில்லை.

7. வள்ளுவத்தில் உயிர்ப்பு - உயிர் என்பது பிறவியில் புதிதாகத் தோன்றும் இயக்க ஆற்றலே. இறப்பின் அமைதியில் உயிர் முழுமையாக அழிவது - இயக்கம் இழப்பது, உயிருக்கு இறுதி உண்டு. உயிரின் இயக்கம் நின்றபின் உடல் உரு அழிந்து கெட்டு (அணைந்து), அதில் அடங்கியிருந்த தனிமங்களாக (பூதங்கள் - elements) உருமாறுகின்றன. அத் தனிமங்களின் இணைப்பாலேயே (தோல், சதை, எலும்பு, குருதி, நீரால் ஆகிய) புதிய உடல் பிறவியில் தோன்றுகிறது. (ஒருவனுமே உடலோடு உயிர்தானே' என்றார் திருமூலர்.) ஆயின் சில வைதீக மதங்களின் தவறான எண்ணங்களின்படி, உயிர் (ஆன்மா- சீவன்) நிலையானது, அழிவற்றது, இறப்பில் ஆவியாக நீங்கிப் பிற உடலில் புகுவது என்று நம்புகின்றனர்.

8. மதங்களின் கருத்துப்படி, பிறப்பு பாவத்தின் (தொடரும் கர்மவினைகளின்) விளைவு; உலகியல் வாழ்வு துன்பமானது; வாழ்வின் குறிக்கோள் ஆன்மநெறியில் சென்று, தவம், துறவு பூண்டு, பிறப்பறுத்து முக்தி (வீடுபேறு) அடைவதேயாகும். ஆனால், வள்ளுவம் சொல்வது: வாழப்பிறந்தோம், வையத்து வாழ்வாங்கு வாழ்வோம்; துறவை விட இல்லறமே சிறந்தது; அறம், பொருள், இன்பமே முழுநிலை, உயிரச்சம் தேவையற்றது என்று. அறம், அன்பு, அறிவு, ஈகை, ஒப்புரவு, நோன்பு (தவம்) மேற்கொண்டு, பற்றுக்களைத் துறந்து மெய்யுணர்வு எய்துவதே நன்னெறி. பிறவாமை என்பது வாழ்வியலில் துயரம் இல்லாமை; உடம்புடன் நின்று, துன்பம் நீக்கிப்பெறும், நிலைகுலையாத, இடையறா இன்பமே வள்ளுவம் காட்டும் இறுதிநிலை.

9. மதக்கோட்பாடுகள் அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட வழிமுறைகளாகும். (அச்சமே கீழ்களது ஆசாரம். கு. 1075) குறள் நெறியானது, அறம், அறிவு, பண்பாடு, நாணம், மானம் சான்றாண்மை முதலான சீலங்களை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கமுறை.

10. வள்ளுவத்தில் ஊழ் என்பது ஊழியின் இயக்க முறைமை, இயற்கையின் சூழல்-ஆற்றல்; அது மனித எண்ணம். செயல்களுக்கு அப்பாற்பட்டு நிகழும் ஓர் ஒழுங்குமுறை. விதி என்னும்பொழுது, ஆளுமையிலும் சமுதாய இயக்கத்திலும் ஆக்கப்படும் நெறிமுறைக் கோட்பாடுகளைக் குறிக்கும். மதங்கள், ஊழைப் பழம் வினைகளின் தாக்கம் என்கின்றன.





படிப்பகம்

www.padippakam.com



11. சமயங்கள் மாந்தரைத் தனிமைப் படுத்தி அவரவர் விடுதலைக்கான அறங்களைக் கூறுகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல், சாதி வேறுபாடுகள், தீண்டாமை, அடிமைப் படுத்துதல் இவற்றை நீக்கி; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டோருக்கு ஆட்சி, கல்வி, தொழில்களில் உரிய வாய்ப்பளித்து, சமனிலைச் சமுதாயத்தை உருவாக்க வைதீக மதங்கள் அக்கறை காட்டாததோடு, மாறாக அத்தகைய முயற்சிகளை எதிர்த்து மதப் பூசல்களையும் மதவெறியையும், வன்முறையையும் வளர்த்துள்ளன.

பரந்து விரிந்த சமுதாயத்தில் தனிமாந்தர் ஓர்உறுப்பேயாகும். அவர்கள் செயல்பாடுகள் மொத்த சமுதாய நலன் நோக்கி மதிக்கப்படவேண்டும். மாந்தரைச் சூழ்ந்துள்ள சமுதாய அமைப்பிலிருந்து பட்டறிவு உருவாகிறது. இனத்துளது ஆகும் அறிவு -கு 454, பண்பாடே ஆன்ற குடிப்பிறத்தல் - கு 972, கல்வியால் உண்டு - கு 992, உலகத்தில் சமுதாய ஒழுங்கு முறைகள் தேவை கு. 850, பெருமை - சிறுமை பிறப்பால் இல்லை - கு. 972, கல்வியால் உண்டு - கு 409, கல்வியின் நோக்கம் மனிதநேய ஒருமைப்பாட்டு உணர்வு - கு,399, உண்மை அறிவு சமுதாயத்தில் பெறும் அடிப்படை அறிவு - கு. 373, தன் நலனையும் பொது நலனையும் ஒப்ப மதித்தல் நடுவுநிலை - கு 118, சமநிலைச் சீர்மை - கு 120 ஒருவர் ஆற்றும் சமுதாயக் கடமைகள் (கருமம்) அவரவர் பெருமைக்கும் சிறுமைக்கும் உரைகல் - கு. 505; தவம் என்பது தனிமனித நெறியின் சமுதாயப் பண்பு - கு. 265. குற்றம் என்பது தீங்கு செய்தல், தெரிந்தே செய்தல்; அதற்கு தண்டனை தப்பாது உண்டு. மன்னிப்பில்லை (208)

12. திருக்குறளின் முதல்தொகுப்புப் (பாயிரம் அல்லது தனிவாழ்த்தியல்) பாக்கள் கடவுளைச் சுட்டவில்லை. 'கடவுள் வாழ்த்தில் ஒரு பாட்டுக்கூட கடவுள் வாழ்த்தாக அமையவில்லை' என்றார் ம.பொ. சி. வள்ளுவர் கடவுள் கொள்கையைப் பற்றிக் கூறவில்லை - வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள், சான்றோர்கள், பேரா இயற்கை எய்தியவர்கள் என்று புகழ்பெற்ற மாந்தரை முன்னோடிகளாகக் கொண்டு, அவர்தம் நெறிகளைப் பின்பற்றி மக்கள் வாழவேண்டும் என்பது பனுவல்.

13. பிற்கால நூல்களில் குறள் மறையைப் பிறழ்ச்சியின்றி போற்றியது திருமூலரின் தேன்பிலிற்றும் அறிவு நூல் திருமந்திரங்களும், புறத்திரட்டுப் பாடல்களுமே.

14. நாலடியாரின் சமயக் கோட்பாடுகள், வாழ்க்கை மறுப்புக் கொள்கைகள் (principles of life negation) குறள் அறத்திற்கு முற்றும் எதிரானவை.

15. நாதமுனி தொகுத்த ஆழ்வார்களின் பாசுரங்கள், நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருவாய்மொழி, திருஅந்தாதிகளும், நாயன்மார்களின் திருமறைகள், திருவருட்பாக்கள் போன்றவை, வழிமுறைப்பற்று (பக்தி) நெறியின் பல்வேறு பிரிவுகளைப் பின்பற்றித் தமிழில் தோன்றிய சமய இலக்கியங்களாகும். குறட்கருத்துக்களை மேற்கோள் காட்டினாலும் வள்ளுவத்தின் வாழ்வியல் கோட்பாடுகளை அவை முன்நிறுத்த வில்லை.

16. திருக்குறளின் இன்பத்துப்பால், தமிழ் மக்களின் அகவாழ்க்கை நெறிகளைக் களவியல், கற்பியல் என்ற தொகுத்து, ஒருங்கிணைத்த ஒரு ஒப்பற்ற





படிப்பகம்

www.padippakam.com



இலக்கியம். பால் ஒருமைப்பாடு தருவது மெய்யின்பம். சமுதாய ஒழுங்கு, அமைதிக்கு, பால்அமைவு இல்லறத்தில் இன்றியமையாதது. காதலன் காதலி இடையிலான அகத்துறை, தமிழ் மரபைத் தழுவிப் பல உளவியல் நுண்மைகளையும் நாடகக் கூற்று வழக்கில் தருவது வள்ளுவரின் இன்பத்துப் பால். இம்மரபுகள் தொல்காப்பியத்திலும், அகநானூறு போன்ற இலக்கியங்களிலும் விரிவாகப் பேசப் படுகின்றன.

காமத்தைப்பற்றி வடநூல் ஆசிரியர்களான வாத்சாயனர், போசராசர், நந்திகேசவர், உத்தாலகர், பப்ரவியர், கொக்கோகர் எழுதியவை தனித்தனித் துறைகளைப் பற்றியவை. அவற்றின் உட்பொருள், வடிவம், கொள்கைகள், குறளின் இன்பத்துப்பாலிலிருந்து முற்றிலும் வேறுபடுபவை. அறத்துப்பாலும், பொருட்பாலும் வடநூல் கருத்து வழியதே என்று உரைத்த பரிமேலழகர் கூட, இன்பத்துப்பால் பொருளமைப்பால், நாடகபாணியால் வேறுபடுவதால் இது ஒரு வகையால் தமிழ் நூல் மரபினது என, விருப்பின்றி ஒப்புக்கொண்டுள்ளார்.

***19-20ம் நூற்றாடுண்களில் உரை யாசிரியர்கள், மொழியாக்க வல்லுநர்கள், திறனாய்வாளர்களின் பார்வையில் திருக்குறள்:***


1. ஆயர் டபிள்யூ எச். டிரூ, 1840. தமிழ் இலக்கியப் பெட்டகங்களில் தலையாய திருக்குறள், வள்ளுவரின் உயர்வான, தூய்மையான எண்ணங்களின் ஆழ்ந்து மிகுந்த சிறப்பைப் பெற்றது. மனு போன்ற சாத்திரங்களில் காணும் ஆர்வம் குன்றிய செய்திகளை முழுமையாகத் தவிர்த்து, மாந்தரினத்தில் எல்லோருக்கும் பொருந்தும் கருத்துக்களைப் புகுத்தி யுள்ளார்.

2. மான்சுர் எம். ஏரியல், (ஆசிய சஞ்சிகையில்) 1848. பரம்பொருள் இயற்கையின் பூடகங்களை ஆழமாகச் சிந்தித்துச் சொல்லும் தெளிவான எண்ணம் மொழி, செய்யுள் எல்லா வற்றிலும் முழுமையான ஆற்றல் பெற்றவர் திருவள்ளுவர்.

3. ஆய்வு முனைவர் ஃசி.யு. போப், 1886. எல்லாக் காலத்திற்கும் காப்பாற்றப் படவேண்டிய அறிவுப் பெட்டகம் திருக்குறள்; பல தலை முறைகளாகத் தொடர்ந்து பெருமை சேர்ப்பது. வடமொழியிலிருந்து ஒரு செய்யுளைக் கூட மேற்கோளாக வள்ளுவர் எடுத்தாண்டார் என்று சொல்லவாய்ப்பில்லை. குறள் நிச்சயமாக முதுமொழிப் பாடல் தொகுப்பன்று. இது ஒரு உலகறிந்த ஞானியின் முழுமையான, மிகவிரிவான எண்ணங்களின் தொகுப்பு.

4. முனைவர் இலாசரசு, 1892. 'தமிழ் மக்களால் மிக உயர்வாக மதிக்கப்படும் இலக்கியக் கருவூலப் பெட்டகம் திருக்குறள். உலகமெல்லாம் ஒரு நூலாக, அடிக்கடி மேற்கோள் காட்டப் பெறுவதாயினும், குறள் தமிழ் மக்களால் ஆழமாகக் கற்றுக் கடைப்பிடிக்கப் படவில்லை என்பது வருந்தத்தக்கது.

5. எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, 1929, பல ஐரோப்பிய அறிஞர்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகக் குறள் என்னும் கற்பனைக்கு அப்பாற்பட்ட தங்கச் சுரங்கத்தை அகழ்ந்து ஆய்ந்துள்ளனர். 19ம் நூற்றாண்டில் ஃபிரன்சு மொழியில் ஏரியல், இத்தாலியில் (இலத்தினில்) ஆயர் பெச்சி, செர்மனில் முனைவர்





படிப்பகம்

www.padippakam.com



கிராவுல், ஆங்கிலத்தில் ஆயர் டிரூ எல்லிசு, இராபின்சன், ஆயர் ஃசி.யு. போப், ஆயர் இலாசரசு ஆகியோர் இந்த இலக்கியச் சோலையில் புகுந்து, வியந்து மகிழ்ந்து, குறளைச் செய்யுளாக, உரைநடையாகத் தத்தம் மொழியில் ஆக்கம் செய்தனர். தமிழகத்திலும் வ.வே.சு. ஐயர் திருக்குறள் விளக்க உரையுடன் ஆங்கில உரையும் எழுதினார். இவர்களுடைய முயற்சி தத்தம் வழியில் சிறப்புடையவை. எனினும் அவர்கள் யாவரும் பரிமேலழகருடைய உரையைப் பின்பற்றியதால் அதன் குற்றங் குறைகளையும் ஒற்றிக்கொண்டனர். சிலபல இடங்களில் மணக்குடவருடைய உரையானது சொல், பாட விளக்கங்களில் பரிமேலழகரைவிட வேறுபட்டுச் சிறப்பாக உள்ளது. காஞ்சி தமிழ்நூல் வெளியீட்டுக் கழகத்தின் பதிப்பு உண்மையான தமிழ் உணர்வுடைய விளக்கங்களைக் கொண்டுள்ளது.

6. மறைமலை அடிகள்: இன்று வழக்கிலுள்ள பிறப்பு பற்றிய குலவேறுபாடுகள் ஆரியரால் புகுத்தப்பட்டது. திருக்குறளும் திருமந்திரமும் இதைக் கண்டிக்கின்றன.

7. தமிழ்த் தென்றல் திரு.வி.க: திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை; ஒருமைப்படுத்தும் செம்மை அதன்கண் மிளிர்கின்றது. திருக்குறளுக்கு இன்று இருக்கும் உரைகள் பொருந்தா. திருவள்ளுவர் இறைமையை (கடவுள் கொள்கையை)ப் போற்றாத சமணர். சமணக் கோட்பாடுகளை உள்ளடக்கியது இந்நூல். புதியதொரு புதுமைச் சமுதாயத்திற்கு வழிகோலுகிறது. சரியான ஆய்வுகள் இன்னும் திருக்குறளுக்கு எழுதப்பட வேண்டும்.

8. காந்தியடிகள்: திருவள்ளுவர் ஒரு தமிழ் முனிவர். புனிதமான மெய்ம் மொழிகளைக் கொண்டு திருக்குறளை அவர் நமக்கு வழங்கியுள்ளார். 'மனித இனத்தின் சிந்தனையில் முகிழ்த்த சிறப்பும் தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகம்' என்று ஏரியல் அந்நூலைப் போற்றுகின்றார்.

9. பெரியார். ஈ.வே.ரா: **திருக்குறள்** ஒன்றுதான் பாமர **மக்களும்** புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் **தன்மைக்கு உற்ற** ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

10. இராசாசி: மூடப் **பழக்கங்களில்** படிந்து வழிதவறாமல், அறத்தின்பாற்பட்ட பகுத்தறிவுப் பாதையில் வள்ளுவர் சென்றுள்ளார். நம்பிக்கை முடிச்சுகளில் சிக்காமல் அறிவியல் கண்ணோட்டத்தில் உலகைப் பார்த்தார்.

11. யோகி சுத்தானந்த பாரதி: உலகளாவிய உண்மைகளுக்கும் எண்ணங்களுக்கும் உறைவிடமாகி, பண்பாட்டுக் கற்கள் பதித்த, மகத்தான பலவண்ண ஓவியம் திருக்குறள்.

12. அறிஞர் அண்ணா: திருக்குறளைப் பயன்பாட்டுக் குறிக்கோளில் (utilitarian philosopy) பார்க்கவேண்டும். தேவையான வற்றை அறிந்து, தேடி யெடுத்துக் கோவையாக்கிச் செயல்வடிவம் தந்து பயன்படுத்த வேண்டும். குறளில் 100க்கு 90 சமுதாய நோய் தீர்க்கும் மருந்து உள்ளது. மறுமலர்ச்சி பெற்ற புதியதொரு சமநிலைச் சமுதாயத்தை அமைப்பதற்கு வழிகாட்டும் புரட்சிப்பாதை நூல் திருக்குறள். வேகமாக மாறி முன்னேறிவரும் உலகில் நாம் நிலைபெறச் சரியான வழியை வள்ளுவக் கோட்பாடுகளில் காணலாம்.





படிப்பகம்

www.padippakam.com



மீண்டும் குறள்நெறிப்படி, சாதி சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன்வரவேண்டும்.

13. பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை: சமுதாய அறஉரைகளை அறிவிக்கும் முறையில் செல்வது திருக்குறளின் உரிமைப்பொருள். வள்ளுவம் கருத்து மாற்றத்தை அடைவது தடுக்க முடியாதது.

14. கசுத்தூரி சீனிவாசன் : திருக்குறள் காலத்தைக் கடந்த ஒரு காவியம். தொல்தமிழர் நாகரிகத்தின் உன்னதமான கருத்துக்கள், ஒருங்கிணைந்த குறிக்கோள், பண்பட்ட அறக்கோட்பாடுகளையும் படம்பிடித்துக் காட்டும்கண்ணாடி. துறவைவிட இல்லறம் மேலானதென்றும், மதக்கட்டளைகளை விட மனிதப்பண்பாடு, நம்பிக்கையைவிட ஏற்புடைய அறிவும் சிறப்பானவை என்று குறள் வலியுறுத்துகிறது.

15. கலைஞர் கருணாநிதி: அண்டத்தை இன்னும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆராய்ச்சி இன்னும் முடிவு பெறவில்லை; முடிவுபெறாது. அதுவே குறளுக்கும் பொருந்தும்.

16. குன்றக்குடி அடிகளார்: திருக்குறள் ஓர் அறிவுநூல். நம்பிக்கையின் அடிப்படையில் திருவள்ளுவர் எதையும் வற்புறுத்த வில்லை. இறைவழிபாட்டுத் தொகுதியிலும் கூட, உலக இயக்கத்தின்பாற்பட்ட, அறிவுணர்வின் அடிப்படையிலேயே திருக்குறளின் இறைவணக்கம் தோன்றியுள்ளது.

17. முனைவர் வ.சு.ப. மாணிக்கம்: கடவுள் மத நம்பிக்கை கொண்டோர் திருக்குறளைத் தத்தம் சமயத்திற்கும், சாதிக்கும், வருண விளையாட்டிற்கும், ஆரிய வழக்குக்கும், அல்தமிழ் போக்குக்கும் சிதைத்து, நசித்து, வலித்து இழுத்த உரைவன்மங்கள் பல. பொய்யில் புலவரை மெய்யில் புலவராகக் காட்டி, இவ்வுலக வாழ்விற்கு மாசில் அறம் கண்ட வள்ளுவத்தை அவ்வுலகப்படுத்தினர். எழுபிறப்பு, வித்தும் இடல், புத்தேழுலகு, தாமரைக்கண்ணான் உலகு என்றவை பொருட்கவர்ச்சி வழக்குச் சொற்களே, வள்ளுவக் கோட்பாடுகளல்ல. அறம், சமுதாய ஒழுங்கு முறை அமைப்பில் ஏற்றத்தாழ்வுகள் பழவினையால் வருவனஅல்ல, சமுதாயச் சமனின்மையால் வருவனவே என்பது குறள். அறம் என்பது இல்லறமே, துறவறம் என்ற பகுப்பு இல்லை. பகுத்து உண்ணல், பல்லுயிர் ஓம்புதல் சமநிலைச் சமுதாயக் கொள்கை மெய்யான அன்பு என்பது பொதுநலப் பாங்குடைய மனத்திறன். அருள் என்பது உள்ள நெகிழ்ச்சி. ஒழுக்கம் என்பது சாதி வருணப்படி ஒழுகுதல் அன்று. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. தன்மனம் அறிவதை மறுத்துக் கூறுவது பொய்யாகும். இன்சொல், தனி மனிதனின் பொதுநலச் சொல்லாகும்.

18. ஆர்.கே. சண்முகம்: எல்லா நாட்டினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வாழ்க்கை நூல் திருக்குறள்.

19. அணு விஞ்ஞானி முனைவர் அப்துல் கலாம்: உலகமனைத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்தும்படியான அரிய கருத்துக்களை வழங்கியவர் திருவள்ளுவர். அவரும் அணுவைக் கையாண்டார், நானும் அணுவைக் கையாள்கிறேன். அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தி அரிய கருத்துக்களைச் சொல்லியவர் வள்ளுவர் எனது கல்வி மேம்பாடடையவும், எண்ணம் உறுதிப்படவும் குறட்பாக்களே உதவின. அளவிட முடியாத ஆற்றல் நமக்கிருந்து, அதை நேராகச் செலுத்தக்கூடிய அறிவு இல்லாவிட்டால் பேரழிவு. இதை





படிப்பகம்

www.padippakam.com



வள்ளுவர் அற்புதமாக விளக்கி உள்ளார். (அறிவு அற்றம் காக்கும் கருவி.. குறள் 421)

20. முனைவர் தமிழண்ணல்: திருக்குறளில் மூலபாடமே இன்றியமையாதது- அவைகள், உள்ள பொருளைக் காட்டும் கைவிளக்குப் போன்றவை. திரும்பத் திரும்ப மூலத்தைப் பொருளுணர்ச்சியோடு படிப்பதாலேயே வள்ளுவத்தின் உண்மை புலப்படுவதுடன் அதன் வழி நடக்கும் உந்துதலும் ஏற்படும்.

21. ஆல்பர்ட்டு சுவைட்சர்: பிற இந்திய மொழி நூல்கள் வாழ்வின் நிலையாமையை வலியுறுத்த, திருக்குறளோ வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உடன்பாட்டு நிலையை வலியுறுத்தும் நூல். இந்திய நெறிகள் பலவற்றிலும் சிறந்த குறளின் உயிர்ப்பு-பயன்கருதாமை. புத்த நெறி, கீதை நெறியைவிட, மாந்தரின் முயற்சி அறம் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற வள்ளுவரின் அன்பு நெறி சிறந்தது-

22. கார்திகேசு சிவத்தம்பி: சொற்செறிவும் வல்லமையும் கொண்டு பொருட்களின் ஆழமும் தொடர்பும் ஆய்தல்; அரச சமுதாய, மெய்யியல் ஒருமைக் கோட்பாடு; இல்லறவாழ்வில் இருந்து பற்றுக்களைத் துறப்பதே சிறந்த துறவு, இல்லறத்தைத் துறப்பதன்று. படை வீரத்தை முதன்மைப்படுத்திய சங்ககாலப் போக்கிலிருந்து முற்சென்று, நிலையான சமூக உறவுகள் கொண்ட வேளாண்மை முதன்மை வாழ்க்கைமுறை மாற்றம் தொடங்கியது குறள் அறம்.

சமனற்ற சமுதாயநிலை மாற்றம் தோன்றுவதற்குரிய சமூக, அரசியல் மெய்யியல் கோட்பாடுகளைக் குறள் வழங்குகிறது. அரசனை மையமாகக் கொண்ட ஆட்சி முறையிலும், தனிமனித விழுமம், உழைப்பின் சிறப்பு, குடும்ப சமுதாய ஈடுபாடுள்ள மெய்யியல் நீர்மை இவற்றைப் போற்றுவது; அரசியல், பொருளாதார, சமுதாய, பண்பாட்டு மாற்றங்களுக்கு ஒழுங்கான வாய்க்கால் அமைப்பது, மதங்களின் போக்கிற்கு மேலாண்மை தராத நடுவுநிலை, தமிழ்ப் பண்பாட்டுத் தனித்துவம் பற்றிய சிரத்தை, ஆக்கமான அணுகுமுறைகள். தமிழர் வாழ்வு முறைகளில் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளை வெல்லும் கருவி திருக்குறள்.

✧ ✧ ✧




படிப்பகம்

www.padippakam.com



# திருவள்ளுவர் என்ற மனிதர்

முனைவர் ந. முருகேசபாண்டியன்



திருவள்ளுவர் நினைவாகக் குமரி முனையில் 133 அடியில் பிரமாண்டமான சிலை நிறுவி, அவரைப் போற்றுவதற்கு மூலகாரணமாக இருப்பது திருக்குறளாம். திடீரெனத் திருக்குறளுக்குப் பல மட்டங்களிலும் முக்கியத்துவம் தரப்படுகிறது. அதற்கான காரணங்கள் சமூக அடிப்படையிலானவை. புறநெருக்கடியினால் தமிழானது முன்னைவிடச் சிக்கலுக்குள்ளாகியுள்ளது. வெறுமன கவர்ச்சிகரமாகத் தமிழைப் புகழ்ந்திட்ட நிலைமாறி தமிழரின் வாழ்வையும் தமிழ்மொழியையும் அடையாளப்படுத்த வேண்டிய தேவை யேற்பட்டுள்ளது. தகவல் தொடர்பு ஊடகங்கள், உலகநிதி நிறுவனங்களின் ஆளுமை காரணமாகத் தமிழரின் வாழ்வியல்நிலை பெரும் மாற்றத்திற்குள்ளாகும் வேளையில் தமிழை உயர்த்திப்பிடிக்கத் திருக்குறள் முதன்மைப் படுத்தப்படுகிறது. திருவள்ளுவரை ஞானி, மகான், சித்தர், தெய்வப்புலவர் எனவும் திருக்குறளை உலகப்பொதுமறை எனவும் முன்னிலைப்படுத்தும் நிலை தோன்றியுள்ளது. நடைமுறையில் திருக்குறள் என்ற இலக்கியப் பிரதியின் சாரம் என்ன? திருவள்ளுவரின் இடத்தை திருக்குறள் மூலமாக மதிப்பிட வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

மனிதன் தனது சகமனிதரிடம் தொடர்பு கொள்கையில், பின்பற்றப்படவேண்டிய நியதிகளை/ ஒழுக்கத்தைத் திருவள்ளுவர் 2660 வரிகளில் வலியுறுத்துகின்றார். அவை அவரது சமூக அனுபவங்களின் செறிவாகும். சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறி முறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நெறிமுறைக்கும் ஏதோ ஒருவகையில் தத்துவப் பின்புலம் உள்ளது. திருக்குறளை வெவ்வேறு சமயத்தவரும் நமது சமயத்தைச் சார்ந்த இலக்கியமாக



படிப்பகம்

www.padippakam.com


**நடைமுறையில் திருக்குறள் என்ற இலக்கியப் பிரதியின் சாரம் என்ன? திருவள்ளுவரின் இடத்தை திருக்குறள் மூலமாக மதிப்பிட வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.**

உரிமை கொண்டாடுகின்றனர். ஒப்பீட்டளவில் திருக்குறளைச் சமண இலக்கியம் என்று கருதலாம்[1]. எனினும் திருக்குறள் பிரதியானது சமயத்தைப் பொறுத்தவரை பொதுநிலையினையே வலியுறுத்துகின்றது.

திருக்குறள் இரண்டாயிரமாண்டுகளாகத் தொடர்ந்து வாசிக்கப்படுவதன் விளைவுதான் இன்று வரை தோன்றும் நூற்றுக்கணக்கான உரையாசிரியர்களும் அவர்களது மாறுபட்ட விளக்க உரைகளும் ஆகும். அறக்கருத்தினை முதன்மைப்படுத்தும் பல்வேறு அறநூல்கள் வழக்கொழிந்திட்ட நிலையில் அறஇலக்கிய நூலான திருக்குறள் தொடர்ந்து தமிழரிடையே செல்வாக்குப் பெற்றிருப்பதற்கான காரணங்கள் நுணுக்கமானவையாகும். திருக்குறள் எழுதப்பட்ட சமகாலத்திய அரசியல், சமூக நிலைமைகளைச் சித்திரித்தாலும், தனிமனிதனுக்கும் சமூகத்திற்குமிடையிலான அடிப்படை உறவை முதன்மைப்படுத்துவதால் அது காலங்கடந்து வாசிக்கப்படுகிறது.

சங்ககாலத் தமிழரின் வாழ்கையானது இனக்குழு மக்களின் புராதன வாழ்க்கை முறையாகும். இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, குலச்சின்ன வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகள் மக்களிடையே வழக்கிலிருந்தன[2]. சங்க இலக்கியப் படைப்புக்களினூடே 'ஒழுங்கு' வலியுறுத்தப்பட்டது. இனக்குழுவின் நலன் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. சமண, பௌத்தத் துறவிகளின் தமிழக வருகைக்குப் பின்னர் அறத்தினை வலியுறுத்தும் போக்கு ஏற்படுத்தப்பட்டது. வைதீக இந்து சமயத்தினர் உழவுத் தொழிலை இழிவாகக் கருதிய நிலையில், சமண சமயம், உழவைப் போற்றியது. மேலும் அது வணிகர்களின் நலனையும் உயர்வாக மதித்தது. சமூகத்தில் பொருளியல் நிலையில் ஏற்றத் தாழ்வாக மனிதர்கள் வாழும்நிலையில், சமூக அடுக்கின் சமமற்ற நிலையினை நியாயப்படுத்தும் வகையில் சமய பௌத்தத் துறவிகளால் 'அறநூல்கள்' எழுதப்பட்டன. இன்றுவரை தொடர்ந்து எழுதப்படும் அறநூல்களில் 'திருக்குறள்' மட்டும் தனிச் சிறப்புடையதாகத் தனித்து விளங்குவதற்கான காரணங்கள் ஆழமானவையாகும். திருக்குறள் பிரதி காலந்தோறும் மாறிவரும் சமூக மதிப்பீடுகளுக்கேற்பப் பொருந்துவதாக இருப்பதன் மூலம் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. இன்றைய நவீன சிந்தனைகளுக்கு முரண்படும் வகையிலான கருத்துகளும் திருக்குறளில் உள்ளன. எடுத்துக்காட்டாகப் 'பெண்' பற்றிய திருவள்ளுவரின் கருத்தினைப் பெண்ணியவாதிகள் கடுமையாக மறுத்துரைக்கின்றனர். எனினும் திருக்குறள் முன்வைக்கும் அடிப்படைக் கருத்துகள், கெட்டிதட்டிப் போன மனித இருப்பைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. உயிரோட்டமிக்க சொல்லாடலுக்கு இடம் தருவதன்மூலம் திருக்குறள், இன்றும் செயலுக்கானதாக உள்ளது.

திருவள்ளுவரின் சொந்த வாழ்க்கை குறித்துச் செவிவழிச் செய்தியாக வழங்கிவரும் கதைகள் முக்கியத்துவம் இல்லாதனவாகும். திருவள்ளுவரை மாபெரும் ஞானியாகவும், ஒப்புயர்வற்ற தீர்க்கதரிசியாகவும், தெய்வப்புலவராகவும், அய்யனாகவும் போற்றித் துதிபாடும்




படிப்பகம்

www.padippakam.com



**திருக்குறள் பிரதி காலந்தோறும் மாறிவரும் சமூக மதிப்பீடுகளுக்கேற்பப் பொருந்துவதாக இருப்பதன் மூலம் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.**

போக்கு இன்று வலுவடைந்து உள்ளது. திருவள்ளுவருக்குத் தரப்படும் இறைவனுக்கு நிகரான மதிப்பீடுகள், ஒருவகையில் திருக்குறளுக்குப் பிரச்சினையைத் தரக்கூடியன. திருக்குறள் என்ற இலக்கியப் பிரதியானது திருவள்ளுவர் என்ற தமிழ்ப் புலவரால் கவித்துவத்துடன் எழுதப்பட்டது என்பதுதான் உண்மை. திருவள்ளுவர் என்ற மனிதரின் பன்முகத் தன்மையான பார்வையின் விளைவுதான் 'திருக்குறள்' என மதிப்பிடவேண்டும். திருவள்ளுவருக்குத் தரப்படும் அளவுக்கதிகமான 'புனித' மரியாதையானது, திருக்குறள் என்ற வாழ்வியல் நூலை மக்கள் அன்றாட வாழ்வில் சாதாரணமாகப் பயன்படுத்துவதைத் தடுத்துவிடும். திருக்குறளை 'வேதநூல்' என ஒதுக்கி வைத்து வழிபாட்டு நூலாக்குவது திருவள்ளுவருக்குச் செய்யப்படும் பெரிய துரோகமாகும். 'நடைமுறை இல்லாத தத்துவம் மலட்டுத்தனம்' என்ற நோக்கில் ஆராய்ந்தால் திருக்குறளை வாசிப்பதும், அது முதன்மைப்படுத்தும் அறக் கருத்துகளைப் பின்பற்றுவதும்தான் முக்கியமானது. திருக்குறளை நுணுகி ஆராய்ந்தால் மனித வாழ்க்கையின் சகல விருப்பு வெறுப்புகளும் மிக்கவராகத் தான் திருவள்ளுவர் காட்சியளிக்கின்றார். திருவள்ளுவர் மனிதர் என்பது அவருக்கு இழுக்குத் தரும் விஷயமன்று. திருவள்ளுவர் அடிப்படையில் புலவர் அல்லது கவிஞர் என்பதுதான் உண்மை. திருவள்ளுவரின் அறக்கருத்தியல் நோக்கினுக்கு முக்கியத்துவம் தரப்படும் வேளையில், அவரது கவித்துவ வீர்யம் பலராலும் போற்றப்படாத நிலையே உள்ளது. குறளின் அழகையும் கவிதை வெளிப்பாட்டு நிலையை ரசிக்காதபோக்கு, ஒருவகையில் திருவள்ளுவர் என்ற கவிஞருக்குச் செய்யப்படும் அநீதியாகும்.

சமூக மனிதன் வாழவேண்டிய நெறிமுறைகளைச் சுட்டுவதற்காக எழுதப்பட்ட குறளை ஆராய்கையில் திருவள்ளுவரின் இன்னொரு முகத்தை அறிய முடிகிறது. யாராலும் அணுகமுடியாத மகானாக உயர்த்தப்பட்ட திருவள்ளுவர், சாதாரண மனிதராக நம்மிடையே காட்சியளிக்கிறார். அது அவரது இன்னொரு பரிமாணம் ஆகும்.

கல்வியின் சிறப்பை வலியுறுத்தும் திருவள்ளுவர், அதன் தேவைகளை எடுத்துரைப்பதுடன் நில்லாமல், எதிர்மறையாகக் கூறுவதுதான் இங்கு முக்கியமானதாகிறது.

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்"* [3]

கல்லாதவன் முகத்திலிருப்பது கண் அல்ல; புண் எனத் திருவள்ளுவர் திட்டுகிறார். கண்ணின் செயல்பாடு கற்றல் என்பதனை வற்புறுத்த விரும்பிய வள்ளுவர், கண்ணைப் புண் என இடித்துரைப்பது, அவரது தனிமனித அக்கறையின் விளைவாகும் கல்லாதவனை விலங்கு[4] எனக் குறிப்பிடுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. கற்றோர் முன்னால் கல்லாதவன் பேச முயலுவது, முலையில்லாத இளம் சிறுமி காமவயப்பட்டது[5] போல எனக் கடுமையாகக் கூறும் திருவள்ளுவரை முற்றும் துறந்த துறவியாகக் கருதுவது





படிப்பகம்

www.padippakam.com



**சமூக மனிதன் வாழவேண்டிய நெறிமுறைகளைச் சுட்டுவதற்காக எழுதப்பட்ட குறளை ஆராய்கையில் திருவள்ளுவரின் இன்னொரு முகத்தை அறிய முடிகிறது. யாராலும் அணுகமுடியாத மகானாக உயர்த்தப்பட்ட திருவள்ளுவர், சாதாரண மனிதராக நம்மிடையே காட்சியளிக்கிறார். அது அவரது இன்னொரு பரிமாணம் ஆகும்.**

ஏற்புடையதாக இல்லை. திருவள்ளுவருக்குத்தான் வாழும் சமூகத்தின் மீதான கூடுதல் அக்கறையினால் இத்தகைய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். சுரணையற்றுக் கெட்டியாகிப் போன மனிதனின் சமநிலையைக் குலைத்துக் கலகம் செய்வது தான் திருவள்ளுவரின் நோக்கமாக உள்ளது. இதனால் தான் பிறரிடம் அரிய விஷயங்களைக் கேட்டு ஆராய்ந்திடும் மனப்பான்மையற்றவன் செத்தாலும் வாழ்ந்தாலும் என்ன[6] என கோபத்துடன் நம்மை நோக்கி கேள்வியெழுப்புகிறார். அவரது காலத்தில் கல்வி குறித்து அக்கறையற்ற பொதுப்புத்தி நிலவிய சூழலில், விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய கடமை திருவள்ளுவருக்கு இருந்திருக்கிறது. அவ்வடிப்படையிலே தனது அனுபவ அடிப்படையிலான கருத்துகளைப் பாமரனாக விளங்கிய பெரும்பான்மை மக்களிடம் தெரிவித்திடக் கடுமையாகத் திட்டவும் செய்துள்ளார் திருவள்ளுவர். இது எதிர்மறையாக மனிதனை நெறிப்படுத்தும் போக்கு ஆகும்.

அன்பிலாதவர் உடம்பானது என்புதோல் போர்த்தியது[7] எனவும் கண்ணோட்டம் இல்லாத கண்கள் வெறும் புண்கள்[8] எனவும், கண்ணோட்டமில்லாதவர் மரத்திற்கு ஒப்பாவர்[9] எனவும் எனத் திருவள்ளுவர் முன்வைக்கும் கண்டனங்கள் சமூக அழுக்கு நீங்குவதற்காகச் சொல்லப்பட்டனவாகும். திருவள்ளுவர் சினந்து, மக்களைக் கண்டிப்பது, அவரது நடைமுறை வாழ்க்கை கற்றுத்தந்த கசப்பான அனுபவங்களின் விளைவு என்றுதான் கருத வேண்டியுள்ளது.

மானம் இழந்தவர் மயிரனையர்[10] என்ற குறள் வரிகள், மதிப்பு இழந்த மனிதனைக் கேவலமாகச் சித்திரிக்கின்றன. மானம், என்பதற்கான தெளிவான வரையறைகள் இல்லாத நிலையில், இன்று பொது வாழ்வில் நடைபெறும் சம்பவங்களை அவதானிப்பது சிக்கலாகிறது.

உணவுக்காகப் பிற விலங்குகளைக் கொல்லும் போது ஏற்படும் வெட்டினைப் புண்[11] என இழிவாகக் குறிப்பிடுவதுடன் உயிர்க்கொலை செய்பவரைப் புலைத் தொழில் செய்பவர்[12] என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது ஆய்விற்குரியதாகும்.

புலால்மறுத்தலை அறமாக வலியுறுத்தும் சமண சமயக் கருத்தினைக் குறளாக்கியுள்ள திருவள்ளுவரின் நோக்கத்தினை நம்மால் அறிய முடிகிறது. எனினும் இறைச்சி உணவு உண்பவரைப் 'புலையர்' எனத் திட்டுவது, இன்றைய நிலையில் பொருத்தமுடையதன்று. உலக உயிர்கள் மீதான அன்பின் காரணமாகவே, உயிர்களைச் சொல்பவரைத் திருவள்ளுவர் இழிவாகத் திட்டியுள்ளார். இத்தகைய 'திட்டுதலை'த் தொடர்ந்து செய்யும்



www.padippakam.com




திருவள்ளுவர் என்ற மனிதரின் செறிந்த வாழ்க்கையனுவங்கள் கவித்துவம் மிக்க வரிகளாக வெளிப்பட்டுள்ள திருக்குறள் நூலானது மனித வாழ்க்கை குறித்த ஆழமான கேள்விகளைத் தொடர்ந்து எழுப்புவதன் மூலம் காலங்கடந்து வாசிக்கப்படுவதே அதனுடைய சிறப்பினுக்குச் சான்றாகும்.

திருவள்ளுவரை முற்றும் கடந்த முனிவர் என புனிதப்படுத்துவது அவருக்குப் பெருமை சேர்ப்பதாகாது.

கூடாஒழுக்கம் என்ற தலைப்பில் 'மழித்தலும் நீட்டலும் வேண்டா[13]' என்று தள்ளும் துணிவு திருவள்ளுவருக்கு உண்டு. சமண சார்புடைய திருவள்ளுவருக்குத் 'துறவு வேடம்' குறித்து எதிர்ப்புக் குரல் இருப்பது வியப்பாக உள்ளது. உலகம் பழிக்கும் செயல்களைச் செய்யாதிருத்தலே அறமென முதன்மைப்படுத்தும் திருவள்ளுவர், மனிதனுடன் நெருங்கியிருப்பதன் அடையாளம்தான் இது போன்ற குறள்கள் ஆகும்.

'திருக்குறள்' என நினைக்கும்போது அறத்துப்பால், பொருட்பாலுக்குத் தரப்படும் முக்கியத்துவம் காமத்துப்பாலுக்குப் பொதுவாகத் தரப்படுவதில்லை. மனிதவாழ்க்கையின் முக்கிய அம்சமாகக் காதலையும் ஆண் - பெண் உறவையும் கருதியமையால்தான் திருவள்ளுவர் காமத்துப்பாலை எழுதியுள்ளார். காதல், காதலர் மனநிலை, என விரியும் காமத்துப்பாலினை வாசிக்கையில் திருவள்ளுவரின் பன்முகஅம்சங்களை அறிந்துகொள்ள முடிகிறது. காதலின் ஆழத்தை அற்புதமாக எடுத்துரைப்பதுடன் காதலின் இன்பத்தை ரசனையுடன் குறிப்பிடும் திருவள்ளுவரைக் காதலில் துறைபோகியவர் என்று தான் குறிப்பிட வேண்டியுள்ளது. காதலை சுவாரசியப்படுத்தும் இன்றைய புதுக் கவிஞர்களுக்கெல்லாம் முன்னோடியாக திருவள்ளுவர் விளங்குகிறார் என்பது அவரது குறள்மூலம் அறிய முடிகிறது. குறுகிய வரிகளில் காதல் வாழ்க்கையின் மேன்மையைச் சொல்லியுள்ள திருவள்ளுவரைத் துறவி எனச் சட்டமிடுவது பொருந்துவதாக இல்லை. ஆனும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி அன்பு கொண்டு வாழும் வாழ்க்கையின் மேன்மையினை விளக்குவதில் திருவள்ளுவர் உச்சமாக உள்ளார். சங்க காலத்தில் வாழ்வின் பகுதியாகக் கருதப்பட்ட பரத்தையரை வரைவின் மகளிர் என ஒதுக்குவதுடன் பரத்தையருடனான உடலுறவு இருட்டறையில் பிணம் தழுவியது போல[12] என இழிவாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது, அவரது அறச்சிந்தனையின் உயரிய வெளிப்பாடாகும். ஆண் - பெண் காதல் வாழ்க்கையை மிக உயர்வாகச் சித்திரிக்கும் திருவள்ளுவர், பரத்தமை உறவைத் திட்டுவது, அன்றைய காலகட்டத்தில் பெருங்கலகமாகும். சமூகத்தில் பொதுவழக்காக நிலவும் மதிப்பீடுகளுக்கெதிராகத் துணிந்து மாற்றுக் கருத்துகளை முன்வைக்கும் திருவள்ளுவரை கலகக்காரராகவும், நம்மால் அடையாளம் காண முடிகிறது.



சமூக அக்கறையுள்ள திருவள்ளுவர், தான் வாழ்ந்த சமகாலச் சமுதாயம் குறித்த தனது கருத்துகளைத் துணிந்து



படிப்பகம்

www.padippakam.com


கவிதைகளாக வடிவமைத்துள்ளார். அவை வேத, இதிகாச, புராணம், உபநிடதம் போன்று அதியற்புதமான(!) கருத்துகளை முன்வைப்பன அல்ல. ஒரு சராசரி மனிதன், தனது நடைமுறை வாழ்க்கையில் முயன்றால் பின்பற்றக் கூடிய நெறிகளே திருவள்ளுவர் வலியுறுத்துவனவாகும். திருக்குறளின் சாரம், அன்றைய காலகட்டத்தில் மிகவும் துணிச்சலுடன் கெட்டிதட்டிய சமூகத்தின் மீது வீசப்பட்ட கல்லாகும். அவற்றுள் சில இன்றைய சமுதாயத்திற்குப் பொருத்தமற்று வழக்கொழிந்து போயினும், குறளின் ஒட்டுமொத்தப் போக்கு நவீன வாசிப்பில் புதிய அர்த்தங்களைத் தந்து காலங்கடந்து நிற்கிறது. சராசரி மனிதனைப் போல கோபம், வெறுப்பு, அன்பு, தோழமை, காதல், எரிச்சல் எனப் பல்வேறு அம்சங்களையும் குறளில் வெளிப்படுத்தியுள்ள திருவள்ளு வரைத் தெய்வநிலைக்கு உயர்த்துவது பொருந்தாது. திருக்குறளைப் பரந்துபட்ட நிலையில் மக்களிடம் கொண்டுசெல்வது நமது நோக்கமெனில், அதனை நடைமுறை வாழ்க்கைக்கான நூலாக மக்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும். தந்தக் கோபுரத்தின் உச்சியிலிருக்கும் யாருக்கும் விளங்காத தத்துவங்களின் செறிவு என்பது போன்ற பார்வை திருக்குறளுக்குப் பெருமை சேர்க்காது. திருக்குறள் தொடர்ந்து மக்களிடையே வாசிப்பதற்கும் பின்பற்றப்பட வேண்டிய அற நூலாகவும் விளங்க வேண்டுமெனில் அதைப் புனிதப்படுத்திப் பூஜைப் பொருளாக மாற்றிவிடக் கூடாது. தமிழரிடையே திருக்குறள் தொடர்ந்து வழக்கிலிருப்பது அவசியமெனில், திருவள்ளுவருக்குக் கூடுதலாகத் தரப்படும் ஒளிவட்டங்களும் தெய்வீகத் தன்மைகளும் தேவையற்றவை யாகும். திருவள்ளுவர் என்ற மனிதரின் செறிந்த வாழ்க்கையனுவங்கள் கவித்துவம் மிக்க வரிகளாக வெளிப்பட்டுள்ள திருக்குறள் நூலானது மனித வாழ்க்கை குறித்த ஆழமான கேள்விகளைத் தொடர்ந்து எழுப்புவதன் மூலம் காலங்கடந்து வாசிக்கப்படுவதே அதனுடைய சிறப்பினுக்குச் சான்றாகும்.

---

## *சான்றாதாரங்கள்*


1. மயிலை சீனி வேங்கடசாமி, சமயங்கள் வளர்த்த தமிழ் (சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், 1966) பக். 56-63.

2. வீரா. அழகிரிசாமி, தமிழக வரலாற்றில் சமயப் பூசல் (மதுரை: காந்தி மீடியா சென்டர் 1999) பக் 43-44.

3. மதுரை இளங்குமரனார் (2-ஆ), திருக்குறள் (சென்னை: வர்த்தமானன் பதிப்பகம், 1999) பா எண். 393.

4. மேலது, பா எண். 410

5. மேலது, பா எண். 402

6. மேலது, பா எண். 420

7. மேலது, பா எண். 80

8. மேலது, பா எண். 575

9. மேலது, பா எண். 576

10. மேலது, பா எண். 964

11. மேலது, பா எண். 257

12. மேலது, பா எண். 329

13. மேலது, பா எண். 280

14. மேலது பா எண். 913






படிப்பகம்

www.padippakam.com



# குறள் தரும் பொருள்

*செங்கோலரசு*



திருக்குறள் முப்பால் முழுதையும் மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர்களுக்கு தமிழக அரசு திங்கள் தோறும் ரூ 1000/- (ஆயிரம்) வழங்கும் என்ற அறிவிப்பினைத்தொடர்ந்து, மாணவர்கள் இளைஞர்கள் ஆகியோரிடம் குறள்பற்றிய விழிப்புணர்வும் அக்கறையும் ஆர்வமும் எற்பட்டுள்ளது என்று அறியமுடிகிறது. அன்மைக்காலத்தில், திருக்குறள் நூல்விற்பனை பெருகியுள்ளது என்பதே இதற்குச் சான்றாக உள்ளது.

இத்தகைய ஆர்வமுள்ள இளைஞர்கள் முன் நிற்கும் கேள்வி, திருக்குறளை எவ்வாறு முழுதும் மனப்பாடம் செய்வது? என்பதுதான்.

*எளிய பாவினம்*

குறட்பாக்கள் மிகமிக எளிய நடையில், குறள்வெண்பாக்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு குறளும் எதுகை அல்லது மோனைத் தொடையுடன் எழுதப்பட்டவை. எதுகை மோனைத் தொடைகள் அமைந்திருக்கும் செய்யுட்கள் மிக எளிதாக மனப்பாடம் செய்து கொள்ளத்தக்கவை. அதிலும் ஒன்றேமுக்கால் அடியில் ஏழே சீர்கள் கொண்டு அமைக்கப்பட்ட திருக்குறட்பாக்கள் மனனம் செய்வதற் காகவே படைக்கப்பட்டவை.

மற்றபாவினங்கள் போல் நெடிய பாவினங்களின் தொகுப்பன்று திருக்குறள்.

எடுத்துக்காட்டாக, ஆசிரியப்பா, பஃறொடை வெண்பா போன்ற பாவினங்கள் பல நூறு அடிகளைக் கொண்டு தொடர்நிலைச் செய்யுட்களாக அமைந்து நம்மைப் பயமுறுத்தும். எண்சீர்விருத்தம், பன்னிரு சீர்க்கழி நெடிலடி விருத்தம் போன்ற பாவகைகள் இளைஞர்களை மிரட்டும் தன்மை யுடையவாய் இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



இருக்கும் பாவகைகளிலேயே மிக எளிதாக மனதில் பதியும் வகையில் அமைந்த பாவகை வெண்பாப் பாவகையே. அவற்றுள்ளும் குறள் வெண்பாக்கள் மிகமிக எளிமையானவை. எனவே முன்னரே குறிப்பிட்டபடி திருக்குறள்தான் மிக மிக மிக எளிதாக மனப்பாடம் செய்யக் கூடியதாக இருக்கிறது.

குறளின் சிறப்பைப் பற்றிப் பலரும் பலபடக்கூறியுள்ளனர். எனினும் குறளின் சிறப்பை, குறளைப்போலவே எளிமையான சொற்களால்

*'தெள்ளுதமிழ் நடை*
*சின்னஞ்சிறிய இரண்டடிகள்'*

என்று குறிப்பிடுவார் பாவேந்தர் பாரதிதாசன்.

***கவனகத்திற்கு உகந்தது***

கவனகர்கள் (அவதானிகள்) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரே நேரத்தில் பல்வகையான செயல்பாடுகளில் தங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண்டு அதனை உரியவகையில் வெளிப்படுத்தும் வல்லமை படைத்தவர்கள் கவனகர்கள். நம் வாழ்நாளில் நாம் இரு கவனகர்களைக் காணும் பேறுபெற்றவர்களாய் இருக்கிறோம்.

ஒருவர் பதின்கவனகர் பெ. இராமையா அவர்கள். இவர்தம் இளம் அகவையிலேயே கண்பார்வை இழந்தவர். எனினும் கவனகக்கலையில் ஈடுபடுத்திக்கொண்டு அக்கலையில் மிகச்சிறந்த சாதனையாளராகத் திகழ்ந்தார். அவர் அரசவைக் கலைஞர் நிலைக்கும் உயர்ந்தார்.

இவ்வளவு சிறப்புக்கு உரிய அவர் தம்கவனகக் கலைக்கு அடிப்படையாகக் கொண்ட நூல் திருக்குறளே. அதனால் அவர் 'திருக்குறள் பெ. இராமையா' என்றே வழங்கப்பட்டார். குறளின் எந்தப் பகுதியையும் எந்தச் சொல்லையும் எந்தப் பொருளையும் குறிப்பிட்டுக் கேட்கப்படும் கேள்விகட்குச் சரியான விடை அவரிடமிருந்து துள்ளிவரும்.

இவரின் மறைவுக்குப்பின் இந்நாளில், அவர்தம் மகன் இரா. கனக சுப்புரத்தினம் இக்கவனகக் கலையில் நிகரற்று விளங்குகிறார். இவர் பதினாறு கவனகம் நிகழ்த்தும் வல்லமை பெற்றுத்திகழ்கிறார். இவரின் திறமைக்கும் அடித்தளமாக அமைந்தது திருக்குறளே!

ஆகவே திருக்குறள் ஒன்றே கவனகம், மனப்பாடம் செய்வதற்கு இலகுவானது என்பதை நாம் உணர வேண்டும்.

நூல்பற்றிய செய்திகள் ஒரு நூலை மனனம் செய்வதன்முன் அந்நூலைப்பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டும். எந்தநூலுக்கும் இல்லாத சிறப்பு திருக்குறளுக்கு உண்டு.

திருக்குறள் மொழி, இனம், சமயம், நாடு ஆகிய எல்லா நிலைகளுக்கும் அப்பாற்பட்ட பொதுவான கருத்துக்களை விளம்பும் நூல். எந்த நூலுக்கும் இல்லாத 'உலகப் பொது மறை' என்ற சிறப்பு திருக்குறளுக்கே உரித்தானது.

திருக்குறளுக்கு உள்ள மற்றொரு தனிச்சிறப்பு இது 'முதல்நூல்' என்பதே. முதல் நூல் என்றால் என்ன?

எந்த நூலுக்கும் முன்னூலாக ஆதாரமாக ஏதேனும் ஒன்று முன்பே படைக்கப்பட்டிருக்கும். தமிழ்மொழியில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமைவாய்ந்த நூலாகக் கருதப்படுவது தொல்காப்பியம். ஆனால் தொல்காப்பியம் முதல் நூலன்று. இது சற்றே வியப்பையும் முகச்சுழிப்பையும் உண்டாக்கும். எனினும் இது கசப்பான உண்மை. தொல்காப்பியர் தம் ஆசான் அகத்தியரிடம் இலக்கணம் பயின்றவர். அகத்தியர் இயற்றிய இலக்கண நூல் அகத்தியம் எனப்பட்டது. இந்த அகத்தியத்தை ஒட்டியே கருத்துச் செம்மை கொண்ட நூலாகத் 'தொல்காப்பியத்தை'ப் படைத்தார் தொல்காப்பியர்.





படிப்பகம்

www.padippakam.com



ஆனால், திருக்குறள் அப்படிப்பட்ட சார்பு நூலோ வழி நூலோ அன்று! திருவள்ளுவர் ஒரு சுயசிந்தனையாளர். சமுதாய நலம் சார்ந்த அறவியல்புகள், வாழ்வியற் கோட்பாடுகள், அகவியல் நடைமுறைகள் ஆகிய இவைபற்றி நுணுகி நோக்கி ஆழமாக ஆராய்ந்து சொல்லப்பட்ட சிந்தனைக் கருவூலம் திருக்குறள். மனிதனால் மனிதனுக்குச் சொல்லப்பட்ட ஒரே நூல் திருக்குறள்.

### நூல் அமைப்புமுறை

இனி திருக்குறளை எவ்வாறு மனப்பாடம் செய்வது என்பதைச் சிந்திப்போம். திருக்குறள் நூல் அமைப்பை முதலில் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

திருக்குறள் 1. அறத்துப்பால்

2. பொருட்பால்

3. இன்பத்துப்பால்

என மூன்று பால்களைக் கொண்டது.

அறத்துப்பால்: 1. பாயிரம்

2. இல்லறவியல்

3. துறவறவியல்

4. ஊழியல்

பொருட்பால்: 5. அரசியல்

6. அமைச்சியல்

7. அரணியல்

8. கூழியல்

9. படையியல்

10. நட்பியல்

11. குடியியல்

இன்பத்துப்பால்:

12. களவியல்

13. கற்பியல்

என, 13 (பதின்மூன்று) இயல்களைக் கொண்டது.

13 இயல்கள் : 133 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

133 அதிகாரங்கள் : அதிகாரத்துக்குப் பத்துக்குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் கொண்ட நூல் திருக்குறள்.

### என்னால் முடியுமா

1330 குறட்பாக்களா? மனப்பாடம் செய்ய முடியுமா? என்று மலைக்க வேண்டாம்.

*அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்* (611)

எதையும் செய்வதற்குக் கடுமையானது என்று எண்ணிச் சோர்வடையக்கூடாது. அதைச் செய்யமுடியும் என்று முயற்சியுடன் ஈடுபட்டால் பெருமைகிட்டும் என்று கூறியுள்ளார் திருவள்ளுவர்.

திருக்குறளைப் பின்னாளில் எண்ணற்ற இளைஞர்கள் கற்பார்கள்; அனைத்துக் குறளையும் கற்றுத் தேர்ந்து மனத்தில் பதித்துக் கொள்வர். அத்தகு திறமை வாய்ந்த நல்லிளைஞர்கட்குத் தமிழ்நாட்டரசு திங்கள் தோறும் ஆயிரம் வெண்பொற்காசுகள் வழங்கிப் பெருமைப் படுத்தும் என்று தம்நூலை இயற்றிய காலத்தில் திருவள்ளுவர் எண்ணியிருப்பாரோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் அவ்வாறு கற்போருக்குப் பயன்படுவதற்காகவே, அவர்களை ஊக்குவிப்பதற்காகவே மேற்சொன்ன அறிவுரையைத் தம் குறளிலேயே சொல்லி வைத்துள்ளார் திருவள்ளுவர் என்பது உண்மை.

### மனனம் செய்யும் வழிமுறைகள்

மனப்பாடம் செய்வதில் கைக்கொள்ள வேண்டிய பலவழிகளில் முக்கியமான மூன்று வழிகள் உள்ளன.

முதலில் 1. இது

இரண்டாவது 2. இது வந்தால் இது

மூன்றாவது 3. இதற்குப்பின் இது

எப்படி? எடுத்துக்காட்டாக,



முதலில் அறத்துப்பால், அறத்துப் பாலுக்குப் பின் பொருட்பால். பொருட்பால் வந்ததன்பின் இன்பத்துப்பால்



படிப்பகம்

www.padippakam.com



இதைஎப்படி எளிதாக உணர்கிறோமோ அதே போன்றுதான் இயல்களும்.

முதலில் பாயிரம் அதன்பின் 12 இயல்கள். இவற்றுள் அடங்கி 133 அதிகாரங்கள், அவைதரும் 1330 குறட்பாக்கள், என்று தொடர்ந்து வருகின்றன.

முப்பாலின் பெயர்களையும், பாயிரம் உள்ளிட்ட பதின்மூன்று இயல்களின் பெயர்களையும், 133 அதிகாரங்களின் பெயர்களையும் மிக எளிதாக ஓரிரண்டு நாட்களிலேயே மனப்பாடம் செய்துவிட முடியும்.

133 அதிகாரங்களின் பெயர்களை மனப்பாடம்செய்து முடித்து விட்டீர்களே யானால் கோட்டையை வெற்றி கொள்ளப் பாதிதூரம் கடந்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

பிறகு, முதல் குறள் தொடங்கி பத்துப்பத்துக்குறள்களாக மனப்பாடம் செய்யத் தொடங்கவேண்டும். மனப்பாடம் செய்வதில் வேறுசில வகைகள் உள. அவற்றைச் சற்றே நோக்குவோம்.

***ஒளிமனம், ஒலிமனம்***

வெறுமனே 'பார்வைப்படிப்பு' என்றமுறை ஒன்று உண்டு. பார்வைப்படிப்பால் மட்டும் படித்தவற்றை மனதில் பதிய வைத்துக்கொள்ள முடியுமா? எனில் மிகச் சிலருக்கல்ல பலருக்கும் இயலும். அவர்கள் ஒளிமனவாளர்கள் (Videographic mind). அப்படிப்பட்டவர்கள் ஒரு காட்சியைக் கண்ணுறுவார்களே யானால், அக்காட்சி அவர்தம் மனத்திரையில் அப்படியே பதிவாகி விடும். மிக எளிதில் அவற்றை அவர்கள் திரும்பச் சொல்லும், விவரிக்கும் திறன் உடையவராய் விளங்குவர்.

இந்தியத் துணைக்கண்டத்தின் ஆன்மிகக் கோட்பாட்டினை மேனாட்டாருக்கு உரைத்துப் புகழடைந்தவர் விவேகானந்தர். இவர் மேற்சொன்ன



திறன்வாய்க்கப்பெற்றவராக விளங்கினார். எந்தப்புத்தகத்தையும் விரித்துப்பிடித்து அதன் பக்கங்களில் தன்பார்வையைச் செலுத்துவார். பிறகு மூடி வைத்துவிட்டு அந்நூலின் எந்த ஒரு பகுதியிலிருந்தும் கேட்கப்படும் கேள்விகட்கு அப்புத்தகத்தின் வரிகளிலிலேயே உரிய பதிலைச் சொல்லும் ஆற்றல் பெற்றவராக விளங்கினார்.

இந்தத்திறன் அவர் பெற்றுத் திகழ்ந்தமைக்குக் காரணம் அவர் தம் பார்வையை எதில் செலுத்துகிறாரோ அதன் மீது தன்சிந்தனையையும் ஒரு நிலைப்படுத்திக் கொண்டதுதான்.

இந்தத்திறன் நம் ஒவ்வொருவரிடமும் உள்ளே உறைந்து கிடக்கிறது. அதைத்தட்டி எழுப்பிப் பயிற்சி கொடுத்தோமேயானால் சிறப்பாக வெளிப்படும். நம் சிந்தனையையும் பார்வையையும் திருக்குறளின் ஒவ்வொரு பக்கத்தின் மீதும் ஒருமுகப்படுத்துவோமானால் நாமும் விவேகானந்தரின் திறனைப்பெற இயலும்.

சிலர் செவிநுகர்ச்செல்வராக விளங்குவர். ஆம். அவர்கள் ஒலி மனவாளர்கள் (Audiographic minds). இத்தகையவர்கள் ஓசை வடிவில் தாங்கள் கேட்கும் செய்திகளை அப்படியே திரும்பச் சொல்லும் திறனுடையவர்கள். ஓரிரு நூற்றாண்டுகட்கு முன்னர் இதற்கு ஆற்றல்மிக்கவர்களாக இருபெரும் புலவர்கள் வாழ்ந்திருந்தனர். ஒருவர் மாம்பழக்கவிச் சிங்க நாவலர். இவர் அரசவையில் பிற புலவர்கள் பாடும் பாடல்களைச் செவிமடுத்துப் பின்னர் அப்பாடல்களை உடனே திரும்பப்பாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார். இதேபோன்று அந்தகக் கவி வீரராகவர் "ஏடாயிரங்கோடி எழுதாது தன்மனத்து எழுதிப்படித்த விரகன்" என்ற பெயர்பெற்ற செவிச்செல்வர். இவ்விருவருமே பார்வையற்றவர்கள் என்பது சிறப்புச்செய்தி! நாம் முன்னரே குறிப்பிட்டது போல, திருக்குறள் பெ.

www.padippakam.com



இராமையா அவர்களும் பார்வையிழந்தவரே என்பது இங்கு மீண்டும் நினைவு கூரத்தக்கது.

நடிப்பாற்றலில் நிகரற்று, ஒப்பாரும் மிக்காரும் இன்றித்திகழ்பவர் சிவாஜி கணேசன். இவர் சிறந்த ஒலிமனவாளர். பராசக்தி, மனோகரா, கட்டபொம்மன் போன்ற திரைப்படங்கள் உள்ளிட்ட தாம் நடிக்கும் திரைப்படங்களில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் தம்முடைய திரைப்பட உரையாடல்களை எழுதிவைத்து மனனம் செய்வதில்லை. தம்முடைய வசனப் பகுதியை உரிய ஒருவரைப் படிக்கச் சொல்லி செவிமடுத்துக்கொண்டு அவற்றை அப்படியே உணர்ச்சி பொங்கப்பேசி நடித்துவிடுவார்.

### மேலும் சில வழிகள்

திருக்குறளை மனப்பாடம் செய்ய இத்தகைய முறைகளை நாமும் கடைப்பிடிக்க முயலலாம். ஒத்தகருத்துடைய இருவர் எதிர்எதிர் அமர்ந்துகொண்டு, ஒரு அதிகாரத்தை ஒருவர் வாய்விட்டுப்படிக்க மற்றவர் கண்மூடி அவர்முன் அமர்ந்து செவிமடுக்கலாம். அது நெஞ்சில், நினைவில் நன்றாகப்பதியும். இதை மாறிமாறிச் செய்வதால் இருவரும் பயனடையலாம். வாய்ப்புள்ளவர்கள் ஒலிநாடாவில் குறட்பாக்களைத் தங்கள் குரலில் பதிவுசெய்து, பின்னர் ஒலி நாடாப்பெட்டியில் ஓடவிட்டுக் கேட்கலாம். இந்தமுறையிலும் குறட்பாக்கள் மனதில் பதியும் வாய்ப்புஉள்ளது.

ஒரு முறை எழுதிப்பார்ப்பது பத்துமுறை படிப்பதற்கு ஒப்பானது என்று கூறுவர். எனவே அனைத்துக் குறட்பாக்களையும் தம் கையெழுத்திலேயே சுவடியில் எழுதிப்பார்க்கவேண்டும். அப்படிச் செய்கையில் எண்ணம் செயல், பார்வை மூன்றும் ஒருநிலைப்படுவதோடு நம் கையெழுத்திலேயே திருக்குறள் முழுவதையும் பதிவு செய்த பெரும்பேறு பெற்றவர்களாகவும் நாம் ஆவோம்.

### திருக்குறளும் உங்கள் மரபும்

நிறைவாக ஒருகருத்தினை நாம் எல்லாரும் நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டும். திருக்குறளின் ஒவ்வொரு சொல்லும், வரியும், கருத்தும் இரண்டாயிரம் ஆண்டுகாலமாக நம்முன்னோர்களால் படிக்கப்பட்டு, வழி வழியாக நம் மூதாதையரின் உயிரணு, மரபணுக்கள் மூலம் நம்முள் இயங்கிக்கொண்டு இருக்கிறது.

உங்களுடைய குரலில் எங்களை எடுத்து இயம்புங்கள் என அந்தக் குறள்களெல்லாம் வேண்டிவிரும்பிக் கேட்டுக் கொண்டே இருக்கின்றன.

மாணவ மணிகளே, நல் இளஞ்சிங்கங்களே, உங்கள் உயிரணுக்களும், மரபணுக்களும் தங்களுள் ஊறி உறைந்து கிடக்கும் குறட்பாக்களை உங்கள் குரல் வழியே ஒலிக்கத் துடிதுடித்துக் கொண்டுள்ளன. இனி என்ன தடை? குறளைப்படியுங்கள். வாழ்நாள் முழுதும் வாழ வழிவகுக்கும் குறளைப்படியுங்கள்

உங்கள் இனிய குரலில், 1330 குறளையும் ஒப்பியுங்கள்.

வெற்றி அனைவருக்கும் வாய்க்கும்.

வாழ்க வள்ளுவம்.





படிப்பகம்

www.padippakam.com



# காமத்துப்பாலில் புறத்திணைக்கூறுகள்

கருவை பழனிசாமி



திருக்குறள் காமத்துப்பால் களவியல் கற்பியல் கூறுகளைக்கொண்டு முற்றாக அகப்பொருள்சார்ந்த இலக்கியமாகவே போற்றப்படும். சற்று ஆழமாகப் பார்த்தால் புறத்திணைக் கூறுகளும் காமத்துப்பாலில் இடம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

களவியல் எழுஅதிகாரங்களாலும் கற்பியல் 18 அதிகாரங்களாலும் அமைந்த பாங்கு. களவின் சிறுமையையும் கற்பின் பெருமையையும் உணர இடமளிக்கும். புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தின்

*தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால்*
*அம்மா அரிவை முயக்கு (1107)*

என்ற பாடலில் முற்பகுதி புறத்திணைக் கூறும் பிற்பகுதி அகத்திணைக்கூறும் கொண்டுள்ளது வெளிப்படை. சொந்த வீட்டில் குடியிருந்து கொண்டு தன் வருமானத்தில் செலவு செய்து திரட்டிய உணவைச்சுற்றமும் நட்பும் கலந்துண்ணச் செய்துவாழ வாய்ப்பளிப்பது இல்லறம். அரிவைப் பருவத்து (20 முதல் 25 வயதுள்ள) காதலியுடன் கூடியிருந்து காணும் இன்பமும் விருந்துடன் கலந்துண்ணும் இல்லற சுகமும் ஒத்திருப்பதைக் காட்டுவது இக்குறள். பிறர் உழைப்பைச் சுரண்டாமல் பிறருக்குப்பயன் படக்கூடிய உபரிமதிப்புள்ள இல்லற சுகத்தை உலகப்புகழ் காணத்தக்க உவமையாகச் சுட்டியுள்ள பாங்கில் காதலுறவில் பெறக்கூடிய இன்பசுகத்தின் ஏற்றம் பாடுவது இக்குறளின் அடிக் கருத்தாகும். விருந்தோம்பல் அதிகாரத்தில் விரிவாகப் பாடிய செய்தி,

*இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற்பொருட்டு (81)*

என்ற குறளில் தெரிகிறது. இந்த அறவினையைக் காமத்துப்பாலிலும் வழிமொழிவது, கூறியது கூறலா எனில், இல்லை; அதன்பயனாகக் காதலும் ஓர் அறச் செயலாகும் என்பதை உணர்த்திடவும் அறத்தான் வருவதே





படிப்பகம்

www.padippakam.com



திருக்குறள் கடைசி அதிகாரம் ஊடல் உவகை. இது முதன்மையான சமூகமதிப்பிற்குரிய காதல் உறவை நெறிப்படுத்தும் ஆற்றலுடைய அகத்திணைச் சார்புள்ளது.

இன்பம் என்று காட்டிடவுமே ஆகும். இதே புணர்ச்சி மகிழ்தலின் கடைசிக் குறளிலும் அகத்தினைக்கூறும் புறத்திணைக் கூறும் கலந்துள்ளதை அறிய முடிகிறது.

*அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு* (1110)

இக்குறளிலும் காதல் உறவில்பெறக் கூடிய இன்பசுகம் தொடர்ந்து முயலும் கல்வி அறிவு தரும் சுகமான அனுபவத்தோடு ஒத்திருப்பதைக் காணமுடிகிறது. காமத்துப்பாலில் அறிதோறு அறியாமை காண்பதன் மூலம் அறிவுதேடும் கல்விக்கு வரம்புகட்ட முடியாததைப் போன்றது காதல் உறவில்கிடைக்கும் எல்லையற்ற இன்பசுகம் என்ற உலகியல் தெரிகிறது. தொட்டனைத்தூறும் மணற்கேணி மற்ற எடுத்துக் காட்டுவமை வாயிலாக உணர்த்திய முடிவுகாணாத அறிவுப் பரப்புடையது. கல்வி வளர்ச்சி என்ற செய்தி கல்வி என்ற அதிகாரத்தில் விரிவாகப் பேசப்பட்டதையே மீண்டும் காமத்துப்பாலிலும் இடம் பெறவேண்டிய இன்றியமையாமையை உணர முடிகிறது.

திருக்குறள் கடைசி அதிகாரம் ஊடல் உவகை. இது முதன்மையான சமூகமதிப்பிற்குரிய காதல் உறவை நெறிப்படுத்தும் ஆற்றலுடைய அகத்திணைச் சார்புள்ளது; என்றாலும் மருந்து அதிகாரத்தில் கூறப்பட்ட உலகியல் நடப்பைக் காமத்துப்பாலிலும் ஒளியூட்ட வேண்டிய கட்டாயம் தெரிகிறது;

*உணலினும் உண்டதறல் இனிது காமம்*
*புணர்தலின் ஊடல் இனிது.* (1326)

என்ற ஊடல் உவகைத்திருக்குறளின் முற்பகுதி புறத்திணைக்கூறாகவும் பிற்பகுதி அகத்திணைக்கூறாகவும் அறியமுடிகிறது.

*'அருந்தியது அற்றது போற்றி உணின்'*
என்றும்

*அற்றால் அளவறிந்து உண்க* (943)
என்றும்

*'இழிவறிந்துண்பான் கண் இன்பம்'* (946)

என்றும் மருந்து அதிகாரத்தில் பாடப்பட்ட பல்லவியை அதன் உலக நடப்பியல் அருமை நோக்கிக் காமத்துப்பாலிலும் 'உண்டதறல் இனிது' என்று உரத்த சிந்தனை மூலம் வெளியாகிறது. ஊடலின் இன்றியமையை உணர்த்தும் முதன்மையான செய்திக்கு அரண்செய்யவல்ல ஒரு உணவுப்பழக்கமுறையைக் கூறியது கூறலாகப்பழித்து ஒதுக்க முடியாதபடி அதனை நயம்பட எடுத்துக்காட்டுவமையாக இணைத்திருப்பது காமத்துப்பாலுக்கு அணிசேர்த்ததாக அமைந்துள்ளது.

இங்ஙனம் காமத்துப்பால் அறம் பொருள் சார்ந்த நிறைவுப்பாலாகவே உருவாக்கம் பெற்றுள்ளதற்கு மேலும் தக்க சான்றுகள் உண்டு. அதனால் அன்பின் அய்ந்திணையை முன்வைத்துக் களவியலாகவும கற்பியலாகவும் வகைப் படுத்தப்பட்ட காமத்துப்பால் புறத்திணைக் கூறுகளையும் உள்ளடக்கிக் கொண்டு பொலிவு பெறும் இன்பத்துப்பாலாக ஓங்கி உயர்ந்து வான்புகழ் காண வல்லதாகும்.





படிப்பகம்

www.padippakam.com



அன்பு செலுத்திடாமல் விலகியே இருப்பின் அது ஏற்கனவே வாடியுள்ள கொடியை அதன் அடிப்பகுதியை அறுத்து எறிவது போன்றதாகிவிடலாம்.

இத்தகு உளவியல் நுட்பம் தெரியாத ஆடவரும் மகளிரும் ஊடல் நோயைக் கட்டுப்படுத்தாதபோது மனம் விரிசலுக்கு இடம் கொடுத்து மணமுறிவுக்கும் இடம் தரநேரிடும். மக்கள் தொகையில் சிலரா பலரா என்று கணக்கெடுத்துத் தீர வேண்டிய அளவுக்கு இந்த உறவுச் சிக்கல் நிலவுகிறது. நீதி மன்றங்களுக்கு வருவதும், வராமல் வீட்டிலேயே இருந்து வாடுவதும் ஆக மணமுறிவுச்சிக்கல் வழக்குகளாகவும் வழக்கங்களாகவும் இருக்கின்றன. வாழ்நாள் முற்றும் துணையாக இருக்கும் மனைவியை வாழ்க்கை நெறிக்கு உதவுகிறபாங்கில் 'வாழ்க்கைத் துணை' என்று பெயர்சூட்டியதிலிருந்து உணர முடிகிறது. அந்தப் பெயரினையே அதிகாரத்திற்கும் பெயராக்கிப் பெருமை செய்தார் வள்ளுவர். பெண்ணுக்கு மட்டுமா அந்தப் பெருமை? நாகரிகமான சமுதாயத்திற்கும் அந்தப் பெண்ணால் பெருமை வரமுடியும் என்ற நம்பிக்கையின் வரிவாக்கமே காமத்துப் பால் கடைசி மூன்று அதிகாரங்கள். அறத்துப்பால் செய்திக்கும் பொருட்பால் செய்திக்கும் தக்க விளக்கம் தருவதே காமத்துப்பால்.

இருந்து விடாமல் விழிப்போடு ஊடலின் தீவிரத்தைக் குறைக்க வேண்டும். தவறினால் பயிராகச் செழிக்க வேண்டிய காதலை வள்ளிக் கொடியை வேரோடு வெட்டியதாக முடியலாம்.

இவ்வாறு உழவுச் செயல்முறையை முன்வைத்து ஊடலின் வரம்பைக் கட்டுப்படுத்துவதன் இன்றியமையாமையைக் காட்டுவது இக்குறளின் குறிப்பாகத் தெரிகிறது.

*ஊடியவரை உணராமை வாடிய*
*வள்ளி முதலரிந் தற்று.* (1304)

இங்ஙனம் இடையூறுகளையும் வேகத் தடைகளையும் (ஊடலின் பன்முகப்பாங்கு) கடந்து நிலைக்கும் காதல் அன்பு நீரில் நனைதல் தவிர்க்க முடியாதென்பதைக் காட்டும் குறள் ஒன்று உண்டு.

*வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு*
*வீழ்வார் அளிக்கும் அளி* (1192)

உழவு அதிகாரத்தில் நீர்பாய்ச்சுவதை விடாமல் உழவுத்தொழில் முறையின் உள்ளுறுப்பாகப்பாடியவர் வள்ளுவர்,

*ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு* (1038)

அதே நீரின் அருமை, வான் சிறப்பு அதிகாரத்தில் விரிவாகப் போற்றப் பட்டுள்ளது.

✧ ✧ ✧




படிப்பகம்

www.padippakam.com



# கட்டளைக் கல்

புலவர் பூ. அரங்கசாமி




திருவள்ளுவர் செய்த திருக்குறள், காலத்தானும், நாட்டின் வேறுபாட்டானும் பொருள்வேறுபட்டினை வழங்காத உயர்தனிக் குறிக்கோளினைத் தன்னகத்தே கொண்டது. திருக்குறள் எந்நாட்டவர்க்கும் எக்காலத்தாலும் ஏற்றுக் கொள்கின்ற ஏற்புடைக் கருத்தால் விளங்குகின்றது எனப் பலரால் புகழப்பட்டதேயாம். அறக் கருத்துகளையும் ஆன்ற நெறிமுறை களையும், மனிதவினம் உய்யும் வகையில் வகுத்துத் தந்த நூல்கள் பலவற்றுள்ளும் திருக்குறளே தலைமை சான்ற நூல்.

அவரவர் உணர்ந்த வகையில், புலனறிவிற்கு ஏற்றவகையில் தத்தமக்கு ஏற்புடைய கருத்துகளைச் சொல்லிப் போந்தனர். சிலர் மூட நம்பிக்கையை மொழிந்தார் என்றோ பிற்போக்கான கருத்துகளுக்கு முற்போக்கு எண்ணத்தினை வலிந்துரைக்கின்றார் என்றோ, பேய் என்றும் நரகம் என்றும் காட்டலாகாச் செய்திகளைக் காட்டுகின்றார் என்றோ புலம்புகின்றனர். பேய் என்பது உண்டு எனப் பலசெய்திகள் தவறான தகவலாகும் என்று கருதுவாரும் உண்டு. அவர் வாழ்ந்த காலத்து நடைமுறையில் ஏற்பட்ட பழக்க வழக்கங்களைக் கொண்டும் எது சிறந்தது? எனப் பிரித்து வகுத்துக் காட்டியவர் வள்ளுவர் என்பார் கூற்றும் ஏற்புடையதே

*அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று.* (260)

இதில் 'அவி சொரிதல்' என்ற செயலைவிட ஓர் உயிரைக் கொன்று உண்ணாமல் இருத்தல் மிகவும் உயர்ந்தது, என்ற உயரிய அறவினையைப் பிரித்துக் காட்டியுள்ளார். இன்று அவிசொரிதலிலும் அறிவியலடிப்படையிலான மருத்துவப் பயனும் உண்டு என்றும் இயம்புகின்றனர்.



ஆனால் வள்ளுவர் 'அவி சொரிதல்' என்ற பழக்கத்தைப் பற்றி ஆராய்ந்து, எது சிறந்தது? எனச் சிந்தித்து ' உயிர் செகுத்து உண்ணாமை நன்று' என்றார்.



படிப்பகம்

www.padippakam.com



செவியுணவு, அவியுணவு எனவும் கூறிச் செவியிற் சுவையுணர்வோர், கேள்வி யறிவுடையார் 'அவியுணவு பெறும் ஆன்றாரோடு ஒப்பர்'

*செவியுணவிற் கேள்வியுடையார் அவியுணவின்*
*ஆன்றாரோ டொப்பர் நிலத்து*
*(கேள்வி 413)*

அவியுணவு உண்டு அஃது ஆன்றோர்க்காம் எனப் பெறப்படுகின்றது. வள்ளுவத்தில் சொல்லாததில்லை அது வெல்லாததில்லை என்பதனை உள்ளார்ந்த சிந்தனையுடையார்க்கிது எளிதிற் புலனாகாமற் போகா.

உலகத்து இயற்கைப் பொருள்கள் மாறாதிருக்கின்றன. அவற்றினூடே மாறுதல் நிகழுமாயினும் அதுவும் இயற்கையினின்று மாறாததே, அவ்வாறே செயலும் நிகழ்தல் உண்டு. 'அவா அறுத்தல்' என்ற கருத்தை வலியுறுத்த, எழுந்தபோது 'ஆரா இயற்கை' 'பேரா இயற்கை' என்று கூறுகின்றார். 'அவா' என்பது குறையாத இயற்கை என்றும் மாறாதிருக்கும் இன்பம் 'பேரா இயற்கை' என்பதை வெளியிடும்போது

*ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும் (அவா அறுத்தல் 370)*

'அவா' என்பது இயற்கையின் வெளிப்பாடே, அந்நிலையை நீக்க மாறாத இன்பம் கிட்டும் எனப் 'பேரா இயற்கை' என வெளிப்படுத்தினார்.

உலகத்து இயற்கையைக் கூறவந்தவர் 'இருவேறு உலகத்து இயற்கை' அது திரு, தெள்ளியராதல் என இரண்டாகப் பகுத்துள்ளார். இது உலகியலை நுண்ணிதின் உணர்ந்து அறிந்தவரின் வெளிப்பாடே! இன்றைய காலநிலையில், என்றைய காலநிலையிலும்? தெள்ளியர், திருவுடையார் என்ற இருவேறுபட்ட நிலை இருந்தே தீரும். ஒன்றிற்கொன்று தொடர்புடையது ஆயினும் இரண்டும், உளப்பாடு, செயற்பாடு வேறுபட்டதே.

*இருவேறு உலகத்து இயற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு (ஊழ் 380)*

இது காலத்தானும் மாறாம் தன்மையினை அறுதியிட்டு ஊழ் என்ற அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. இது 'உலகத்து இயற்கை' மாற்றவியலா உண்மைதானே.

வினைத்தூய்மை பற்றிக் கூறும் பொழுதும் இவ்வியற்கைத் தன்மை மாறாதிருத்தலை உணர்த்துகின்றார். இன்றைய காலநிலையில் பொருள் தேடுவதில் தூய்மையுடையார் அருகி வருகின்றனர். "நாய் விற்ற காசு குரைக்குமா? வேப்ப எண்ணெய் விற்ற காசு கசக்குமா? தாம் ஈட்டும் பொருட்கும் செயலுக்கும் தூய்மைச் சாயம் பூசிவிடுகின்றனர். நெறியல்லா நெறியில் பொருள் தேடும் செயலை அறநெறி நின்று குறள் உணர்த்துகின்றது. தூய்மையற்ற செயலால் பொருளீட்டுவது 'பசுமட் கலத்தில் நீர்பெய்தது போல' என்ற உவமைமிகப் பொருளாழம் உடையது. பச்சை மண்பாத்திரத்தில் நீரைச் சொரிந்து வைத்திருந்தால், சுடப்படாத பச்சை மண்நீர் ஊறிச் சிறிது சிறிதாகக் கனிந்து, நீரும் மண்ணும் ஒன்றாகி உருவில்லாமல் மறைந்து பயனற்று மண்ணோடு மண்ணாகி விடும்.

*சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமட்*
*கலத்துள் நீர் பெய்திரீஇ யற்று*
*(வினைத்தூய்மை 660)*

'திரீஇ' என அளபெடை கொடுத்திருப்பது உவமையின் திண்மையை வெளிப் படுத்துகிறது.

*பொருள் கருவி காலம் வினையினொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்*



எண்கள் வருகின்ற குறளில் ஒரு வரைமுறை காணப்படுமாறு அமைந் திருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



**வள்ளுவ உரைகல்லிலே உரைத்து அறிந்தவை பலவிருக்கலாம். ஆயினும் உரைக்கப்படாத செய்திகள், கட்டளைக் கல்லில் தோயாத செய்திகள் இருக்குமா? இதை ஆய்ந்து பார்த்தல் அவசியம்.**

ஒன்றுமுதல் எழுபது கோடி என எண்கள் உள்ளன. 'ஒன்றானும்' என்றதில் பழுதாகிய மந்திரி பக்கத்திருத்தல் எழுபது கோடிப் பகைவர்க்கு நிகர் என்ற எல்லை எண்ணிப் பார்த்து இன்புற வேண்டிய ஒன்றாகும். மேலும் எண்வருகின்ற குறள் வரிகளில் சீர்வைப்பு முறையில் முன்பின்னாய்க் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டால் அவை தருகின்ற வலிமை குன்றிப் போகும்.

பொருள், கருவி, காலம், வினை இடன் என்ற ஐந்தினை நிரல்படுத்தி வைத்திருப்பது, ஒவ்வொன்றின் முதன்மையையும், பயன்பாட்டையும் எண்ணியன்றோ! இப்பாடலின் பொருள் ஆழத்தை அறிந்து இன்புறுவது எவ்வாறெனில், சிறந்த செயலில் பெருமுயற்சியில் ஈடுபட்டுப் பட்டறிவால் உணர்ந்தவர்க்கன்றி எவரும் முழுமையும் உணர்ந்து இன்புறவியலாது. கற்றலால் அறிந்து கொள்ளாத கருத்தினைத் தாம் பெற்ற துன்பத்தினாலேயே அறிந்து கொள்ள இயலும்.

நாட்டில் நடைபெறும் அரசாட்சிக்கும் மக்களின் மனப்போக்கிற்கும் செயல் பாட்டிற்கும் ஏற்றாற்போல் உலகில் சில நிகழ்வுகள் ஏற்படுகின்றன, என்பது திருவள்ளுவரின் அசைக்கவியலா நம்பிக்கை. பூமியில் வாழும் மாந்தரின் செயற்பாடுகள் ஒழுக்கநெறிகள் பண்பாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப இயற்கையிலும் மாறுதல் நிகழ்கின்றன.

இது போழ்து உலகில் பரவலாகப் பூமி அதிர்ச்சி, எரிமலைச் சீற்றம், வெள்ளப் பெருக்கு, கொள்ளை நோய், இவை



இயற்கையின் மாறுபாட்டில் தோன்றுவ தாயினும், ஆட்சியாலும், பண்பாட்டு ஒழுக்க நெறிப்பிறழ்வின் காரணமாக விளைகின்றன.

*பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்*
*அஃதின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்.*

*அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்*
*நின்றது மன்னவன் கோல்*
(செங்கோன்மை 453)

*ஆபயன் குன்றும் அறுதொழிலோர்*
*நூல்மறப்பர்*
*காவலன் காவான் எனின்* (560)

கொள்ளைநோய், நிலநடுக்கம் போன்ற சீற்றங்களால் எத்தனை உயிர்கள் மொத்த மொத்தமாக மண்ணுக்குள் புதைக்கப் படுகின்றன. அந்தணர் செய்யும் அறத்திற்கும் அறுதொழில் நூல் மறப்பதற்கும், ஆட்சி நல்லாட்சி இன்மையே காரணம் என்றும், பசுவின்பால் உலகில் மிகத் தூய்மையான பொருள் அதுவே பயன்குன்றிவிடும் என்று எச்சரிப்பது ஆட்சியின் குணநலன்களில் தூய்மைத் தன்மையின் அவசியத்தை வலியுறுத்தும்.

இதை அறிவால் அறிவதை விட உணர்வால் உணர்ந்தால் முழுத்தன்மையும் விளங்கும். நுண்மாண் நுழைபுலத்தோடு உலகின் ஒழுக்க நெறிகளின் மாற்றங்களையும் மரபு நெறிகள் பிறழ்வதையும் உணர்ந்தவர் ஏற்றுக் கொள்வர்.

காலமறிதல் என்ற அதிகாரத்தில் தெளிந்த அறிவு பெற்றோர் தக்க தருணம் எதிர்நோக்கும் நிலையை,



படிப்பகம்

www.padippakam.com



*பொள்ளென ஆங்கே புறம்வேரார்*
*காலம்பார்த்*
*துள்வேர்ப்பர் ஒள்ளி யவர் (காலமறிதல் 490)*

'பொள்ளென ஆங்கே' என்பதனைப் 'புள்ளென ஆங்கே' என்பதனைப் 'புள்ளென ஆங்கே' புறம்வேரார்' எனப் பாடங்கொண்டு பொருள்காணுவாரும் உளர். புள்நூல் (பஞ்சபட்சி) கணிதப்படி தக்ககாலம் பார்க்கின்ற தன்மையும் உண்டு. பஞ்சபட்சியில் வல்லூறு, ஆந்தை, கோழி, காகம், மயில் என்ற ஐந்து பறவைகளின் செயல்களான உண்டு, நடந்து, உலகாண்டு தூங்கி, சாகும் எனவும் அடிப்படை கொண்டு போரில் பயன்படுத்தி வென்ற செய்திகளும் காணக்கிடக்கின்றன. உள்வேர்த்துச் செயல்படும் தன்மையினையும் புள்நூல் அறிந்தோர் மிகத் தெளிவாகக் கூறுவதைக் காணலாம்.

அறிவின் ஆற்றலால் உலகின் பற்பல புதுமைகள் நிகழ்ந்துள்ளமை யாவரும் அறிந்ததே! வீட்டு அடுப்படி முதல் விண்கோள் வரை வியத்தகு அறிவியல் வளர்ச்சி கண்டுள்ளோம். இந்த அறிவியல் செய்திகள் நம் வள்ளுவத்தில் காணக்கிடக்கின்றனவா? இஃது எக்காலத்திற்கும் பொருந்துமெனில் இதற்கான அடிப்படைக் கூறுகளுக்கான கூற்றுகள் காணப்படவேண்டும்.

நம் நாட்டில் வாழ்ந்த சித்தர்கள், மெஞ்ஞானிகள் மட்டுமல்லர், விஞ்ஞானி களுமாவார். அறிவியல் செய்திகளை சித்தர் பாடல்களால் அறியலாம். ஆனால் அதற்கான பொறியியலைக் காணாமல் தவறியது நம்மவரின் குறைபாடே யொழிய வேறில்லை.

உலக மொழிகளிலெல்லாம் அறிவைப் பற்றிப் பற்பல கருத்து விளக்கங்களைத் தெளிவுபடுத்தியிருப்பினும் 'அறிவை ஒரு கருவி' என எவரும் குறிப்பிட்டதில்லை. ஒரு கருவியே பலகருவிகளைத் தோற்றுவிக்கமுடியும். அதனாலே அறிவைக் கருவி என்று குறிப்பிட்டமையால் அறிவியலுக்கு அறிவியலாக வள்ளுவம் விளங்குகின்றது.

*அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்க லாகா அரண் (அறிவுடைமை 421)*

மருத்துவ உலகத்தில் ஒரு காலகட்டத்தில் சிறப்பாகப் பயன்பட்டவை, பின்பொரு காலத்தில் பயனற்றவை யாகின்றன. பிணிநீக்குவதில் உண்மை என்று கண்டவைகூட மாறான முடிவை உண்டாக்குகின்றன, உண்டாக்கும் எனக் கண்டறியப்படுகிறது.

வள்ளுவத்தில் மருந்து அதிகாரத்தில் 'வளி' முதலாக எண்ணி, மிகினும் குறையினும் நோய் செய்தல், அருந்தியது அற்றது போற்றல், அளவறிந்து உண்ணல், அற்றது அறிந்து கடைப்பிடித்து ஒழுகல், மாறுபாடில்லா உண்டி மறுத்துண்ணல், என நோய்அணுகாது தடுக்கும் முறையும், கழிபேரிரையான் கண்ணே நோய் எனவும் போன்ற நெறிமுறைகளை வகுத் துள்ளவை வருமுன் காக்கும் என்ற வகையில் எடுத்துச் சொன்ன அறிவுரையாகும். இது இன்றும், என்றும் பொருந்துவதாகும்.

மருத்துவருக்கு அறிவுரையாக நோய் நாடல். நோய்முதல் நாடல், அதுதணிக்கும் வாய் நாடல் வாய்ப்பச் செய்யும் தன்மையும் கூறுகிறது. மருத்துவர்க்கு ஆன குறிப்பாக நோய் உற்ற அளவு, காலம், கற்றான் கருதல், நோயுற்றான், நோய் தீர்க்கும் மருத்துவர் மருந்து, அருகே இருந்து மருந்து கொடுக்கும் செவிலியர் பாகுபாடுகள் செய்து தந்துள்ளமை எக்காலத்திற்கும் மருத்துவ உலகிற்கும் பொருந்துவதாக உள்ளது. மருத்துவத் துறையைச் சார்ந்த எவராலும் மறுத்துக் கூறவியலாத மருத்துவக்கொள்கை, கோட்பாடுகள்.



அறத்துப்பாலில் உள்ள 380 பாடல்களும் உட்பொருளைப் பட்டறிவால்



படிப்பகம்

www.padippakam.com



உணர்ந்த அறச்சான்றோரின் கருத்துகள் அத்துணையும் ஒருசேரத் திரட்டி வைத்துள்ள பெருமை வள்ளுவத்திற் கேயுண்டு. பொருட்பால் 700 பாடல்களும் வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்து விளைவுகள் நிகழின் அதற்கான தீர்வுகளும் பரந்து கிடக்கின்றன. இன்பத்துப்பால் 250 பாடல்களும் உள்ளுந்தொறும் ஊற்றென உள்ளத்தே இனிக்கும் தன்மையது. இவையெல்லாம் அறிந்தோ உணர்ந்தோ பாடியிருக்க இயலுமா? அவ்வாறாயின் ஒரு சிறுபட்டறிவைப் பெற எவ்வளவு காலமாகும்? இவற்றிற்கு விடைகாண வியலாததால் தான் தெய்வப் புலவர் என்கிறோம்.

உலகத்தத்துவமேதை சாக்ரடீசை அறிவாளி என கிரேக்கத் தெய்வம் 'அப்போலா' கூறியது. அதன் பின்னரே தான் அறிஞர் என அறிந்துகொண்டார் என அறிகிறோம்.

திருவள்ளுவர்போல் அனைத்துத் துறையிலும் தெளிந்த அறிவுபெற்றவர் எவருமிலர் எனலாம். அவரால் சொல்லாததில்லை. அவர் வாயிற்சொல் வெல்லாததில்லை என நாம் எண்ணினாலும் வள்ளுவர் வாய்ச் சொல்லென்ன? 'எவ்வளவுதான் குற்றமறக் கற்றுப் புலமை பெற்றவராயினும் ஆராய்ந்து பார்த்தால் அவரிடமும் அறியாமை வெளிப்படும். இதோ குறள்:

*அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்*
*இன்மை அரிதே வெளிறு*
*(தெரிந்து தெளிதல் 503)*

இதுவென்ன தன்னடக்கமா? நுண்ணிதின் ஆய்ந்து நோக்குங்கால் பாரதி கூற்று 'வள்ளுவர் போல் பூமிதனில் யாங்ஙனுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை' இது எவ்வளவு பொருத்தமானது.

ஒவ்வொருவர் வாழ்விலும் வள்ளுவத்தில் தத்துவம், படிப்பினையைத் தந்திருக்கும்.

*நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை அறிவே மிகும்*

இதுபோன்றே ஒவ்வொருவருக்கும் வினைப்பாட்டின் இறுதி முடிவிலும் பெறுகின்ற வெற்றி அல்லது தோல்வியின் போதும், பட்டறிவிற்கு ஏற்றவகையில் ஒவ்வொரு சீரின் பொருளும் ஓர் உண்மையை உணர்த்தி நிற்கும்.

*கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை*
*நீட்டி யளப்பதோர் கோல்*
*(நட்பாராய்தல் 796)*

அணு விஞ்ஞானி அப்துல்கலாம் அவர்கள், 'ஒவ்வொரு காலத்திலும் எனக்குக் குறள் வழிகாட்டியாய் அமைந்தது. இவ்வளவு உயர்விற்குக் காரணமே வள்ளுவர் தந்த தமிழ்மறைதான்" என்றார்.

வள்ளுவத்தில் கையாளும் உவமை, பொருளுக்குச் சிறந்த விளக்கந் தருவதாக அமைவதோடு, வேறொரு உவமை ஏற்புடையதாக இல்லாமையையும் உணர்த்தும்


*'மக்களே போல்வர் கயவர் அவரன்ன*
*ஒப்பாரி யாங்கண்ட தில்' (கயமை 1071)*

'மக்களே போல்வர் கயவர்' என்ற உவமையில் கயவருக்கு மக்களை உவமை கூறியிருப்பது எவ்வளவு சிறப்புடையது!

'வறுமையைப் போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்' என்றார் இளம்பூரணர். வள்ளுவமோ 'இன்மையே இன்னாதது', இன்னாததற்கு இன்மையே என்று கூறியது சிந்திக்கற்பாலது.

*இன்மையின் இன்னாதது யாதெனின்*
*இன்மையின்*
*இன்மையே இன்னா தது (நல்குரவு 1041)*

வறுமையில் துன்பப்படுவாரின் துன்பநிலையினை, நெருப்பினுள்ளும் தூங்கி விடலாம். வறுமையில் கண்மூடவும் முடியாது எனவும், ஒவ்வொரு நாளும் படும் வேதனையை இன்றுபோல் நாளையும் வருமோ? என





படிப்பகம்

www.padippakam.com



உள்ளத்தால் உள்ளி, துன்பத்தினை எண்ணி வருந்துகின்ற நெஞ்சத்தின் உணர்வினைச் சொல்லோவியமாக விளக்கிட முடியாது. பசிக்கொடுமையில் வாடித் துவண்டவர்க்கன்றி எவராலும் உய்த்துணரமுடியாது. வறுமைவாய்ப்பட்டு துன்புற்றவரின் நிலையினை வள்ளுவம் போல் எந்நூலும் கூறியதில்லை. சுடர்விட்டு எரியும் நெருப்பினுள்ளும் தூங்கி விடலாம்; வறுமைத் துன்பத்தில் கண்மூடவும் கூட இயலாது.

*நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்*
*யாதொன்றும் கண்பாடு அரிது*

*(நல்குரவு 1049)*

வள்ளுவ உரைகல்லிலே உரைத்து அறிந்தவை பலவிருக்கலாம். ஆயினும் உரைக்கப்படாத செய்திகள், கட்டளைக் கல்லில் தோயாத செய்திகள் இருக்குமா? இதை ஆய்ந்து பார்த்தல் அவசியம். கட்டளைக் கல்லைச் சிலர் 'கட்டாயக்கல்' எனப் பொருள் கொண்டு விளக்குவோரும் உண்டு. கட்டளைக் கல்லா? கட்டாயக்கல்லா என்ற ஆய்விற்குச் செல்லவிரும்பவில்லை.

இம்மண்ணுலகில் அரிய ஆய்வு மேற்கொண்டு பஞ்சபூத நுட்பங்கள் கண்டு தெளிந்தனர். ஆயினும் இந்த நூற்றாண்டில் அரியதும் அற்புதமாகவும் விளங்குவது படைப்பையே தலைகீழாக்கிக் காட்டும் படியாக்கமுறை (குளோனிங்). ஓர் உயிரின் உடலினின்று ஒருமரபணுவை (TNA) எடுத்து அதே போன்ற ஓர் உயிரை உண்டாக்கிக் காட்டி உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ளனர் விஞ்ஞானிகள். ஓர் உயிரியின் உடலிருந்து ஒரு மரபணுவை எடுத்து அதே போன்ற உருமாற்றமற்ற ஓர் உயிரியை உண்டாக்கியது உலகைப் பெருமை கொள்ளச் செய்தது.

உலகப் பொதுமறையான திருக்குறளிலே இது பற்றிப் பேசப்படுகிறதா? எங்காவது அடிகோலப் படுகிறதா? 'அமைச்சு' என்ற அதிகாரத்தில்

*செயற்கை அறிந்த கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்து செயல் (அமைச்சு 637)*

என்ற பாடலில் தீப்பொறி போன்று ஒரு குறிப்பு காணப்படுகின்றது. செயற்கையின் எல்லையை அடைந்து வெற்றி கண்ட போதும், உலகத்தில் இயற்கையானவற்றை அறிந்து தானே செய்யமுடியும்!

இருப்பது எதையும் அழிக்கமுடியாது புதிதாக எதையும் உருவாக்க முடியாது (Nothing can be destroyed Nor created) இதுவே விஞ்ஞானத் தத்துவம்.

ஒரு இயற்கையான பொருள் இல்லாமல் செயற்கையான ஒன்றை உருவாக்கிட இயலாது, என்பது தெள்ளத் தெளிவாக்குகின்றது. இதுதான் 'உலகத்து இயற்கை அறிந்து செயல்' என்ற வரி உணர்த்துகின்றது. படியாக்க முறை (குளோனிங் முறை) மட்டுமல்லாது எதிர்வருகின்ற காலங்களிலும், வளர்ந்து வருகின்ற அறிவியல் செய்திகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் இதையே அறிவியல் கருத்தாகக் கொள்வதில் தவறில்லையன்றோ!

சான்றாண்மைக்குக் கட்டளையாகக் தோல்வி துலையற்ற கண்ணும் கொளல் வேண்டும்; வள்ளுவத்தின் பெருமைக்கும் திருவள்ளுவரின் பேராற்றலுக்கும் இன்னும் எத்தனையோ புதையல்கள் காணலாம் உலகநன்மை வழி வகுத்ததில் வள்ளுவத்திற்கு நிகரில்லை.

*சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி*
*துலையற்ற கண்ணும் கொளல்*

*(சான்றாண்மை 986)*

*பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்.*

✧





படிப்பகம்

www.padippakam.com



# ஊழலை ஒழிக்க வள்ளுவர் கூறும் வழிகள்

மு. சதாசிவம்



நம்நாட்டில் அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்திருக்கும் பேய் ஊழல்தான். ஊழலைப் புற்றுநோய் என்றுங் கூறலாம். அப்புற்று நோய் இந்தியத் திருநாட்டின் பெருமையை உலக அரங்கில் அரித்துக் கொண்டு வருகிறது. இப்புற்றுநோய் இப்போது புரையோடிப் போய்விட்டது. இந்நோய் வராமல் தடுப்பதற்கான வழிகளை அன்றே திருவள்ளுவர் பெருமான் கூறிப்போந்தார்.

### ஊழலின்வேர்


ஊழலின் ஆணிவேர் தன்னலமே. தான், தன் பெண்டு பிள்ளைகள், தன் குடும்பம் மட்டும் நன்றாக வாழ வேண்டும் என்ற தன்னலமே ஊழல்களுக்கெல்லாம் அடிப்படை. தன்னலமில்லாதவர்கள் ஊழல் புரிய மாட்டார்கள். தன்னைப் போலவே பிறரையும் நேசிப்பவர்கள் ஊழலில் ஈடுபட மாட்டார்கள்.

### ஊழலின் அவதாரங்கள்

ஊழ் என்றால் நெறி, நியதி, முறை. ஊழ்+அல்=ஊழல் என்பது நெறியல்லா நெறி; முறையல்லா முறை. எவையெவை முறையல்லவோ அவையெல்லாம் ஊழலின் பாற்படும். ஊழல் பற்பல அவதாரங்களை எடுக்கின்றது.

கையூட்டு என்பது ஊழலின் மூத்த தலைமகன். பிறர்க்குத் தெரியாமல் - கைக்குள் ஊட்டிவிடப்படும் பணமே கையூட்டாகும். வரதட்சணை, சீதனம் என்பவையும் ஊழலின் பூதாகார வடிவங்களே. இவ்வுலகில் தன்னலம் இருக்கும்வரை ஊழல் ஒழியப்போவ தில்லை. முற்றுந் துறந்த முனிவர்களைத் தவிரத் தன்னலம் இல்லாதவர்கள் யார்? எனினும் தன்னலத்தைப் பிறர் நலங்கருதி விட்டுக் கொடுக்கும்போது ஊழல் மறைந்துவிட முயல்கிறது.

### வள்ளுவர் காட்டும் வழிகள்



ஊழலை ஒழிப்பதற்கு வள்ளுவர் பல வழிகளைக் காட்டுகிறார். ஊழலால் ஏற்படும் கேடுகளை எடுத்துக்



படிப்பகம்

www.padippakam.com



கூறுகிறார். ஊழல் செய்யாதவர்களுக்கு ஏற்படும் பெரும் புகழையும், இன்பத்தையும், பெருமையையும், புண்ணியத்தையும் எடுத்துக் காட்டுகிறார். ஊழல் இல்லாத சமுதாயத்தையே காணவிழைகிறார்.

*அறத்தான் வருவதே இன்பம்*

பொருளீட்டும் வழிகள் பலவாயினும், இன்பம் பெறும் வழிகள் பலவாயினும் அறத்தின் வழியில் ஈட்டிய செல்வமும், இன்பமுமே உண்மையான இன்பத்தைக் கொடுக்கும், புகழையும் கொடுக்கும் என்கிறார். ஊழல்வாதிகளுக்கு இன்பமும் இல்லை; புகழும் இல்லை என்று எச்சரிக்கை செய்கிறார்.

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல (39)*

என்கிறார். இதே கருத்தை வலியுறுத்தி எப்போதும் எதைச் செய்தாலும் அறத்தின் வழிப்பட்ட செயல்களையே செய்ய வேண்டும். இல்லாவிடில் பழியே மிஞ்சும் என்று கூறுகிறார்.

*செயற்பால தோரும் அறனே; ஒருவற்கு*
*உயற்பால தோரும் பழி. (40)*

*வறுமையைப் போக்க ஊழலில் ஈடுபடக் கூடாது*

ஒருவன் தன் கடும் பசியைப் போக்கிக் கொள்வதற்காகத் திருடுவது குற்றமாவது போலவே தன்னுடைய வறுமையைப் போக்குவதற்குக் கையூட்டுப் பெறுவதில் தவறில்லை என்று கருதுவதும் குற்றமே. கையூட்டுப் பெறாதவன் வறுமையில் உழன்றாலும் அந்த வறுமையை நல்லவர்கள் சிறுமையாகக் கருத மாட்டார்கள். வறுமையிற் செம்மை உடையவர்களை உலகமே போற்றும்.

*கெடுவாக வையாது உலகம் நடுவாக*
*நன்றிக்கண் தங்கியான் தாழ்வு (117)*

இதன் பொருள்: நடுவு நிலையாக நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு என்று கொள்ளாது உலகம்.



இன்னொரு குறள்:

*இன்மை ஒருவற்கு இளி அன்று சால்புஎன்னும்*
*திண்மை உண்டாகப் பெறின் (988)*

*வெஃகாமை*

பிறர் பொருளை வெளவுதலின் மூலமே ஊழல் உற்பத்தியாகிறது. ஆதலின் ஊழலை ஒழிக்க வேண்டின் வெஃகாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். வெஃகாமை என்ற அதிகாரம் முழுதும் ஊழலை ஒழிக்கும் வழிகளைக் கூறுகிறது. அவற்றுள் ஒரு குறள்.

*அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்*
*வெஃகி வெறிய செயின் (175)*

இதன் பொருள்: யாரிடத்திலும் பொருளைக் கவர விரும்பிப் பொருந்தாதவற்றைச் செய்தால், நுட்பமானதாய் விரிவுடையதாய் வளர்ந்த அறிவால் பயன் என்ன?

*கள்ளாமை*

ஊழலை ஒழிப்பதற்கென்றே 'கள்ளாமை' என்ற அதிகாரம் முழுதும் (261-270) நல்ல அறிவுரைகளை வள்ளுவர் கூறுகிறார். அவற்றுள் மிகச் சிறப்பான குறள் இதுதான்:

*உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்*
*கள்ளத்தால் கள்வேம் எனல் (282)*

இதன் பொருள்: குற்றமானதை உள்ளத்தால் எண்ணுவதும் குற்றமே. அதனால் பிறன்பொருளை அவன் அறியாத வகையால், 'வஞ்சித்துக் கொள்வோம்' என்று எண்ணாதிருக்க வேண்டும்.

கையூட்டு வரதட்சணை முதலியனவும் பிறரிடமுள்ள பொருளை வலிந்து பற்றுவதால் ஒருவகையான திருட்டே யாகும்.



படிப்பகம்

www.padippakam.com



*'வேண்டாமை என்னும் விழுச் செல்வம்'*

கையூட்டுக் கேட்டுப் பெறுவதால் செல்வம் கிடைக்கும் என்பது உண்மையாயினும் அது சிறந்த செல்வமாகாது, தவறான வழியில் ஈட்டப் பெறுவதால் வேண்டாம் என்று கூறுவதால் செல்வங் கிடைக்காமற் போயினும் அதுவே சிறந்த செல்வம் என்கிறார் வள்ளுவர்.

*வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
*யாண்டும் அஃதுஒப்பது இல் (363)*

இதன் பொருள்: வேண்டாம் என்று கூறுவது போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை; வேறு எங்கும் அதற்கு நிகரான ஒன்று இல்லை.

ஊழலால் வருவது இன்பமன்று; அது துன்பத்துள் துன்பம் என்கின்றார்; ஊழலை ஒழித்து வருவதே ஓயாத நல்லின்பம் என்று கூறுகிறார்.

*இன்பம் இடையறாது ஈண்டும்; அவாவென்னும்*
*துன்பத்துள் துன்பம் கெடின் (369)*

*குற்றங்கடிதல்*

குற்றங்கடிதல் என்ற அதிகாரத்திலும் ஊழலை ஒழிக்கும் சில வழிகளை வள்ளுவர் கூறுகிறார்.

பழியஞ்சுபவர்கள் ஊழலில் ஈடுபட மாட்டார்கள் என்று கூறுகிறார். தன்னைப் பிறர் குறை சொல்லாது புகழ்ந்து பேசுவதையே எவரும் விரும்புபவர்; ஊழல் புரிந்தோருக்குப் புகழ் இல்லை. அவர்களை உலகம் பழித்தொதுக்கும்.

*தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பழிநாணு வார் (433)*

உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களையே ஆராய்ந்து செய்ய வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.



*எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் (470)*

*வினைத்தூய்மை*

எப்போதும் தூய்மையான செயல்களையே நாம் செய்ய வேண்டும். ஊழல் புரிதல் தூய்மையான செயலன்று. அதை எப்போதும் நீக்குதல் வேண்டும் என்று அறிவுறுத்துவார் திருவள்ளுவர்.

*என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு*
*நன்றி பயவா வினை (652)*

பெற்ற தாய் பசியோடிருப்பினும் ஊழலில் ஈடுபடாதே என்கிறார்.

*ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை (656)*

*தீதின்றி வந்த பொருளா?*

கையூட்டால் பெறும் செல்வம் தீதின்றி வந்த பொருள் ஆகாது. அதை வெறுத் தொதுக்க வேண்டும். அருளோடும் அன்போடும் சிலர் கொண்டு வந்து தரும் காணிக்கைப் பொருள்களைத் தவிரக் கையூட்டுப் பொருள்களைக் கனவிலும் கருதக் கூடாது என்கிறார் திருவள்ளுவர். கையூட்டுப் பொருளை ஏற்காமல் மறுத்துவிட வேண்டும் என்கிறார்.

*அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து*
*தீதின்றி வந்த பொருள் (754)*

*அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆக்கம்*
*புல்லார் புரள விடல் (755)*

நல்லவர் ஊழலில் ஈடுபட மாட்டார்கள் என்று வள்ளுவர் கூறுகிறார்.

*சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு*
*பேராண்மை வேண்டு பவர் (962)*

கையூட்டுப் பெறுபவரை, ஊழலில் ஈடுபடுபவரைப் பண்பில்லாதவர் என்று வசைபாடுகிறார் வள்ளுவர். அவருடைய



படிப்பகம்

www.padippakam.com



பெருஞ்செல்வம் நஞ்சு கலந்த பாற்குடமாகிவிடும் என்று எச்சரிக்கை செய்கிறார்:

*பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
*கலந்தீமை யால்திரிந் தற்று (1000)*

இவ்வாறு வள்ளுவர் திருக்குறளில் பல்வேறிடங்களில் ஊழலைக் கண்டித்துக் கூறுவதுடன் ஊழலை ஒழிக்கும் நல்வழிகளையும் எடுத்துரைக்கிறார். கையூட்டுப் பெறுபவரும், கையூட்டுத் தருபவரும் இருவருமே ஊழல்வாதிகளே. இருவருமே தவறான வழியில் செல்பவர்களே. கடமையுணர்ச்சி, சமுதாயப் பொதுநல நோக்கம், தன்னலமின்மை ஆகிய பண்புடையோரே ஊழலில் ஈடுபடாத உத்தமர்கள் ஆவர்.

## *அண்மை வெளியீடுகள்*

1. "Thirukkural" English Translation
   Introduction and Notes
   K.C. Agamudai Nambi,
   VanjiMalar, Anbu Nagar,
   Madurai - 625020.
   Price Rs. 100.00

2. "திருக்குறள்" தெளிபொருள் விளக்கம் பொழிப்புரையுடன் பேராசிரியர் திரு கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எம்.ஏ.எம்.எல்., திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிட். 154, டி.டி.கே. சாலை, சென்னை - 18.
   விலை உருபா 30.00

3. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொகுதி-1, திருக்குறள், முதன்மைப் பதிப்பாசிரியர் தவத்திரு பொன்னம்பல அடிகளார்,
   மணிவாசகர் பதிப்பகம், 8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108.
   விலை உருபா 75.00

4. திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலர் - கன்னியாகுமரி.
   குமரி மாவட்டத் திருக்குறள் ஆய்வு மையம் 'துவாரக் ஏ 125, அரசு அலுவலர் குடியிருப்பு காந்திநகர், நாகர்கோவில் - 629 002. நன்கொடை உருபா 20/-

5. வாழ்க்கை விடியல் திருக்குறள் கருத்தரங்கச் சிறப்பு மலர்
   முனைவர் பா. வளன்அரசு
   உலகத் திருக்குறள் மையம்
   கன்னியாகுமரி.

6. திருக்குறள் - நூல்கள்
   தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை.

7. குறளமுதம்
   தமிழ் வளர்ச்சி இயக்ககம்
   குறளகம்; சென்னை - 600 108. விலை உருபா 130/-

8. கோட்டம் முதல் குமரிவரை
   குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மலர்க்குழு.
   விலை உருபா 100/-

9. தமிழ்மறை,
   திருக்குறள் தமிழ் பண்பாட்டுக்கையேடு,
   தமிழின எதிர்கால வழிகாட்டி,
   A Publication of International Tamil Language Foundation.

10. 'திருக்குறள் - எளிய தெளிவுரை'
    புலவர் தனுஷ்கோடி MA., MPhil,
    பிரண்ட்ஸ் (Friends) ஆப்செட்
    காலண்டர்ஸ், 39, பந்தர் தெரு,
    சென்னை - 1
    முதற்பதிப்பு: பிப்ரவரி 2000
    விலை உருபா 20/-





படிப்பகம்

www.padippakam.com



# புயலைத் தாண்டினால் தென்றல்

ஏ.பி.ஜே. அப்துல்கலாம்




திருக்குறள் என் வாழ்வில் இணைந்த மிக முக்கிய வாழ்க்கைச் சித்தாந்தம். என் மாணவப் பருவத்தில் நான் அறிந்த திருக்குறள், என்னுடைய வாழ்வில் முக்கிய அங்கமாகி, என் மனதில் லட்சியப் பொறிகளை உருவாக்கியது.

1946இல் ஸ்வோர்ட்ஸ் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது என்னுடைய தமிழ் ஆசிரியர் திருமலைக்கண்ணன், வினைத் திட்பம் 67-வது அதிகாரத்திலிருந்து 666-வது திருக்குறளைப் பாடிப்பாடி பரவசப்படுத்தினார். அன்று மனத்தில் பதிந்த குறள், என் வாழ்வில் லட்சியங்களைக் கொண்டு வரும் விண்கலம் போன்றதோர் சக்திமிக்க குறளானது.

*எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்*

இக்குறள்தான் என் வாழ்வின் அஸ்திவாரமானது. எனது விஞ்ஞானப் பணியில் ஒவ்வொரு காலகட்டத்திலும் சோதனைகள் சோர்வுறச் செய்தபோது, உள்ளத்துக்கு உரமூட்டிய குறள் இது. நம் நாட்டின் பல விஞ்ஞானிகளின் எண்ணங்கள் பல வடிவங்களில் உருவெடுத்து அக்னி எழுச்சி பெற்று, ஏவுகணைச் சக்தியாக மலர்ந்தது. நம் நாடு பல துறைகளில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறது. செயலில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

நான் படித்த திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிக்குக் கடந்த புதன்கிழமை போயிருந்தேன். ஒரு மாணவர் என்னிடம் ஒரு வினா எழுப்பினார். 'செய்தித்தாள் களிலும் தொலைக்காட்சியிலும் உங்களைப் பார்க்கும்போதெல்லாம் சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே. வாழ்க்கை எப்போதும் இனிப்பாக இருக்க முடியுமா?' என்று அவர் கேட்டார்.



நான் சொன்னேன் : "ஒவ்வொருவரின் வாழ்விலும் பல புயல்களையும் மிகச் சில தென்றல்களையுமே எதிர்கொள்ள நேர்கிறது. ஒரு தென்றலின் சுகத்தை



படிப்பகம்

www.padippakam.com



நம் எண்ணங்கள் உறுதியானால் அவை உழைப்பாக மாறி, நாம் எண்ணிய லட்சியத்தை அடையலாம். இக்கருத்தைப் பலவிதங்களில், தெளிவு உரைகளில் மறைநூல் திருக்குறள் உணர்த்தக் காணலாம்.

நோக்கிச் செல்லும்போது, பல புயல்களைக் கடக்க வேண்டியிருக்கிறது. தோல்வியில்லாமல் வெற்றியில்லை. கண்ணீர் எப்போதும் கரிப்பாகவே இருக்கும். ஆனாலும் ஓரிரு சமயங்களில் அது இன்பமாகவும் இருக்கும். அந்த இன்பம் பெற வேண்டுமானால் பல புயல்களைக் கடக்கும் உள்ளஉறுதியைப் பெற வேண்டும். நம் எண்ணங்கள் உறுதியானால் அவை உழைப்பாக மாறி, நாம் எண்ணிய லட்சியத்தை அடையலாம். இக்கருத்தைப் பலவிதங்களில், தெளிவு உரைகளில் மறைநூல் திருக்குறள் உணர்த்தக் காணலாம்."

கூட்டு முயற்சியின் பலனாகப் பத்து ஆண்டுக் கனவை நனவாக்கிய 'தமிழ்மறை திருக்குறள்' நூலைப் படித்தேன். என் கையிலிருக்கும் இப்புத்தகம் எவ்வாறு உருவாகியிருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தேன். அந்த நூலைப் படிக்கப்படிக்க எனக்கு வேண்டிய பதிலும் கிடைத்தது. இப்புத்தகம் ஒரு லட்சியத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறது. லட்சியமே உழைப்பாக மாறி, பல நல்ல உள்ளங்கள் ஒன்று கூடி, உருவாக்கி அமைத்த லட்சிய வெற்றி இது. பத்து ஆண்டுத் தவப்பயன் நாம் காண்பது.

என் வாழ்க்கையில் ஓர் அரும்பெரும் விஞ்ஞானியுடன் பணி செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த விஞ்ஞானி 'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' என்ற குறளுக்கு ஓர் உதாரணமாக இருந்தார். 1963இல் இந்தியா எந்தவித விஞ்ஞான வளர்ச்சியைப் பெறும் முன்பே, எப்படி இந்தியாவை வளமான நாடாக மாற்ற முடியும் என்ற எண்ண எழுச்சியைப் பரப்பினார். அவரின் ஒவ்வொரு எண்ணமும் மூச்சும் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் சுற்றியே இருக்கும். அவர் பெயர் சாராபாய். அவர் 'இஸ்ரோ' என்ற இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பை இந்த நாட்டுக்குக் கொடுத்தார்.

1969இல் 'கம்யூனிக்கேஷன் சாட்டிலைட்' எனப்படும் தொடர்புச் சாதன செயற்கைக் கோள்களை எந்த நாடும் வான வெளியில் ஏவிவிடவில்லை. அந்தக் கால கட்டத்திலேயே, இந்தியா எப்படி பெரிய ராக்கெட்டுகளைக் கொண்டு தொடர்புச் சாதன செயற்கைக் கோள்களை ஏவ வேண்டும் என்ற வானவெளி ஆராய்ச்சித் திட்டத்தை வெளியிட்டார். அந்த மாபெரும் விஞ்ஞானியின் தலைமையில் எங்களுக்குப் பணிபுரியக் கிடைத்தது பெரிய வாய்ப்பாகும். விக்ரம் சாராபாயின் எண்ணங்களில் உருவான வான்வெளி ஆராய்ச்சித் திட்டம், 25 ஆண்டுகளில் பல ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் நாட்டில் தோன்றக் காரணமானது. இன்று நம் நாடு பல விதமான செயற்கைக் கோள்களை உருவாக்கி, மிக முக்கியமான வானவெளித் தொடர்புச் சாதனைகளை ஏற்படுத்தி, அது வானவெளி ஆராய்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் அடிக் கல்லாக அமைந்துள்ளது.

விக்ரம் சாராபாய் ஒரு தொலைநோக்கு கொண்ட விஞ்ஞானி. அந்த விஞ்ஞானிக்கு அணிவிக்க மலர் மாலையாக 60-வது அதிகாரத்திலிருந்து 595-வது குறளைக் கூற விரும்புகிறேன்.





படிப்பகம்

www.padippakam.com



'பயனில சொல்லாமை' என்ற அதிகாரத்தில் கடைசிக் குறளைப் படிக்கும்போது, என் உள்ளத்தில் எழுச்சி ஏற்பட்டது. இக்குறளைப் படித்தவுடன், திருவனந்தபுரத்தில் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இயக்குநராக இருந்த பேராசிரியர் பிரம்ம பிரகாஷ் நினைவுக்கு வந்தார்.

*வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத்து அனையது உயர்வு*

விக்ரம் சாராபாய் 30 ஆண்டுகளுக்கு முன் உயர்ந்த லட்சியத் திட்டங்களை வெளியிட்டார். அப்போது அது ஒரு கனவாகத் தோன்றியது. அந்தக் கனவு எண்ணங்கள் உயர்வான லட்சியங்களாக மாறி, விண் திட்டமாகி, இன்றைக்கு நமது செயற்கைக் கோள்கள் ஒவ்வொரு நாளும் நிமிஷமுமாகச் செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொலைநோக்கு விஞ்ஞானியின் வெற்றி, இந்திய விஞ்ஞானத்தின் வெற்றி. இந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் காரணம், நம் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒவ்வொரு நாளும் இக்குறள்கள் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். இதுவே எண்ணங்களைச் செயல்களாக மாற்றி, உள்ள உறுதியைக் கொண்டு லட்சியத்தை அடைய இளைய தலை முறைக்குத் தூண்டுதலைக் கொடுக்கும்.

திருக்குறள் காட்டும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் வாழ்வின் முக்கிய அம்சங்களைக் கொண்ட கையேடு. இப்புத்தகத்தின் மூலம் ஆயிரக் கணக்கானோர் மேன்மேலும் குறள்களை ஆராய்ச்சி செய்து பல புதிய எண்ணங்களை உலகிற்குக் கொடுக்க வேண்டும். திருக்குறள் ஒரு கடல் போன்றது. அதில் எல்லாச் செல்வமும் உள்ளது.

'பயனில சொல்லாமை' என்ற அதிகாரத்தில் கடைசிக் குறளைப் படிக்கும்போது, என் உள்ளத்தில் எழுச்சி ஏற்பட்டது. இக்குறளைப் படித்தவுடன், திருவனந்தபுரத்தில் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் இயக்குநராக இருந்த பேராசிரியர் பிரம்ம பிரகாஷ் நினைவுக்கு வந்தார். 1972-இல் இந்தியாவின் முதல் ராக்கெட் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் தலைமைப் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. அப்போது எனது இயக்குநராக இருந்த பேராசிரியர் பிரம்ம பிரகாஷ் என்வாழ்க்கை நெறிக்கு வழிகாட்டிய இக்குறளுக்கு முன்னு தாரணமாக இருந்தார். அக்குறள்:

*சொல்லுக சொல்லின் பயனுடைய*
*சொல்லற்க*
*சொல்லின் பயனிலாச் சொல்*

இந்த நாட்டுக்குத் தேவையான மிக முக்கியமான அணு உலை உலோகப் பொருள்களை ஆராய்ச்சி மூலம் உருவாக்கி உற்பத்தி செய்து கொடுத்தவர் அவர். உலோகப் பொருட்களை உற்பத்தி செய்யும் விஞ்ஞானத்தில் தலைசிறந்த விஞ்ஞானி. எவ்வளவு பெரிய திட்டமானாலும் சிறந்த ஆராய்ச்சி விளைவுகளானாலும் அவர் சக விஞ்ஞானிகளை, குறிப்பாக இளம் விஞ்ஞானிகளைப் பேசத்தூண்டி, அவர்களது எண்ணங்களைக் கேட்கத் துடிப்பார். எந்த ஒரு விஞ்ஞானக் கலந்துரையாடலிலும் அவர் பேசுவது ஒரு சில வார்த்தைகளே. இதனால் பலர் தங்களது எண்ணங்களைத் தங்கு தடையின்றி வெளிப்படுத்தவும் தங்களது திட்டங்களை உறுதிபட விளக்கவும் வாய்ப்பைத் தந்து அதே நேரத்தில் தனது முடிவை வெகுவிரைவாகக் கூறி, அதற்கான வழிமுறைகளைச் சொல்லுவார். இப்படியாக அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் ஓர் ஆழ்ந்த கருத்தைக் கொண்டதாக





படிப்பகம்

www.padippakam.com



திருவள்ளுவர் ஒரு நாட்டின் தத்துவஞானி அல்ல. உலகத் தத்துவ ஞானி. அவர் மதங்கள், மார்க்கங்களுக்கு அப்பாற்பட்டவர். எந்த மொழிக்கும் அப்பாற்பட்டவர். அப்பெரும் மகான் தந்துள்ள உலகத்தின் மறை நூலை, அவரின் சிந்தனைகளை, எண்ண எழுச்சிகளை என்றென்றும் நினைவு கொண்டு ஆய்வுப் புத்தகங்கள் பல தோன்றி மக்களின் வாழ்வைச் சிறப்புறச் செய்யட்டும்.

இருக்கும். கேட்பது அதிகம்; பேசுவது குறைவு. இதனால் குறைந்த நேரத்தில் முடிவெடுக்க முடியும். அந்த மகானின் அரும்பெரும் குணம், அவரிடத்தில் பணி செய்த ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் அடிநாதமாக அமைந்து எப்போதும் பயனுடையதாகவே பேசவும் எண்ணவும் செயல்படவும் செய்தது. ஒரு விஞ்ஞானியோ தொழில் தலைவரோ அல்லது ஆசிரியரோ தன் வாழ்வில் உயர உயரப் பயன்இலாச் சொல் சொல்லாமை என்ற குணத்தை வளர்த்து இளைய தலைமுறையினரின் கருத்துகளை வெளிவரச் செய்யவேண்டும். அவர்களுக்கு ஊக்கமளித்துப் பயனுள்ள சொற்களையே சொல்வதற்கும் சிந்திப்பதற்கும் செயல் படுவதற்கும் வழிகாட்டி, வாய்ப்புகளை அளிக்க வேண்டும். இக்குறளின் சாற்றை ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர்கள் குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டும். கல்விப்பயிற்சி நிலையங்களில் ஆசிரியர்கள் இதை மாணவர் மனத்தில் பதியச் செய்து எல்லோர் வாழ்விலும் மலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் நம் மக்களின் சக்தி பன் மடங்காக வளர முடியும். வளர்ந்த நாடாக இந்தியா பரிணமிக்க வேண்டும்.

2200, ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவரால் அளிக்கப்பட்ட திருக்குறளில் ஓர் இடத்திலாவது ஒரு நாட்டைப் பற்றியோ ஒரு மதத்தைப் பற்றியோ தாய்மொழி தமிழைப் பற்றியோ எந்தக் கடவுளைப் பற்றியோ ஒரு சொல்கூடக் கூறப்படவில்லை.



திருவள்ளுவர் ஒரு நாட்டின் தத்துவஞானி அல்ல. உலகத் தத்துவ ஞானி. அவர் மதங்கள், மார்க்கங்களுக்கு அப்பாற்பட்டவர். எந்த மொழிக்கும் அப்பாற்பட்டவர். அப்பெரும் மகான் தந்துள்ள உலகத்தின் மறை நூலை, அவரின் சிந்தனைகளை, எண்ண எழுச்சிகளை என்றென்றும் நினைவு கொண்டு ஆய்வுப் புத்தகங்கள் பல தோன்றி மக்களின் வாழ்வைச் சிறப்புறச் செய்யட்டும்.

இவ்விழா ஒரு புதிய கூட்டு வழிபாடு. இச் சூழ்நிலையில் எனது பிரார்த்தனையைச் சொல்கிறேன்:

இறைவா, நல்வாழ்வு ஈந்த இறைவா, உன் அருளை எண்ணிஎண்ணித் தொழுகிறேன்.

இறைவா, என் பெற்றோர்களுக்கும் என்னுடைய ஆசிரியர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் என்றென்றைக்கும் பெருவாழ்வு கொடுத்து ஆசீர்வதிப்பாயாக.

இறைவா, என் நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழ, நல்ல எண்ணங்களை உற்பத்தி செய்வாயாக.

இறைவா, மதங்கள் மக்களைப் பிளவுபடுத்தாமல் அவர்களை இணைக்க மதத் தலைவர்களுக்கு நல்லருள் புரிவாயாக.

இறைவா, நம் நாட்டின் தலைவர்கள், அவர்களைவிட நாட்டை முக்கியமாக எண்ண, அவர்களின் எண்ணங்களில் மலர்ச்சி தீபம் ஏற்றுவாயாக.

இறைவா, என் நாட்டு மக்களுக்கு உள்ள உறுதியைக் கொடுத்து



படிப்பகம்

www.padippakam.com



கல்வியிலும் தொழிலிலும் விவசாயத்திலும் கணிப்பொறித் துறையிலும் உயர்ந்த நாடாக, வளர்ந்த நாடாக உழைத்து முன்னேற அருள் கொடையைக் கொடுப்பாயாக.

(கட்டுரையாளர், பிரதமரின் அறிவியல் ஆலோசகர்; சென்னையில் 14.5.2000-இல் நடைபெற்ற தமிழ்மறை திருக்குறள் நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய தலைமை உரை)

*நன்றி - தினமணி*

# திருவள்ளுவரும் சுயவேலை வாய்ப்பும்

**வா**ழ்க்கை வளையத்தைத் தாண்டி ஆசைகள் தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றன. அவை வெறும் ஆசைகளாகவே நின்றுவிடுகின்றன. சிறிது காலம் இருந்து மறைந்தும் விடுகின்றன. ஆனால் ஆசைகளுக்கு வடிவமைத்து அதைப்பற்றிச் சிந்திக்கிறவர்கள் மிகச் சிலரே. அவர்களும் கூட உழைக்கவேண்டும். அதைத் தொடர்ந்த முயற்சியில் தோல்வி ஏற்பட்டால், மற்றவர்களின் ஏளனத்திற்கு ஆளாக நேரிடுமே என்று எண்ணுகிறபோது, ஆசைகளை கைவிடத் துணிகிறார்களே தவிர அதை நிறைவேற்றும் முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதில்லை.

மற்றவர்களைச் சார்ந்தே நாம் வாழப் பழகிக் கொண்ட மனோபாவம் நம்மைவிட்டு மாற வேண்டும். நமக்கு அமைவதுதான் வாழ்க்கை என்று எண்ணுவதைவிட, நாம் அமைத்துக் கொள்வதுதான் வாழ்க்கை என்கிற எண்ணம் வர வேண்டும். அதைத் தொடர்ந்த முயற்சியே சுயவேலை வாய்ப்பாகும். 'என்னிடம் மூலதனம் இல்லையே! என்ன செய்வது?' இக்கேள்விக்கு டால்ஸ்ட்டாயின் இந்தப் பதிலைப் பாருங்கள்!

### *நீயே உன் மூலதனம்*

ரஷ்ய அறிஞர் டால்ஸ்ட்டாயிடம் ஓர் இளைஞன் வந்து "ஐயா! எனக்கு உழைச்சுப் பிழைக்க ஆசைதான். ஆனால் மூலதனம் எதுவுமில்லை. கொஞ்சம் பணம் கொடுத்து உதவி செய்யுங்கள்" எனக் கேட்டான்.

டால்ஸ்ட்டாய், "நூறு ரூபிள் தருகிறேன்; ஆனால், நீ உன் சுண்டு விரலைத் தரணும்" என்றார். "சுண்டு விரலா?" என்றான். "ஆயிரம் ரூபிள் தருகிறேன்". ஒரு காலைத் தரணும் "காலா"? என்றான். "பத்தாயிரம் ரூபிள் தருகிறேன். ஒரு கண்ணு வேணும்". "கண்ணா?" என்று பயந்து கேட்டான்.

வந்தவன், டால்ஸ்ட்டாயை நோக்கி "உங்க பணமே வேண்டாம்"னு கிளம்பத் தயார் ஆகும்போது, அவர் "சகோதரா! 'உன்னிடம் விலை மதிக்க முடியாத அங்கங்கள் இருக்கு. ஆனால் என்னிடம் எதுவும் இல்லை' என்று நீ சொல்லுவது எவ்வாறு நியாயம் ஆகும்? அது தான் மூலதனம், பயன்படுத்து" என்றார். வந்தவன் "ஐயா, தாங்கள் எனது அறிவுக் கண்ணைத் திறந்து விட்டீர்கள். எனது உடலைக் கொண்டு உழைத்து முன்னேறுவேன்" எனக் கூறிச் சென்றான்.

டால்ஸ்ட்டாய் கூறிய கருத்து புதுமையாகவும், புரட்சிகரமாகவும் தோன்றலாம். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இதே கருத்தைத் திருவள்ளுவர் கூறி இருக்கிறார் என்றால் நமக்கு வியப்பாக இருக்கிறதல்லவா? சுய வேலைவாய்ப்பு என்கிற கருத்தை முதன் முதலில் உலகிற்கு அறிமுகம் செய்த வைத்தவர் நமது திருவள்ளுவர்தான் என்றால் மிகையில்லை. அவர் என்னதான் சொல்கிறார் பாருங்களேன்!

*இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலம் என்னும் நல்லாள் நகும்*

*(குறள் - 1040)*

தம்மிடம் பொருள் இல்லையென்று சொல்லி அசையாது சோம்பி இருப்பவரைக் கண்டால் நிலமகள் என்னும் நல்லவள் தனக்குள்ளே சிரிப்பாள்.

திருவள்ளுவர் காலம் மன்னராட்சிக் காலம். 'வேலை வேண்டுமானால் அரசனைக் கேள்!' என்றுதானே சொல்ல வேண்டும். 'தொழில் செய்ய நிதியம் வேண்டுமெனில் தனவந்தனை அணுகு' என ஆலோசனை கூறவேண்டும். மாறாக, இயற்கைச் செல்வம் நிலம் நம்மிடம் இருக்கையில், அதைப் பயன்படுத்தாமல் 'நம்மிடம் எதுவும் இல்லை' எனச் சோம்பி இருப்பவரைப் பார்த்து, "யாரையும் எதிர்பார்க்காதே. உனக்கு நீயே உதவி செய்து கொள்' என்கிறார் வள்ளுவர்.

ஒருவன் தன்னையே முழுவதுமாக சொந்தமாக்கிக் கொண்டுவிட்டு, அத்துடன் அவனது அறிவு, முயற்சி, மனத்திட்பம், செயலாற்றும் திறன் இவை யாவும் முழுவதுமாக அவனுக்குச் சொந்தமான போது, 'இலம்' என்று அதாவது தன்னிடத்தில் எதுவும் இல்லையென்று சோம்பி இருப்பது எப்படி நியாயமாகும்? அவனிடத்தில் அத்தனை திறன்களும் உள்ளபோது, அவை அம்மனிதனின் சுயவேலை வாய்ப்புக்கு முதலாக நின்று உதவும் என்றுதான் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

இத்தகைய சுயவேலை வாய்ப்புச் சிந்தனையை முதன் முதலில் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த திருவள்ளுவரின் சிந்தனைப் புரட்சிதான் என்னே!



*- மா. சம்பந்தன்*

*நன்றி: சாதனைகள் சாத்தியமே*




படிப்பகம்

www.padippakam.com



# வள்ளுவப் பிரகாசர்

ம.ரா.போ. குருசாமி



சிவப்பிரகாச அடிகள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டிலே வாழ்ந்து தமிழ்ப்பணி ஆற்றிய பெரியார் ஆவர். அவருக்குப் பல நூற்றாண்டுகள் முன் தோன்றிய பெருந்தகையாளர் வள்ளுவர். இருவருக்கும் இடையிலே உள்ள காலப் பெருவெள்ளம் அவர்தம்மைப் பொறுத்த வரையிலே இல்லாமல் மறைந் தொழிகின்றது. இஃது இலக்கியத்தின் மாண்புகளுள் தலைமை சான்றதாகும். மனிதனை வெல்லும் இயல்பினது காலம்; காலத்தை வெல்லுகின்ற ஆற்றல் பெற்றது இலக்கியம். திருக்குறள் காலத்தை வென்றது; பல புலவர்களுக்கு வழிகாட்டியாக இன்றும் நிலைத்து நிற்கின்றது. திருவள்ளுவருக்குப் பின் தோன்றிய பெரும் புலவர்கள் யாவருமே திருக்குறளை எடுத்தாள்வதில் பெருமை கொண்டிருக்கிறார்கள். இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், திருத்தக்கதேவர், கம்பர் முதலிய பெரும் புலவர்கள் யாவருமே திருக்குறளின் சொல்லையும் பொருளையும் எடுத்தாண்டவர்கள்தாம். திருக்குறட்பாக்களை விளக்குவதற் கென்றே திருக்குறளைப் பின் இரண்டு அடிகளில் அமைத்து எழுந்த திருக்குறட் குமரேச வெண்பாப் போன்ற தனிநூல்களும் உண்டு. இத்தகைய தனி நூல்களை விடுத்து நோக்கின், சிவப்பிரகாச சுவாமிகளைப்போல் மிகுதியான குறட்பாக்களை எடுத்தாண்டவர் வேறு எவரும் இல்லை என்பதைத் தயக்கமும் தடையுமின்றிச் சாற்றலாம்.

சிவப்பிரகாசர் நூல்களில் திருக்குறள் பெறுகின்ற இடம் எத்தகையது என்பதை ஒரு சில மேற்கோள்களால் ஈண்டுக் காணலாம்.

### அகத்திணை ஆட்சிகள்



தலைவனும் தலைவியும் பொழிலிலே எதிர்ப்படுகிறார்கள். தலைவியின் உள்ளக் குறிப்பை அறிய எண்ணமிடும் தலைவனது நிலையைப் புலப்படுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com



திருவள்ளுவருக்குப் பின் தோன்றிய பெரும் புலவர்கள் யாவருமே திருக்குறளை எடுத்தாள்வதில் பெருமை கொண்டிருக்கிறார்கள். இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், திருத்தக்கதேவர், கம்பர் முதலிய பெரும் புலவர்கள் யாவருமே திருக்குறளின் சொல்லையும் பொருளையும் எடுத்தாண்டவர்கள்தாம்.

ஒரு பாடல்: 'முனிவர்கள் சாபம் தரும் ஆற்றல் பெற்றவர்கள்; அவர்களுக்குத் தாம் இட்ட சாபத்திலிருந்து விடுதலை செய்யும் ஆற்றலும் உண்டு. அதுபோலத் தலைவியின் கண்கள் துன்பந் தருவதோடு, அத்துன்பத்துக்கு மருந்தாக அமையும் குளிர்ந்த பார்வையும் உடையன' என்று தலைவன் எண்ணுகிறான்.

*பாயு மலர்த்தண் பொழில் சூழும் வெங்கைப் பழமலைசீர்*
*ஆயும் முனிவரர் தாமே முனிவு அருள் ஆக்குதல்போல்*
*நோயும் அந்நோய்க்கு மருந்தும் தராநிற்கும் நூற்பகவின்*
*தேயும் மருங்குற் பெருமுலை மாதர் திருக்கண்களே.*
*(திருவெங்கைக் கோவை-குறிப்பறிதல்)*

என்பது சிவப்பிரகாசரின் செய்யுள். இப்பாடலில்,

*இருநோக் கிவளுண்கண் உள்ளதொரு நோக்கு*
*நோய்நோக்கு ஒன்றுஅந்நோய் மருந்து. (1091)*

என்ற குறளே சிவப்பிரகாசரின் உள்ளத்தில் நிலவியது. குறளின் கருத்தை விளக்கத் தாமே ஓர் உவமையும் படைத்துள்ளார்.

தலைவியின் தண்ணருளை இரந்து பெறலாம் என நினைக்கின்ற தலைவன், 'இவளிடத்து நாம் இரந்து நின்றால் பயனுண்டா' என எண்ணிப் பார்க்கின்றான்.

*இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்*
*அவர்பழி தம்பழி அன்று. (1051)*

என்ற குறள்வழியில் அவன் சிந்தனை படர்கின்றது. 'நெஞ்சே! மடமாது இரக்கத்தக்கவள் என்று தெரிகிறது. அவள் அருளை இரந்து கேட்போம்; அருள் செய்தலைக் கரந்தால் நமக்கு அதிலே என்ன பழி இருக்கிறது!' என்பது அவன் எண்ணம்.

*புரந்தாடும் ஐயர் திருவெங்கை வாணர் பொருப்பில் நின்ற*
*வரந்தாழ் அயிற்கண் மடமாது இரத்தக்கார் ஆதலினால்*
*இரந்தான் குவம்இவர் தந்தனம் நாம்இன்று இனியநெஞ்சே*
*கரந்தால் நமக்குப் பழியுள தாயிற் கழறுகவே.*
(இரந்து பின்னிற்றற்கெண்ணல்)

தன்னிடம் அளவளாவி யிருந்த தலைவியைத் தோழியரிடம் செல்லுமாறு குறித்து,

*வானோக்கி நிற்கும்பைங் கூழ்போல வுமொரு மன்னவன்செங்*
*கோல்நோக்கி நிற்கும் குடிபோல வுந்தடங் கோட்டிமையத்*
*தேன்நோக்கி நிற்கும் எழிலுடை யான்வெங்கைச் செல்வி உனைத்*
*தானோக்கி நிற்குநல் ஆயத்து ளேசென்று சார்ந்தருளே*

என்று பேசுகிற தலைவன் கூற்றிலே,

*வானோக்கி வாழும் உலகெலாம் மன்னவன்*
*கோனோக்கி வாழும் குடி*





படிப்பகம்

www.padippakam.com



சிவப்பிரகாசர் துறவற நெறியில் நின்றவர். எனினும், குறள் போற்றும் பண்புடையர். ஆதலின் இல்லறமே சிறந்தது என்று வள்ளுவர் கருத்தினை மறைக்காமல் - மறுக்காமல்-எடுத்துரைக்கின்றார்.

என்ற குறளின் ஆட்சியும்,

*விசும்பின் துளிவீழி னல்லால்மற் றாங்கு*
*பசும்புல் தலைகாண் பரிது*

என்ற குறட்பாடலின் எதிரொலியும் அமைந்திருப்பதைக் காணலாம்.

பொழுது புலர்ந்துவிட்டது; இதனை அறிவித்துச் சேவல் குரல் காட்டிற்று. அது சொன்னது உண்மைதான்; பொய்யன்று. ஆனால் சேவல் செப்பியது வாய்மையன்று எனத் தலைவி கூறுகின்றாள். அவன் கூற்றுக்கு அரண் செய்வது குறள். வாய்மை எனப்படுவது (291) யாது? யாதொன்றும் தீமை இல்லாது சொல்லுதல் அன்றோ! ஆனால், சேவல் கூவியதால் இரவெல்லாம் கூடவே இருந்த தலைவன் பிரிந்து விடுகிறான். 'தலைவன் பிரிதல் ஆகிய தீமையைத் தந்த சேவலின் குரல் வாய்மையன்று' என்றுதான் சொல்வர். இது தலைவியின் பேச்சு.

*வாய்மை யெனினும் புலரியைக் கூறுதல்*
*வாரணங்காள்*
*சேய்மை யறுநங் கொழுநர்தம் கூட்டம்*
*சிதைத்தெமக்குத்*
*தீமை பயந்தமை யால்வெங்கை நாயகர்*
*செய்த அறத்*
*தூய்மை உணர்ந்தவர் வாய்மையன்*
*றாமெனச் சொல்லுவரே*
(கோழி குரற்காட்டல்)

சிவப்பிரகாசர் துறவற நெறியில் நின்றவர். எனினும், குறள் போற்றும் பண்புடையர். ஆதலின் இல்லறமே சிறந்தது என்று வள்ளுவர் கருத்தினை மறைக்காமல்-மறுக்காமல்-எடுத்துரைக்கின்றார். ஏனைய துறவறத்தார்க்கும் துணை புரிதல் இல்லறத்தாரின் கடமை. பிறருக்குத் துணைபுரிவது மட்டுமல்லாமல், பிறருடைய துணை இன்றியே தன் கடமையைச் செய்கின்றவன் உயர்ந்தவ னல்லனோ? இல்லறத்தான் அப்படிப்பட்டவன்.

*ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து*

என்னும் குறளின் அடிப்படையினைக் கொண்டது பின்வரும் பாடல்!

*பல்லறம் ஆற்றியும் எல்லாம் ஒருங்கு*
*படத்துறந்தோர்*
*நல்லறம் ஆற்றும் துணையாகவும் பெறு*
*நன்மையினால்*
*அல்லற மாற்றுங் களத்தார் திருவெங்கை*
*யாரணங்கின்*
*இல்லறம் ஆற்றவும் நன்றெனு மாலிவ்*
*விருநிலமே.* (375)

இது தலைவியின் இல்லற வாழ்க்கையைக் கண்ட தோழி தலைவியை வளர்த்த செவிலிக்குக் கூறிய கூற்றாகும். இல்லறமே துறவறத்தைவிடச் சிறந்தது என்ற கருத்தினைச் சிவப்பிரகாசர் இயற்றிய பிரபுலிங்க லீலையிலும் காணலாம். உடுதடை நகரில் நின்மலன் சுமதி ஆகியோருக்கு மகளாய்ப் பிறந்த மாதேவியைப் பற்றிக் கூறுமிடத்து,

*தவநிலை தன்னினும் தலைமைத் தென்னவே*
*உவமையில் இல்லறத் தொழுகும் நீர்மையாள்*

என உரைப்பது பல குறட்பாக்களின் கருத்துப் பிழிவாகவே காணப்படுகின்றது."

### ஒறுத்தாரும் பொறுப்பாரும்



திருக்குறளின் உயிர்நாடியான கருத்துக்களில் ஒன்று, தீங்கு செய்தாரைப் பொறுத்தல் என்பதாகும். பொறுப்பது நன்று; மறப்பது அதனினும்


படிப்பகம்

www.padippakam.com



**தீமை செய்தவர்களை நோக்கித் தீமையடைந்தவர் மூவகையினர் எனப் பிரிவு செய்கிறார் சிவப்பிரகாச அடிகளார். இவ்வாறு பிரிப்பதற்குக் குறள் நெறியே விளக்கம் தருகின்றது.**

நன்று-இன்னாதன செய்தவர்க்கும் இனியவை செய்யாவிட்டால் சான்றாண்மையின் பயன்தான் என்ன என்றெல்லாம் பேசுவது வள்ளுவரின் வான்மறை. பிழை பொறுத்து மறக்கும் இக்கருத்தினைச் சிவப்பிரகாசர் எடுத்தாளும் இடங்கள் கருதத்தக்கன.

தலைவன் பிரிந்து சென்று விட்டமையால் தலைவிக்கு மன வருத்தம் ஏற்படுகின்றது. அவள் ஆற்றியிருந்தாள்; இறுதியில் தலைவன் வந்துற்றான். தலைவியின் உள்ளத்துச் சினத்தைத் தணிப்பதன் பொருட்டுத் தோழியை முன்கூட்டியே அனுப்புகின்றான். 'நின்னை மறந்து, விட்டுப் பிரிந்தவர் வந்திருக்கிறார். அவர் முன் செய்த செயலை எண்ணற்க.

*'இன்னாசெய் தாரை ஒறுத்திடில் நன்மை*
*இயற்று கென்று*
*சொன்னார் புலவர் அறிந்திலை யோபொற்*
*சுடர்த்தொடியே'*

இது நீ அறியாத ஒன்றோ?" என்பது தோழியின் பேச்சு. 'புலவர்' என்று வள்ளுவரையே தோழி வாயிலாகச் சிவப்பிரகாசர் குறிக்கிறார்.

தலைவன் தலைவியரிடையே ஊடல் உறுகின்றது. இத்தகைய சிறு பிணக்கினைத் தீர்த்தற்கு விருந்தினரும் வாயிலாக அமைவரென நூல்கள் சாற்றுகின்றன. இங்கும் திடீரென்று விருந்தினர் வந்து சேருகிறார்கள். வேறு வழியின்றி ஊடல் முறிகின்றது. அப்போது,

*அறத்தாறறிந் திருவெங்கை வாண*
*ணிவரைமேல்*
*வெறுத்தா லுனைமுனி வாற்றுநர்*
*தாஞ்சிலர் வேறுளரோ*
*ஒறுத்தாற் பெறுமின் பமுநினை யாம*
*லொருவர் பிழை*
*பொறுத்தார் புகழு மறிந்திலை யோமலர்ப்*
*பூங்கொடியே (397)*

என்று பேசும் தலைவன் கூற்றிலே,

*ஒருத்தார்க்கு ஒருநாளை இன்பம்*
*பொறுத்தார்க்குப்*
*பொன்றுந் துணையும் புகழ் (156)*

என்ற குறள்மணி ஒளிர்கின்றது.

தீமை செய்தவர்களை நோக்கித் தீமையடைந்தவர் மூவகையினர் எனப் பிரிவு செய்கிறார் சிவப்பிரகாச அடிகளார். இவ்வாறு பிரிப்பதற்குக் குறள் நெறியே விளக்கம் தருகின்றது.

*ஒறுப்பவன் இழிந்தவன் ஒருவன் செய்த*
*நோய்*
*பொறுப்பவன் நடுவுளன்; பொறுக்கும்*
*நெஞ்சமும்*
*மறப்பவன் உயர்ந்தவன் என்று வாய்மையாற்*
*சிறப்பவர் இம்முறை செப்பு வாரரோ*
(பி.பு.லீ. சித்தராமையர் கதி 27)

என்ற பிரபுலிங்கலீலைச் செய்யுள் குறள் குறிக்கும் வாழ்க்கையை விளக்குவதாகும். இந்தப் பாடலிலே,

*பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை*
*மறத்தல் அதனினும் நன்று (152)*

என்ற குறளினையே அடிகள் எடுத்தாண்டிருக்கிறார்.

**இரத்தலும் ஈதலும்**

*இரப்பாரை இல்லா ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்றுவந் தற்று (1058)*



என்பது திருக்குறள். இதனைப் படித்தவுடன் நம் மனத்திலே ஓர் ஐயம் எழுவதுண்டு. இரத்தல் மிக இழிந்தது என்று பழித்த வள்ளுவரோ இங்ஙனம்



படிப்பகம்

www.padippakam.com


**திருக்குறள் - வாழ்க்கை நூல் என்பதைக் காட்டவேண்டும் என்ற கருத்துப்பற்றியே எல்லா வகையான இடங்களிலும் சிவப்பிரகாசர் அந்த வான்மொழியை எடுத்தாண்டிருத்தல் வேண்டும்.**

பேசுகிறார் என எண்ணம் எழுவது இயற்கையேயாம். ஒருநாள் இரந்துண்பாரும் இவ்வுலகத்தில் இருத்தல் வேண்டும் என வள்ளுவர் கருதுகின்றாரோ?

*இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான் (1062)*

என்று சினந்தவரல்லரோ வள்ளுவர்!- இங்ஙனம் பலவாறு ஏற்படுகின்ற ஐயங்களைச் சிவப்பிரகாசர் போக்குகிறார். செல்வம் படைத்தவர்களுக்கு இன்பம் வேண்டுமன்றோ? அதற்கு ஒரு வழி, இரப்போர்க்கு ஈதல் ஆகும்.

செல்வர்கள் ஈத்துவக்கும் இன்பம் அறியாமல் இருந்தால் அவர்களை வள்ளுவர் பழிப்பர் எனச் சிவப்பிரகாசர் கூறுகிறார். வள்ளுவரின் குற்றச்சாட்டு தங்களுக்கு ஏற்படக் கூடாதே என்று செல்வர்கள் அஞ்சுகிறார்களாம்.

*.........புலவர்*
*இரப்பாரை இல்லா ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்றுவந் தற்றென்று*
*உரைப்பாவில்*
*வைதனை அஞ்சி வளர்த்தார் இரப்பவர்தாம்*
*எய்தலை நோக்கி இருந்து தவும்*
(நெஞ்சு விடுதூது)

காட்சி சிவப்பிரகாசர் காட்டுவதாகும்.

### பரிமேலழகரை ஒட்டியும் வெட்டியும்

திருக்குறள் பயிலும் அறிஞரின் சிந்தனையிலே சிக்கல் விளைவிக்கும் குறட்பாக்களில்,

*அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடை*

என்பதும் ஒன்றாகும். பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களின் நெறியில் நின்று நோக்கின், சிவிகை ஏறியவர்கள் நல்லறம் செய்தவர் என்றும் சிவிகை சுமப்போர் நல்லறம் செய்யாமல் போயின தீவினையாளர் என்றும் சொல்ல நேரிடும். இவ்வுரை வழியே நின்று குறளைக் கண்ட சிவப்பிரகாசருக்குச் சிந்தனையிலே சிக்கல் எழுந்திருக்க வேண்டும். ஞானசம்பந்தப் பெருந்தகையின் சிவிகை சுமக்கும் பேறு பெற்றோர் சாமானியராக இருந்திருக்க முடியுமோ! மிகுந்த சிவபுண்ணியம் பெற்றிருந்தாலன்றி ஆளுடைய பிள்ளையாரின் சிவிகையாட் களாகும் பேறு கிட்டியிருக்குமோ! நாவுக்கரையர்கூட ஒருகால் ஞானசம்பந்தரின் சிவிகையைச் சுமந்து திரியவில்லையா? இத்தகைய வினாக்கள் சிவப்பிரகாசர் உள்ளத்தில் எழுந்தமையால் அவர் பாடிய பாடல் வருமாறு:

*அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தா னிடையை-*
*மறுத்தார்சம்*
*பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்று*
*உந்தும் சிவிகையினை ஊர்ந்து*
(நால்வர் நான்மணிமாலை 33)

சிக்கல் மிக்க இந்தக் குறட்பாவினுக்குத் திரு.வி.க. போன்ற இக்காலத்துப் பேரறிஞர்கள் புது உரை கூறியுள்ளார்கள். பரிமேலழகர் உரைவழி நின்ற சிவப்பிரகாசருக்கு மேற்கண்ட தடைகள் எழுந்தன. வேறு உரை காணவில்லை.



சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம் என்ற நூலிலே,


படிப்பகம்

www.padippakam.com



**சிவப்பிரகாசரைப் படித்து முடித்தபின் சிவப்பிரகாச அடிகளாரை வள்ளுவப் பிரகாசர் என்றே சொல்லத் தோன்றுகிறது.**

*நவத்தமிழ்வே தம்புகலும் நன்மொழியிங் குண்மைபெறத்*
*தவத்தொடுதா னஞ்செயுமோர் தன்மையுனக் கலதுண்டோ*

என்று ஓரிடத்தில் கூறுகிறார். இந்தப் பாவில்

*தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்கா தெனின் (19)*

என்ற குறட்பா எடுத்தாளப்பட்டுள்ளது. இக்குறளின் விசேட உரையில் பரிமேலழகர், 'பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின்மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன' என்று வரைந்திருக்கிறார். இவ்வுரைக் கருத்தினைச் சிவப்பிரகாசர் எடுத்தாண்டிருக்கிறார் என்பது உண்மைதான். சிவஞான பாலைய சுவாமிகள் என்ற பெயரோடு பட்டத்துக்கு வரும் துறவிகள் முதலில் இல்லறத்தாரா யிருந்து பின் துறவு பூண்டு பட்டம் பெறுதல் மயிலம் ஆதீனத்தின் மரபாக இருந்துவருகிறது. எனவே, பரிமேலழகர் உரைப்படியே குறளுக்குப் பொருள் கொண்டு,

*தவத்தொடுதா னஞ்செயுமோர்*
*தன்மையுனக் கலதுண்டோ*

என்று சிவப்பிரகாசர் பாடினார் என்பது உண்மைதான். ஆயின், வள்ளுவர் கருத்து இதுதானா என்பது ஐயத்திற்கு இடமானது. 'பிறர் பொருட்டுச் செய்யும் தானமும் தம் பொருட்டுச் செய்யும் தவமும்' என்று அறிஞர் மு.வ. கூறியுள்ள பொருள் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. இப்பொருள் கொள்ளுமிடத்தும் சிவப்பிரகாசர் பாடலுக்குப் பொருள் கொள்ளுவதில் தடையும் பிழையும் ஏற்படுவதில்லை.



பரிமேலழகர் உரையினைச் சிவப்பிரகாசர் மறுத்துப் பாடிய இடம் ஒன்று உள்ளது.

*பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற (61)*

என்ற குறளின் உரையிலே பரிமேலழகர் "அறிவறிந்த என்றதனான் மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது" என வரைந்துள்ளார். பரிமேலழகரின் தெளிந்த அறிவு திரிந்த இடங்களிலே இதுவும் ஒன்று. காலக் கோட்பட்ட அவர் கருத்தினைச் சிவப்பிரகாசர் மறுக்கிறார். 'பெண்பிறவி அறிவற்றது' எனின், உமையம்மையும் அறிவற்றவள் என்றன்றோ கொள்ளுதல் வேண்டும்!

*கற்றா ரறிகுவர் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த*
*சொற்றான் ஒருபெண் ணொழித்த தென் பாரொடு தொல்லுலகில்*
*நற்றாண் மகற்பெறு கென்றாசி சொல்பவர் நாணவுனைப்*
*பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே*

(பெரியநாயகியம்மை கலித்துறை.12)

என்ற பாடலில் பரிமேலழகரை மட்டுமன்றி, அவருடைய கருத்துவழிப் பட்டு ஆண்மகனைப் பெறுக என்று ஆசி கூறுவோரையும் சாடுகிறார் சிவப்பிரகாசர்.

### பலவகையானும் குறளாட்சி

பல குறட்பாக்களை நினைவூட்டும் பாடல்களும் சில உள்ளன.

*குழலும் யாழும் இனியவெனக் கூறாவண்ணம் மென்கனிவாய்*
*மழலை மொழிந்தும் உடற்கின்பம் மருவ ஓடி மேல்விழுந்தும்*



படிப்பகம்

www.padippakam.com



*விழையும் அமிழ்தின் மிகவினிமை விளைய*
*நுகரும் சுவையடிசில்*
*செழிய சிறுகை யாலளைந்தும் செய்தாள்*
*மோகம் என்றோரை*

(பிரபுலிங்கலீலை - மாயையுற்பத்தி கதி 52)

என்ற பிரபுலிங்க லீலைச் செய்யுளில் மூன்று குறட்பாக்கள்* நிறைந்து நின்று அணிசெய்கின்றன.

*கொலைகள வழுக்கா றவாவொடு வெகுளி*
*கொடுஞ்சொல் பொய்பயனில கூறல்*
*நிலையழீஇ ஒருவன் செய்ந்நன்றி மறத்தல்*
*நிந்தனை வஞ்சனை பிறர்தம்*
*சிலைநுதல் மடவார்க் கருதலென் றினைய*
*தீமைகள்.....*

(பிரபுலிங்கலீலை - அக்கமாதேவியுற்பத்தி கதி - 24)

என்று கூறுங்கால் வள்ளுவரின் வான் மறைக்கண் தகாதனவென ஒதுக்கிய தீமைகள் யாவும் நினைவில் எழுகின்றன.

குறளின் கருத்தொடு கூடிய தொடர்களை எடுத்தாண்டு அணி செய்வது ஒருமறம் இருக்க, அந்நூலின் தொடர்களை மட்டும் சிவப்பிரகாசர் எடுத்தாளும் இடங்கள் மிகப் பலவாகும்.

*கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை*
*எடுக்க வல்லதும் இம்மனம்.....*


என்ற இடத்தில் வருகின்ற தொடரமைப்பு,

*கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்*
*றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை (15)*

என்ற குறளினை நம் மனத்தே எழுப்புகின்றது. ஆனால் ஒன்று குறளில் வான் சிறப்புக் கூறுமிடம்; மற்றது மனப்பண்பு கூறும் பாடல்.

### *குறளாட்சிக்குக் காரணம்*

திருக்குறளை எடுத்தாள்வது மட்டுமே சிவப்பிரகாசரின் நோக்கம் அன்று. தக்க பின்னணி அமைப்புகள் இட்டு அங்கே குறட்பாவினைப் 'பொருத்திவிட்டால் யாவர் மனங்களிலும் எளிதில் குறள் சென்று பதிந்துவிடும். தமிழினத்திடையே இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு மருட்கையால் திருக்குறள் ஒரு நீதி நூல் என்ற அளவில் பெயர்பெற்று ஒதுங்க நேர்ந்தது. நீதி நூல் என்று முத்திரை பெற்று விட்டமையால், அதனை அடிக்கடி எடுத்துப் பயில்வோர் அருகினர். இதுகண்ட சிவப்பிரகாசர் போன்ற புலவர்கள் உள்ளம் வருந்தியிருக்கவேண்டும். திருக்குறள் - வாழ்க்கை நூல் என்பதைக் காட்ட வேண்டும் என்ற கருத்துப்பற்றியே எல்லா வகையான இடங்களிலும் சிவப்பிரகாசர் அந்த வான்மொழியை எடுத்தாண்டிருத்தல் வேண்டும்.



### *போற்றிய வகை*

வீர சைவராகிய அவர் தாம் வணங்கிய இறைவனுடைய திருவடிகளோடு ஒருநிலையினதாகவே குறளினைப் போற்றியிருக்கிறார். 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என்பது உவமை இலக்கணம். தாமரை போன்ற முகம் என்றால் முகத்தைவிடத் தாமரையே அழகானது என்பது உவமை இலக்கண விளக்கம். சிவப்பிரகாசர் இலக்கண நெறி உணராதவரல்லர்; இலக்கண விதிகளையும் மேற்கோள்களையும்கூடத் தம் செய்யுட் களிலே எடுத்தாண்டவர் சிவப்பிரகாசர். அவர் திருக்குறளைச் சிறப்பிக்கும் வகையினைப் பாருங்கள்:

*என்னடிகள் வெண்குறள்நேர் அடியிரண்டும்*
*என்தலையில் இருத்தும் இறை.....*

என்பது சிவப்பிரகாசர் செய்யுள். 'எங்கள் திருவள்ளுவரின் குறளடிகளைப் போன்ற திருவடிகளை என்மீது பொருத்தும் இறைவன்' என்பது இதன் பொருள். திருக்குறள் அடிகளைப் போன்ற சிவபிரான் அடிகள் என்று சொன்ன போது உவமை இலக்கணத்தைச் சிவப்பிரகாசர் மறந்துவிட்டார் என்று கூறுவது இயலாது.



படிப்பகம்

www.padippakam.com



திருவள்ளுவமாலையில் குறளடிகளை உலகளந்த திருமால் திருவடிகளுக்கு ஏற்றிச் சொல்லும் செய்யுள் ஒன்று உண்டு. அது கண்டு பொறாத வீரசைவராகிய சிவப்பிரகாசர் சிவபெருமான் திருவடிகளுக்கு உவமித்தார் என்று சொல்லிச் சிவப்பிரகாசரை ஒதுக்கிவிட இயலாது. சிவபெருமான் மாதொருபாகத்தார்; எனவே, அவரது இடக்கால் உமையம்மை யினது; ஆகையால் சிறிய அடியாக இருக்கும். எனவே, முழுவதாக இரண்டு அடிகளாக அமையாத குறட்பாக்கள் தையல்பாகனாகிய சிவபிரானுக்கே ஏற்புடையன என்ற கருத்தையும் உட்கொண்டுதான் சிவப்பிரகாசர் மேற்கண்டவாறு கூறியுள்ளார் என்பது கருதத் தக்கது.

திருவள்ளுவரைக் 'கற்றுணர் பழையோர்', 'புலவர்' 'தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்,' 'ஆற்றற் பெரியோர்', 'இணையில் திருவள்ளுவப் பெயர்கொள் எம்மான்' என்றும்-திருக்குறளை 'நவத்தமிழ் வேதம்' என்றும் பலபடப் பாராட்டிப் போற்றுகிறவர் சிவப்பிரகாசர். மேற்கோளாக எடுத்தாள்வதற்கு மட்டுமே திருக்குறள் வேண்டற்பாலதென்று கருதியிருப்பாராயின், சிவப்பிரகாசர் இவ்வாறு போற்றிப் புகழ்ந்து பாட முனைந்திருக்கமாட்டார். தமிழ் மொழிக்குப் பெருமை படைத்துத் தரணிக்கு வழிவகுக்க நூல் இயற்றிய வள்ளுவரைத் தன் சென்னி தாழ்த்தி வணங்குவது ஒவ்வொரு தமிழனுக்கும் உரிய கடமை என்பதை நினைவூட்டுதற் பொருட்டே மேற்கோள் காட்டுவதோடு அமையாமல், அந்நூலை அளித்தருளிய உள்ளத்தையும் வாழ்த்துகிறார்; போற்றுகிறார்.

### *குறளும் பிறவும்*

சிவப்பிரகாசர் எடுத்தாள்வது திருக்குறள் ஒன்று மட்டுமேயன்று. தொல்காப்பியம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களெல்லாம் சிவப்பிரகாசரால் போற்றப்பட்டன. ஆனால், திருக்குறள் பெற்ற மதிப்பினைப் பிற நூல்கள் பெறவில்லை.

சிவப்பிரகாசரைப் படித்து முடித்தபின் சிவப்பிரகாச அடிகளாரை வள்ளுவப் பிரகாசர் என்றே சொல்லத் தோன்றுகிறது.

** துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை (42)*
*அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்*
*போஒய்ப் பெறுவ தெவன் (46)*
*ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை யுடைத்து (48)*
*துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்*
*மற்றை யவர்கள் தவம் (263)*
** அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்*
*சிறுகை யளாவிய கூழ் (64)*
*மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்*
*சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (65)*
*குழலினி தியாழினி தென்பதம் மக்கள்*
*மழலைச்சொற் கேளா தவர் (66)*

✧ ✧ ✧



படிப்பகம்

www.padippakam.com



# புலவர் குழந்தை திருக்குறள் பதிப்பு

இ. சுந்தரமூர்த்தி



திருக்குறள் பதிப்புகளுள் புலவர் குழந்தை அவர்கள் உரையுடன் எழுதி வெளியிடப்பட்டுள்ள பதிப்பும் (1949) குறிப்பிடத்தக்க ஒன்றாகும். 'இன்றியமையாச் சிறப்பினையுடைய தமிழ்க் கருவூலமாகிய திருக்குறளை இக்காலத் தமிழ் மக்கள் எல்லோரும் கற்றுப் பயன் பெற முடியாத வகையில் அதன் பழைய உரை அமைந்துள்ளது. வள்ளுவர் கருத்துக்கு மாறாக அயற் கொள்கைகள் பல வலிந்து புகுத்தப்பட்டுத் தமிழ்ப் பண்பாடு மறைக்கப்பட்டுள்ளது. கருத்து விளக்கமும் உரையின் நடையும் கடினமாக உள்ளன. எனவே அக்குறைபாடுகளைப் போக்கி எழுதப் படிக்கத் தெரிந்த எல்லாத் தமிழ் மக்களும் திருக்குறளை எளிதில் படித்துப் பயன்பெறும்படியாக ஓர் உரை வேண்டும் என்பது பெரும்பாலான தமிழறிஞர்கள் கருத்து. இக் கருத்தின் நிறைவேற்றமே இவ்வுரையாகும்' என்பது ஆசிரியரின் கோட்பாடாக விளங்குவதால் அவர்தம் உரையின் நோக்கத்தையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

### பாகுபாடு

முதல் நான்கு அதிகாரங்களையும் 'முதலியல்' எனக் கொள்கின்றனர். பொருட்பாலின் இயல் பாகுபாடுகள் காலிங்கரை ஒத்து விளங்குகின்றன. அவை அரசியல், அமைச்சியல், கூழியல் (நாடு), அரணியல், படையியல், நட்பியல், குடியியல் எனக் கொள்ளப்பட்டுள்ளன. கூழ், அரண் - படை எனச் சிறிதளவே மாற்றம் கொண்டுள்ளார். காமத்துப்பாலில் பரிமேலழகர் கொண்ட களவியல் கற்பியல் பாகுபாடுகளையே கொண்டார். இன்பத்துப் பால் எனப் பெயர் தருவார்.

### முதலியல்

முப்பாலுக்கும் பொதுவாகியது முதலியல் என்று கூறிக் கடவுள் வாழ்த்தினை 'இறைநலம்' என அமைத்துப் பொருள் (திரு. வி. க. கூறியது) கூறுகிறார். இறை நலம் - இறையாகிய நலம்; பண்புத்





படிப்பகம்

www.padippakam.com




தொகை. இறை - முதன்மை, நலம் - குணம். மக்கள் முதன்மையாகிக் குணங்களை அடைய வேண்டும் என்பதே இவ்வதிகாரத்தின் உட்கருத்தாகும்.

மக்களின் வாழ்க்கைப் பயனாகிய அறம் பொருளின்பங்கூறப் புகுந்தார். அம் முப்பாலையும் இனிது நுகர வேண்டின் உயரிய மக்கட் பண்புகளை அடைய வேண்டும் என முதற்கண் அக்குணச் சிறப்பினைக் கூறுகின்றார். 'அன்பே கடவுள்' அறிவே கடவுள். ஆற்றலே கடவுள்' என்னும் கடவுட் கொள்கையும் குணங்களையே குறித்தன, அக்கடவுட் கொள்கையும் இதனிற் புறம்பானதன்று, கடவுள் - மேலானது, மேன்மையானது, சிறந்தது என்னும் கருத்துக்கள் புலவர் குழந்தையின் பகுத்தறிவு சார்ந்த பொருள் விளக்கம் எனலாம். மேலும் முதல் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாவின் கருத்துக்கள் பத்துக் குணங்களையே சுட்டுவதாக அமைந்துள்ளது என்பார். (1) முதன்மையாவது (2) உண்மை அறிவு (3) உயர்ந்த அறிவு (4) விருப்பு வெறுப்பின்மை (5) முதன்மையான உண்மைப் புகழ் (6) அவாவின்மை பொய் தீர் ஒழுக்கம் (7) ஒப்பில்லா உயர்குணம் (8) அறவுணர்ச்சி, செந்தண்மை (9) எளிமைக் குணம் (10) முதன்மை என்பன முறையே பத்துக் குறட்பாக்களும் உணர்த்தும் குணங்கள் எனச் சுட்டுவது புதிய கருத்தாக விளங்குகின்றது.

அதிகாரத் தலைப்புப் பெயர்கள் பெரும்பாலும் அவ்வதிகாரத்தில் வரும் சொல்லையோ, சொற்றொடரையோ அவ்வதிகாரப் பொருளையோ உள்ளடக்கியது என்னும் கருத்தினர். எனவேதான் இவ்வதிகாரம் இறை நலம் எனப்பட்டது என்னும் கருத்தினை வலியுறுத்துகின்றார்.

### *பொருள்நலம்*

முதற்குறளில் அமைந்துள்ள 'ஆதிபகவன்' என்பதற்கு முதன்மை யானவன் என விளக்கம் தருகின்றார். ''ஆதி - முதல் : பகவு - பகுதி; 'எள்பகவு அன்ன' (980) எனக் காண்க. ஆதி பகவு - முதன்மைப் பகுதி, முதன்மையானது - குணங்களின் முதன்மையான குணம் என்பது பொருள். ஆதிபகவு + அன் - ஆதிபகவன், முதன்மையான குணத்தையே ஆதிபகவன் என ஆண்பாலால் கூறினார். மக்கள் முதன்மையான குணமுடையராய் வாழ வேண்டும் என்பது கருத்து" என விளக்கமும் தருவார்.



### *ஊழியல்*

ஊழ் முப்பாலுக்கும் பொதுவகையால் தனியியலாயிற்று. பொதுவாயினும் அறத்தோடியைபு உடைமையான் அறத்துப்பாலை அடுத்துவைக்கப்பட்டது என முறையும் காரணமும் காட்டித் தனி இயலாகவே கொள்வர்.

ஊழ் - முறைமை; உலகியல் நிகழும் முறைமை; உலகியலின் இயற்கை நிகழ்ச்சி. அதாவது பொருளும் காலமும் செயல்படும் தகுதியும் சுற்றுச் சார்பின் தகுதியும், நம்து எண்ணத்தின் முயற்சியின் செயலின் தகுதிக்கு ஒத்து வருதலும் ஒவ்வாது வருதலுமாம்' என ஊழிற்கு உலகியல் நெறிநின்று விளக்கம் தருவது குறிப்பிடத்தக்கது.

உலகியலின் இயற்கை நிகழ்ச்சியை அறியாது எண்ணியது முடிந்தால் மகிழ்வதும், முடியாவிட்டால் வருந்துவதும் அறிவுடைமை ஆகாது என்பது இவ்வதிகாரக் கருத்து என முடிவு கூறுகின்றார்.

### *இன்சொல்*

இனியவை கூறல் என்னும் அதிகாரத்தினை 'இன்சொல்' எனத் தலைப்பிடுவார். அன்புடைமைக்குப் பின்னர் விருந்தோம்பல் என இருப்பதை மாற்றியமைத்து அன்புடைமை, இன்சொல், விருந்தோம்பல் என வைத்துள்ளார். இல்லறவியலில் அவர் மாற்றியுள்ள முறைவைப்பு வருமாறு:



படிப்பகம்

www.padippakam.com



| பரிமேலழகர் | குழந்தை |
|---|---|
| 5. இல்வாழ்க்கை | 5. இல்வாழ்க்கை |
| 6. வாழ்க்கைத் துணைநலம் | 6. வாழ்க்கைத் துணைநலம் |
| 7. புதல்வரைப் பெறுதல் | 7. மக்கட் பேறு |
| 8. அன்புடைமை | 8. அன்புடைமை |
| 9. விருந்தோம்பல் | 9. இன்சொல் |
| 10. இனியவை கூறல் | 10. விருந்தோம்பல் |
| 11. செய்ந்நன்றியறிதல் | 11. செய்ந்நன்றி யறிதல் |
| 12. நடுவு நிலைமை | 12. ஒழுக்கமுடைமை |
| 13. அடக்கம் உடைமை | 13. அடக்கமுடைமை |
| 14. ஒழுக்கமுடைமை | 14. நடுவுநிலைமை |
| 15. பிறனில் விழையாமை | 15. பிறனில் விழையாமை |
| 16. பொறையுடைமை | 16. பொறையுடைமை |
| 17. அழுக்காறாமை | 17. அழுக்காறாமை |
| 18. வெஃகாமை | 18. வெஃகாமை |
| 19. புறங்கூறாமை | 19. புறங்கூறாமை |
| 20. பயனில சொல்லாமை | 20. பயனில சொல்லாமை |
| 21. தீவினையச்சம் | 21. தீவினையச்சம் |
| 22. ஒப்புரவறிதல் | 22. ஒப்புரவறிதல் |
| 23. ஈகை | 23. ஈகை |
| 24. புகழ் | 24. புகழ் |
| 25. அருளுடைமை | 25. அருளுடைமை |
| 26. புலால் மறுத்தல் | 26. புலால் மறுத்தல் |
| 27. தவம் | 27. கொல்லாமை |
| 28. கூடாவொழுக்கம் | 28. வெகுளாமை |
| 29. கள்ளாமை | 29. இன்னா செய்யாமை |
| 30. வாய்மை | 30. தவம் |
| 31. வெகுளாமை | 31. கூடாவொழுக்கம் |
| 32. இன்னா செய்யாமை | 32. கள்ளாமை |
| 33. கொல்லாமை | 33. நிலையாமை |
| 34. நிலையாமை | 34. துறவு |
| 35. துறவு | 35. மெய்யுணர்தல் |
| 36. மெய்யுணர்தல் | 36. அவாவறுத்தல் |
| 37. அவாவறுத்தல் | 37. வாய்மை |
| 38. ஊழ் | 38. ஊழ் |

இவ்வைப்பு முறையின் மாற்றம் குறித்துப் புலவர் குழந்தை அவர்கள் தம் கருத்துக்களைச் சுட்டுவதும் ஆராயத் தக்கது.

### தொடர்புடைமை

அறத்துப்பாலில் முதலில் கூறப்பெறும் முதலியல் முப்பாற்கும் பொதுவாதலின் நூலின் முதலில் வைக்கப்பட்டது என்று கூறியவர் முதல் நான்கு அதிகாரங்களும் வைக்கப்பட்ட முறைமையைத் தொகுத்துக் கூறுகின்றார். இறைநலம், வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய நான்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பார்.

### வைப்பு முறை

மக்கள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலிலும் முதன்மையுற்று வாழவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தாகலின் அம் முதன்மையான குணங்களின் உருவகமான இறைநலம் முதலில் கூறப்பட்டது என்கிறார்.

மக்கள் இந்தக் குணங்களுடன் இனிதுவாழ மிகமிக இன்றியமையாதது உணவு. அவ்வுணவைத் தருவது மழை ஆகையால் அதன் பின் வான்சிறப்பு வைக்கப்பட்டது என்பார்.

உலகியல் தங்கு தடையின்றி இனிது நடைபெற மழை எங்ஙனம் இன்றியமை யாததோ அங்ஙனமே மக்களை நல்வழியில் இனிது வாழவைப்பதே தங்கள் கடமையாக உடையவர் நீத்தார் ஆவர். எனவே அடுத்து நீத்தார் பெருமை வைக்கப்பட்டது என்பார்.

செய்வன தவிர்வன முப்பாற்கும் பொதுவும் அறத்துப்பாற்குச் சிறப்பு முடைமையோடு அந்நீத்தார் வகுத்தமை யாகலின் அறன் வலியுறுத்தல் இறுதியிலும் வைக்கப்பட்டது என்கின்றார்.

'விதித்தன செய்தல் விலக்கியன ஒழித்தல்' என்பதைச் சுருக்கமாகச் செய்வன, தவிர்வன எனச் சுட்டுவது கருதத்தக்கது. அறங்கள் நீத்தாரால் வகுக்கப்பட்ட கருத்தையும் ஏற்றுக் கொண்ட பான்மை இங்கு நன்கு புலனாகும். துறவறத்தையும் இல்லறத்தை இனிது நடத்தி மூப்பெய்தியபின்





படிப்பகம்

www.padippakam.com



மேற்கொள்வது என்னும் கருத்தினராகவும் விளங்குவது கருதத்தக்கது.

### இல்லறவியல்

இல்லறவியலில் அன்புடைமைக்குப்பின் விருந்தோம்பல், இனியவை கூறல்.... என வரும் மரபினை மாற்றி அன்புடைமை, இன்சொல், விருந்தோம்பல் என மாற்றிவைப்பார். இவ்வாறே ஒழுக்கமுடைமை, அடக்கமுடைமை என்பனவற்றிற்குப் பின்னர் நடுவு நிலைமை அதிகாரத்தை வைப்பார்.

இல்லறவியலுக்குடையது இல்வாழ்க்கை. எனவே இது முன்னர் வைக்கப்பட்டது. இல்வாழ்க்கை இனிது நடைபெறக் காரணம் இல்லாளின் மாட்சி; எனவே அது அடுத்து வைக்கப்பட்டது. இல்வாழ்க்கையின் பயன் மக்கட்பேற்றின் பின்னர் வைக்கப்பட்டது என்பார்.

### மூன்று பண்புகள்

இல்வாழ்விற்கு இன்றியமையாப் பண்புகள் மூன்று. அவை அன்புடைமை, இன்சொல், விருந்தோம்பல் என்பன. இல்வாழ்வான் சுற்றத்திடத்தும் விருந்தினரிடத்தும் முதலில் அன்பு காட்டவேண்டும். அதன்பின் விருந்திட்டுப் போற்றவேண்டும். எனவேதான் மூன்றும் முறையே வைக்கப்பட்டுள்ளன என்பர். இங்கு குழந்தை அவர்கள் மிக நுட்பமாக அன்புடைமை, இன்சொல், விருந்தோம்பல் என மாற்றி வைத்துள்ளதைக் காண்க.

### விருந்தும் நன்றியும்

இல்வாழ்வாரும் விருந்தினரும் பிறர் செய்த நன்றியை அறிந்து நடத்தல் வேண்டும். ஆகையால் விருந் தோம்பலின் பின் செய்நன்றியறிதல் வைக்கப்பட்டது என்றும் கூறுவார்.

### தீநெறியும் நடுவுநிலைமையும்

நடுவு நிலைமை என்னும் நற்குணம் உடையாரே தம் மனைவியைப் பிறர் விரும்பினால் தமக்கு எப்படி இருக்குமோ அப்படியே பிறர்க்கும் இருக்கும் என்னும் பொதுமையை உணர்வாராகையால் அதன் பின் 'பிறனில் விழையாமை' வைக்கப்பட்டது என்பார். பகை நொதுமல் நட்பு என்னும் மூன்று பகுதியிலும் அறத்தின் வழுவாது ஒப்பநிற்கும் நிலை என்பார். பரிமேலழகர், பெரும்பாலும் வழக்குத் தீர்க்கும் நடுவர்கட்கு (நீதிபதி முதலியோர்) உரிய அறமாகும். எனினும் இல்வாழ்வார் ஒவ்வொருவரும் நடுவு நிலைமை உடையவராக நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பது கருத்து என்னும் குறிப்புகளையும் தருவார்.

### ஆணாதிக்கம்

பிறனில் விழையாமை என்பதற்குப் பிறருடைய மனைவியை விரும்பாமை எனப் பொருளுரைத்த பின்னர் புலவர் குழந்தை தமக்கே உரிய அணுகுமுறையில் பின்வருமாறு விளக்கம் தருவார்.

> 'வாழ்க்கையின் உரிமைகள் அனைத்தையும் தாங்களே வைத்துக் கொண்டு பெண் மக்களை அடிமைகளாய் நடத்தி வருவதால் ஆண்மக்களே இக்குற்றம் செய்தற்குரியராகையால், 'பிறன் இல்' என ஆண்பாலால் கூறினார். முன் பெண்மக்களின் மனத்திண்மை கூறினார் எனினுமாம்'

என்னும் விளக்கம் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

### எளிமையுரை

பொறை உடைமை தனக்குள்ள குணம் பிறருக்கு உண்டு என்னும் எண்ணம் பொறுமைக்குரிய அடிப்படை என்பார். 'காரணம் பற்றியாதல், மடமையானாதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கண் செய்யாது பொறுத்தலை உடையராதல் எனப் பரிமேலழகர் உரை தருவார். இதனைப் பின்பற்றியே புலவர் குழந்தை 'காரணம் பற்றியாதல், அறிவின்மையானாதல் தமக்கு ஏதாவது துன்பம் செய்தால்





படிப்பகம்

www.padippakam.com



தாமும் அதனை அவருக்குச் செய்யாது பொறுத்துக் கொள்ளுதல்' என எளிமையாக்கி உரைப்பார்.

இல்லறவியலில் ஏனைய அதிகார வைப்பு முறைகளில் மாற்றமில்லை. பிறர் குற்றத்தைப் பொறுத்தலேயன்றிப் பிறர் பெருமை கண்டு பொறாமைப் படுதலும் கூடாதாகையால் அதன் பின் அழுக்காறாமை வைக்கப்பட்டது. பிறர் பொருட்பெருமை கண்டு பொறாமைப் படுதல் பிறர் பொருளை விரும்புவதற்குக் காரணமாகும். எனவே வெஃகாமை அடுத்து வைக்கப்பட்டது.

*ஒப்புக்குணம்*

காணாதவிடத்துப் பிறர் பொருளை விரும்புதல் போல, பிறரைக் காணாத விடத்தே பழித்துக் கூறப்படுதலின் அதன் பின் புறங்கூறாமை வைக்கப்பட்டது என்பர். புறங்கூற்று சொற்குற்றம் உடையது எனவே அதனோடு ஒப்புமையுடையது பயனில சொல்லாமை என்பர். இவையனைத்தினும் குற்றம் உடையது தீவினையச்சம். எனவே இறுதியில் வைக்கப்பட்டது என்பார்.

*இல்லறவியலில் புகழ்*

இல்வாழ்க்கையின் பயனான பிறருக்குப் பயன்பட வாழும் ஒப்புரவறிதல், ஈகை என்பனவற்றையடுத்தும் வைக்கப்பட்டது. இவற்றுள் ஒப்புரவறிதலைக் காட்டிலும் ஈகை சிறந்தது என்பார். இறுதியில் இவற்றால் ஆகும் புகழை இல்லறவியலின் இறுதியில் வைத்துள்ளார் என்பார்.

*பண்பு வளர்ச்சி*

புலவர் குழந்தையின் வைப்பு முறை விளக்கங்களும் அவர் இல்லறவியலில் செய்த அதிகார வைப்பு மாற்றங்களும் பெரும்பாலும் பண்பு வளர்ச்சி அடிப்படையில் அமைக்கப்பட்டன என்பது அவர்தம் இணைப்புரைகளால் விளங்கும்.

*ஊழியல்*

காலந்தோறும் திருக்குறள் ஆய்வு வரலாற்றில் ஊழ் பற்றிய கருத்துகளில் வன்மையும் மென்மையும் காணப் படுகின்றன. ஊழின் நம்பிக்கை, நம்பிக்கையின்மை குறித்து இருவேறுபட்ட கருத்துகள் உண்டு. புலவர் குழந்தை இவ்வியலின் முன்னுரையில் ஊழ் முப்பாலுக்கும் பொதுவாகையால் தனியியலாக வைக்கப்பட்டது என்பார். பொதுவாயினும் அறத்தோடு இயைபுடையான் அறத்துப்பாலை அடுத்து வைக்கப்பட்டது என்று குறிப்பிடுவார். இதற்கு முன்னுரையாக மிக நீண்ட விளக்கம் தருவது பெரிதும் கருதத்தக்கது.

*உலகியல்*

'ஊழ் - முறைமை; உலகியல் நிகழும் முறைமை; உலகியலின் இயற்கை நிகழ்ச்சி. அதாவது பொருளும் காலமும் செயற்படும் தகுதியும் சுற்றுச் சார்பின் தகுதியும் நமது எண்ணத்தின் முயற்சியின் செயலின் தகுதிக்கு ஒத்து வருதலும் ஒவ்வாது வருதலுமாம். ஒத்து வருதல் - ஆகூழ் எனவும் ஒவ்வாது வருதல் - போகூழ் எனவும்படும். செயற்படுதல் - நிகழுதல். மக்களின் எண்ணம் முதலிய வற்றினுள் அடங்காமல் அப்பாற்பட்டு இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி ஊழ் எனப்படும். அந்நிகழ்ச்சியின் போக்கில் நாம் செய்வன ஆகும். அதற்கு எதிரிடையாகச் செய்வன ஆகா' என்பது புலவர் குழந்தை தரும் விளக்கமாகும்.

*சூழல்*

வணக்கத்திற்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஊழ் என்பதற்குச் 'சூழல்' என்று பொருள் கொள்ளலாம் என்பார். சுற்றுச் சூழலுக்கேற்பச் செயற்படும் நிலைகள் வேறுபடக்கூடும் என்பதனை வளர்ச்சி. வளர்ச்சியின்மை ஆகியவற்றோடு பொருத்திக் காட்டுவார். எனவே முன்வினையாகிய நல்வினை, தீவினை ஆகியவற்றோடு பொருத்திக் காட்டாது உலகியல் நிலையில் சூழலைக் காணலாம் என்பது தெளிவாகும்.





படிப்பகம்

www.padippakam.com



### புதிய அணுகுமுறை

இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைவதற்கு ஏதுவாகிய நியதி என்னும் பழைய மரபில் உரை காண்பதைக் காட்டிலும் புதிய அணுகுமுறையில் ஊழைக் காண்பதும் வரவேற்கத்தக்கதே. மிக எளிய சான்றால் ஆகூழ், போகூழ் ஆகியவற்றைப் பின்வருமாறு விளக்குவார் புலவர் குழந்தை.

'ஒருவன் மாடு வாங்கச் சந்தைக்குப் போகிறான். அவன் குறித்துச் சென்ற தகுதியுள்ள மாடு சந்தைக்கு வந்திருக்காது. வந்திருந்தாலும் விலை இசையாது, விலை முடியும்போது மற்றொருவன் வாங்கிக் கொள்ளலாம். குறித்துச் சென்ற மாடு குறித்த விலையில் கிடைத்தாலும் கிடைக்கலாம். மாடு வாங்கப் போய் ஆடோ அல்லது எருமையோ வாங்கி வந்தாலும் வரலாம், மாடும் கிடைக்காமல் மாடு வாங்கிக்கொண்டு போன பணத்தையும் இழந்து வெறுங்கையோடு வீட்டுக்கு வந்தாலும் வரலாம். திருட்டு மாட்டை வாங்கித் திருடனென்று பிடிபட்டாலும் படலாம். மாடு முட்டி இறந்தாலும் இறக்கலாம். இவை எல்லாம் பொருளும் காலமும் செயற்படும் தகுதியும் ஒருவன் எண்ணம் முயற்சி செயல் இவற்றின் தகுதியும் ஒத்துவருதலும் ஒத்துவராமையும் ஆகிய இரண்டிற்கும் உலக நடப்பினை யொட்டி இயல்பாக எடுத்துரைப்பது எண்ணத்தக்கது. எனவே உலகியலின் இயற்கை நிகழ்ச்சியாகிய இவ் வுண்மையை அறியாது எண்ணியது முடிந்தால் மகிழ்வதும், முடியாவிட்டால் வருந்துவதும் அறிவுடைமை ஆகாது என்பார்.

### ஊழும் குணமும்

மக்களுக்கு இயல்பாக அமைந்திருக் கின்ற குணங்களும் ஊழுக்குத் துணை செய்யும் என்பார். ஒருவன் நல்லனவே செய்வதும் ஒருவன் தீயனவே செய்வதும் அவனுடைய இயற்கைக் குணம் என்பார். விடாப்பிடி, விட்டுக் கொடுத்தல், முரட்டுத்தனம், எளிமைத் தனம், விருப்பு, வெறுப்பு, ஒழுக்கம், ஒழுக்கமின்மை, வாய்மை, பொய்மை, தன்னலம், பொதுநலம், பொறாமை, பொறுமை, ஆசை, அமைதி, நட்பு, பகை ஆகிய இன்ன பலவெல்லாம் மக்களின் உடலமைப்புக் கேற்றவாறு அமையும் தனிப்பட்ட குணங்களாகும். இவை பிறவிக் குணம் இயற்கைக் குணம் எனப்படும். இக்குணமும் உலகியலின் இயற்கை நிகழ்ச்சியாகிய ஊழுக்குத் துணை செய்யும். இவ்வூழ் மக்களின் இயற்கைக்கு மேற்பட்டதாகலின் தெய்வம் எனவும் பெயர் பெறும். தெய்வம் மேலானது. ஊழின் இயல்பறிந்து அதற்குத்தக நடந்து கொள்ளுதலும், போகூழிற்கு வருந்தாமையும் இதன்பயன் என்று முடிவு கூறுவார்.

### உண்மையறிவு

அறிவின் விரிவும் அறியாமையுமே ஆக்கக்கேட்டுக்குக் காரணங்களாகும் என்பர். நுண்ணிய நூல் பல கற்பினும் உண்மையறிவு வெளிப்படுவதைப் பின்வரும் சான்று கொண்டு விளக்குவார். இளமையிலிருந்து தன் குடும்பத்துடனும் பக்கத்தாரிடத்திடனும் பழகும் பழக்கமாகிய சுற்றுச் சார்பும் பிறவிக் குணமும் ஒத்தல். கல்லூரிப் பட்டம் பெற்ற ஓர் அறிவியலாசிரியர் நிலமும் திங்களும் ஞாயிற்றைச் சுற்றுவதால் நிழற்பாடு (கிரகணம்) உண்டாகிறது என மாணாக்கர்க்குக் கற்பித்துவிட்டு அஃதுண்டானதும் 'ஞாயிற்றையும் திங்களையும் பாம்பு கடிக்கின்றது' என்னும் உலக வழக்கைப் புராணக்கூற்றின்பால் வைத்து நீரில் மூழ்கல், உண்ணாதிருத்தல் முதலியன செய்தல் இதன்பாற் படும் என்று எளிய செய்தியால் விளக்குவது கருதத்தக்கது.



### நல்லவை தீயவை

ஊழால் நல்லவை தீயவாம் என்பதற்கும் தீயவை நல்லவாம்



படிப்பகம்

www.padippakam.com


என்பதற்கும் பொருளுரைக்கும்போதும் முறையே இவற்றை ஆகூழ் போகூழ் என்று கூறி நல்லவை தீயவை என்பன பொருள், காலம், செயல், சுற்றுச் சார்பு ஆகியனவாம் என்றுரைப்பர். எனவே ஒத்துவருதல், ஒத்துவராமையை அறிந்து ஏற்றவாறு நடந்துகொள்ளுதலே முறையாகும் என்பர்.

*உலகியல்பு*

*இருவேறு உலகத் தியற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு*

என்னும் குறளுக்கு உரை எழுதும்போது 'உலகத்தின் இயல்பு இரு கூறாக உள்ளது; செல்வமுடையவர் ஆதலும் வேறு, அறிவு உடையவர் ஆதலும் வேறு' என எழுதுவர். விளக்கவுரையில் 'உலகியல்பு - ஊழ்' என்றுரைப்பது கருதத்தக்கது. செல்வந்தேடுவோர் எண்ணம் முயற்சி செயலெல்லாம் அறிவின்பால் செய்வதில்லை; அறிவு தேடுவோர் எண்ணம் முதலியவெல்லாம் செல்வத்தின்பால் செல்வதில்லை. இவ் விரண்டும் வெவ்வேறு தகுதியை உடையன. இவற்றை உலகியலில் வெளிப்படையாகக் காணலாம். இது பிறவிக்குணம் ஒத்தது' என்பார். ஊழ் என்பதினை உலகியல்பு என்று வரையறுக்கின்ற திறம் எண்ணுதற்குரியது.

*பால்*

'பரியினு மாகாவாம் பாலல்ல' (376) எனும் குறளில் வரும் தொடருக்குப் பரிமேலழகர் தமக்கு ஊழல்லாத பொருள்கள் வருந்திக் காப்பினும் தம்மிடத்து நில்லாவாம் என்று பொருளுரைப்பார். புலவர் குழந்தை, 'தமக்கு உரிமை யல்லாதவை வருந்தித் தேடினும் ஆகாவாம்' என்றுரைத்துப் பால் என்பதற்குப் பக்கம் எனப் பொருள் தருவார். பால் அல்ல - தம் பக்கம் அல்லாதவை, தமக்குரிமை அல்லாதவை, ஆகும் தகுதியில்லாதவை என்னும் விளக்கம் சிந்திக்கத்தக்கதே. ஆகும் தகுதி இல்லாதவை வருந்தினும் ஆகா; ஆகும் தகுதி உள்ளவை சும்மா இருந்தாலும் ஆகும்' என இக்குறளுக்கு முடிவுரைக்கின்றார்.

*வகுத்தான்*

கோடியளவு நுகரப்படும் பொருள்களைச் சேர்த்து வைத்தவர்களுக்கு அப்பொருள் களை உண்டாக்கியவர்களது வகைப் படியில்லாமல் வேறு வகையினால் நுகர்தல் முடியாது என்பது 'வகுத்தான் வகையல்லால் .....' என்னும் குறளுக்கு அவர்தரும் விளக்கமாகும். இங்கு நுகர்பொருள்களின் தகுதியும் நுகர்வோன் தகுதியும் ஒவ்வாமையை எடுத்துரைக் கின்றார், பொருள்களின் தகுதிக்கு மாறாக நுகரப்படாது என்பது கருத்தாகும். பனிநீரும் தேம்பாகும் சளி உள்ளவனுக்கு ஆகா என்பது இவர் தரும் சான்றாகும். குளிருக்குடைய கம்பளி வெயிலுக்கு ஆகாது என்னும் சான்றினையும் தருவார். பொருள் - நுகர் தகுதி இரண்டின் அடிப்படையில் பயனைச் சுட்டுவது காண்க.

*ஊழிற் பெருவலி*

உலகியல்பு வேறாக இருக்க நாமொன்றைச் செய்தால் அவ்வுலகியல்புப் படியே நடக்குமாகையால் அவ்வுலகியல்பை விட விலையுடைய பொருள் இல்லை என்றுரைக்கும் போது ஊழ் என்பதனை உலகியல்பு என்றே சுட்டுகின்றார்.

*ஊக்க நெறி*

இரு வினைகளின் வழியாக ஊழினை உணர்த்தும் மரபிற்கு மாறாக உலகியல்பு வழியாக ஊழினை விளக்கும் திறமும் அதனால் மானுடர்க்குரிய தளர்ச்சியைப் போக்கி உலகியல் எனவுரைத்து ஊக்கம் தரும் நெறியும் புலனாவதைப் புலவர் குழந்தையுரையால் அறிந்து மகிழ முடிகின்றது.

*அரசியல் வைப்புமுறை*



பொருட்பாலினைப் பரிமேலழகர் அரசியல், அங்கவியல் ஒழிபியல் என மூன்றாகப் பகுத்துள்ளார். மணக்


படிப்பகம்

www.padippakam.com



குடவரும் பரிப்பெருமாளும் அரசியல், அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பவியல், குடியியல் என ஆறாகப் பகுத்துள்ளனர். காலிங்கர் ஏழாகப் பாகுபடுத்தியுள்ளார். அரசியல் அமைச்சியல், அரண், கூழ், படை, நட்பியல், குடியியல் என்பன புலவர் குழந்தை காலிங்கரைப் பின்பற்றி ஏழாகப் பகுத்துள்ளபோதிலும் வைப்புமுறையில் கூழினை முன்னதாகவும் பின்னர் அரணியலையும் கொள்வர். இவ்வைப்பு முறைக்கு அவர் தரும் காரணம் வருமாறு:

'பொருட்பா'லில் கூறப்படும் ஆட்சி தலைமையுடைமையின் அரசியல் முதலிலும் அரசனோடு உடனிருந்து ஆட்சி நடத்தலின் அமைச்சியல் அதன் பின்னும் ஆட்சி நடப்பதற்கு அடிப்படையாகலின் கூழியல் (நாடு) அதன் பின்னும், அரசுக்குப் பாதுகாப்பாக உடைமையான் அரணியல் அதன் பின்னும் படைபோல அரசுக்குச் சிறப்புடைய காப்புடைமையான் நட்பியல் அதன்பின்னும் ஆளப்படுவோராகிய குடிமக்களின் தன்மை கூறும் குடியியல் இறுதியினும் வைக்கப்படும்.

பொருள் முறைமையும் அதிகார இயைபில் இயற்கையில் அமைந்த தொடர்பும் இவ்வகை முறையால் புலனாகின்றன. 'அரசியல் - காரணங்கள் நல்லாட்சி இலக்கணம் இவ்வியலில் கூறப்படும் இலக்கணங்கள் எல்லா அரசியல் தலைவர்க்கும் பொருந்தும்' என இன்றைய சூழலுக்கும் ஏற்பச் சுட்டுவது கருதத்தக்கது.

*விளக்கங்கள்*

'இறைமாட்சி - அரசனது நற்குண நற்செய்கைகள் எனப் பரிமேலழகரைத் தழுவியே பெரும்பாலும் விளக்கம் தருவது குறிப்பிடத்தக்கது. கல்லாதான் ஒட்பம் (404) என்பதற்குப் பரிமேலழகர் 'ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடு' எனக் கூறி விளக்குவார். இதனையே புலவர் குழந்தை அவ்வறிவு



நல்லறிவாகாது - ஆயினும் சேற்றின் மீது உள்ள நண்டின் தாரையை எழுத்தென்பது போன்றதேயாகும் என எளியவுரையாக்கி உரைப்பர்.

*தாமின்புறுதல்*

'தாமின்புறுதல்' (499) என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் தரும் உரை வருமாறு.

'நிகழ்வின்கண் சொற்பொருள்களின் சுவை நுகர்வானும் புகழ் பொருள் பூசை பெறுதலானும், எதிர்வின்கண் அறம், வீடு பயத்தலானும் அதனான் இடையறாத இன்பம் எய்துதல்'.

*புலவர் குழந்தையுரை*

'சொற்பொருளின் சுவை நுகர்ந்து இன்புறுதலும், தம் அறிவையும், ஆராய்ச்சியையும் இயற்றிய நூல்களையும் எண்ணி இன்புறுதலாம்'.

நிகழ்வு எதிர்வு வீடு என்னும் நெறி நின்று பரிமேலழகர் விளக்கம் தரப் புலவர் குழந்தை கல்வியால் ஒருவர் பெறும் இன்பவுணர்வினை நன்கு புலப் படுத்துகின்றார். உளவியல் நெறிக்கு ஏற்புடையதாகவும் விளங்குவது காண்க.

*தெரிந்து தெளிதல்*

தெரிந்து தெளிதல் அதிகாரத்தில் உள்ள அச்சம் நான்கிற்குப் பரிமேலழகர், அற உபதை, பொருள் உபதை, இன்ப உபதை, அச்சஉபதை எனப் பொருள் கொண்டு நீண்ட உரை விளக்கம் தருவார். இக்கருத்தினை எளிய முறையில் புலவர் குழந்தை மாற்றியமைத்துப் பின்வருமாறு தருவார்.

'உயிரச்சம் - தன் உயிருக்காக அஞ்சும் அச்சம் தன் உயிருக்கு உண்டாகும் கேட்டுக்கு அஞ்சுதல் தன் உயிருக்கு அஞ்சிக் கடமையில் தவறுதல் - அதாவது அறம் பிறழாமலும், பொருளுக்காகக் கடமை தவறாமலும், இன்பத்தின் பொருட்டு ஒழுக்கம் தவறாமலும், உயிர்க்கு உண்டாகும் - கேட்டிற்கு



படிப்பகம்

www.padippakam.com



அஞ்சிக் கடமை தவறாமலும் உள்ளவனையே தேர்ந்தெடுக்க வேண்டும். நமது கடமைக்கு மாறாக ஒன்றைச் செய்யாவிட்டால் உன்னைக் கொல்வேன் என்றாலோ வருத்தினாலோ அதற்கு அஞ்சிக் கடமையில் தவறுதல். இந்நான்கு வகையிலும் ஆராய்ந்து பார்த்து இந்நான்கிலும் தவறாதவனையே வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும்

இங்ஙனம் பல்வேறிடங்களிலும் பரிமேலழகரைத் தழுவியே உரை அமைத்துக்கொண்டாரெனினும் சில இடங்களில் மாறாகப் பொருள் கொண்டு உரைப்பதும் கருதத் தக்கது.

### *அந்தணர் நூல்*

அந்தணர் நூற்கும் (543) என்னும் தொடருக்குப் பரிமேலழகர் அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் எனப் பொருளுரைப்பர். புலவர் குழந்தை அறவோர் செய்த நூல் (553) என்பார். திருவள்ளுவரை இங்கு 'அறவோர் என்று உரை விளக்கத்தில் விதந்து கூறுவர். 'அறவோர் செய்த பல்துறை நூல்களில் அற நூல்களில் கூறப்படும் அறங்கள் திருக்குறள் அறத்துப்பாலில் கூறப்படும் அறங்கள். வள்ளுவர் அறவோராவர். அரசன் முறை செய்யாவிடின் அறவோர் நூல் போற்றாமையோடு அறவோர் நூல் செய்யவும் முடியாது என்றாராம்' என்பது அவர் தரும் விளக்கமாகும்.

### *பேய் கண்டன்னது*

செவ்வியும் இனிமையும் இல்லாரிடத்து உடைய செல்வம் பேய் தன்வயமாக்கிய செல்வம்போலப் பிறருக்கு பயன்படாது என்பது பரிமேலழகர் உரை (565). குழந்தை, பேய் கண்டுள்ள செல்வத்தை அச்சந்தரும் செல்வம் என்பர். 'பேய் அச்சம்' இங்கே அச்சந்தரும் பொருளைக் குறித்தது. பேயிருள் - அச்சந்தரும் இருள். பேய்க் கரும்பு. பேய்ச்சுரை, பேய்த் தேர் என்னும் வழக்குகளையும் எடுத்துக் காட்டி நிறுவுவார்.

### *தெய்வத்தானாகாதது*

'முயற்சி ஊழின்படி கருதிய பயனைக் கொடுக்காதாயினும் தன் உடம்பை வருத்திய வருத்தத்தின் அளவு கூலி கொடுக்கும்' என 619 - ஆம் குறளுக்கு உரை வகுப்பார். இங்குத் தெய்வம் என்பதற்கு ஊழ் என்றே பொருள் உரைப்பது காண்க.

'இறையாட்சி தொடங்கி' இடுக்கணழியாமை ஈறாக அரசியலுக்குரியவையாகப் பிறர் போலவே கொண்டாரெனினும் வைப்பு முறைகளில் சிற்சில மாற்றங்களைப் புலவர் குழந்தை அமைத்துள்ளமையையும் கருதத்தக்கது.

| *பரிமேலழகர்* | *புலவர் குழந்தை* |
|---|---|
| இறைமாட்சி (39) | இறைமாட்சி (39) |
| கல்வி (40) | கல்வி (40) |
| கல்லாமை (41) | கல்லாமை (41) |
| கேள்வி (42) | கேள்வி (42) |
| அறிவுடைமை (43) | அறிவுடைமை (43) |
| குற்றம் கடிதல் (44) | குற்றங் கடிதல் (44) |
| பெரியாரைத் துணைக்கோடல் (45) | பெரியாரைத் துணைக் கோடல் (45) |
| சிற்றினம் சேராமை (46) | சிற்றினம் சேராமை (46) |
| தெரிந்து செயல்வகை (47) | சுற்றந்தழால் (47) |
| வலியறிதல் (48) | தெரிந்து செயல்வகை (48) |
| காலமறிதல் (49) | வலியறிதல் (49) |
| இடன் அறிதல் (50) | காலமறிதல் (50) |
| தெரிந்து தெளிதல் (51) | இடனறிதல் (51) |
| தெரிந்து வினையாடல் (52) | பொச்சாவாமை (52) |
| சுற்றம் தழால் (53) | தெரிந்து தெளிதல் (53) |
| பொச்சாவாமை (54) | தெரிந்து வினையாடல் (54) |
| செங்கோன்மை (55) | ஒற்றாடல் (55) |
| கொடுங்கோன்மை (56) | செங்கோன்மை (56) |
| கெடுவந்த செய்யாமை (57) | கொடுங்கோன்மை (57) |
| கண்ணோட்டம் (58) | வெருவந்த செய்யாமை (58) |
| ஒற்றாடல் (59) | கண்ணோட்டம் (59) |
| ஊக்கம் உடைமை (60) | மடியின்மை (60) |
| மடி இன்மை (61) | ஊக்கமுடைமை (61) |
| ஆள்வினை உடைமை (62) | ஆள்வினையுடைமை (62) |
| இடுக்கண் அழியாமை (63) | இடுக்கண் அழியாமை (63) |



பொருளியைபு கருதி இங்ஙனம் சிலமாற்றங்களைக் கொண்டுள்ளார் எனலாம்.



படிப்பகம்

www.padippakam.com



***அமைச்சியல்***

புலவர் குழந்தை அமைச்சியலைப் பின் வருமாறு பாகுபடுத்தி முறைவைப்பு செய்துள்ளார். 1. அமைச்சு, 2. சொல்வன்மை, 3. அவையறிதல், 4. அவையஞ்சாமை, 5. குறிப்பறிதல், 6. வினைத்தூய்மை, 7. வினைத்திட்பம் 8. வினை செயல்வகை, 9. தூது, 10. மன்னரைச் சேர்ந்தொழுகல்.

***வைப்புமுறை***

அமைச்சு அமைச்சரின் தன்மையைக் கூறுவதால் அதனை முதலிலும், அதன்பின் சொல்வன்மையும் சொல்வன்மையிருக்கினும் அவையின் தன்மையறிந்தே சொல்ல வேண்டுமாதலின் அதன்பின் அவையறிதலும், அவையின் தன்மையறிந்து பேசுவோன். அவ்வவையினரைக் கண்டு அஞ்சினால் பேச்சின் பயன் முழுவதும் பெறமுடியாதாகையால் அதன்பின் அவையஞ்சாமையும் ஓரவையின்கட் பேசுவோர் அவ்வகையோர் குறிப்பறிந்து பேசுதலே ஏற்புடைத்தாகலின் அதன்பின் குறிப்பறிதலும், குறிப்பறிந்து கூறிச்செய்யும் செயல் நற்செயலாக இருக்க வேண்டுமாதலின் அதன்பின் வினைத் தூய்மையும் தூய்மையான வினையையும் திறமையுடன் செய்ய வேண்டுமாதலின் அதன்பின் வினைத்திட்பமும் அவ்வினையை எளிதில் செய்யும் வகையான வினை செயல் வகை அதன்பின்னும் வைக்கப்பட்டன. இனி அமைச்சரே தூதுக்குரியோராகையால் அதன்பின் தூதும் இத்தகைய அமைச்சர், மன்னரிடம் எவ்வாறு பழகவேண்டும் என்பதை அறிந்து அவ்வாறு பழக வேண்டுமாகலின் அதன் பின் மன்னரைச் சேர்ந்தொழுகலும் வைக்கப்பட்டன என்ற அமைச்சியலின் வைப்புமுறையைப் பொருளமைதி துலங்கக் கூறுவது கருதத்தக்கது.

அமைச்சு மன்னரைச் சார்ந்தொழுக வேண்டிய நெறியை முறைப்படுத்தித் தருவதும் இவ்வைப்புமுறையால் புலனாகின்றது.

***ஐந்து***


*வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு*
*ஐந்துடன் மாண்டது அமைச்சு (622)*

என்னும் குறளில் வரும் 'ஐந்து' என்பதற்குப் பொருள் தரும்போது ஐம்பொறிகளின் தூய்மையுடன் திருந்த உடையவனே அமைச்சன் என்பர். வன்கண் முதலிய நான்கும் ஐம்பொறித் தூய்மையுடன் திருந்த உடையவன் அமைச்சனாவான். ஐந்து-தொகைக் குறிப்புச் சொல். வன்கண் முதலிய நான்கனொடு ஐம்பொறித் தூய்மையும் உடையவன் என்க' என்பது மேலும் அவர் தருகின்ற விளக்கமாகும். பரிமேலழகர், 'கருவியும் காலமும் செய்கையும். செய்யும் அருவினையும்' என்று கூறும் முற்குறளின் (631) செய்தியோடு சேர்த்து ஐந்து என்பதனோடு இணைப்பர். இரண்டு குறள்களின் கருத்துக்களையும் இணைத்து ஐந்து அங்கங்கள் என்பார். எண்ணொடு நீண்டது. அவ்வைந்து எனச்சுட்டு வருவிக்க. இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது. அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும் அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறுதற்கும் என்பார் பரிமேலழகர் ஐம்பொறித் தூய்மை அமைச்சருக்கு வேண்டும் என நயத்தோடும் புதுமையொடும் சுட்டுவது பெரிதும் உளங்கொளத்தக்கதாகும்.

***சட்டமும் மாற்றமும்***

*செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்து செயல் (637)*

என்னும் குறளுக்கு விளக்கம் தரும்போது அவ்வப்போது நடக்கும் உலக நடைக்கும் ஏற்றவாறு செயலாற்றுவதே நூலறிவின் பயனாகும். சட்டங்களின்படி நடவாமல் உலக நடைக்கு ஏற்றவாறு சட்டங்களை





படிப்பகம்

www.padippakam.com



மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதாம் என்று எளிமையாக்கி உரைப்பர். நூல் நெறியான் வினை செய்யும் திறங்களை அறிந்த இடத்தும் அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தச் செய்க என்னும் பரிமேலழகரின் உரைக்கு எளிய விளக்கமே மேற்கூறியது எனலாம்.

### *கேட்டாரும் கேளாரும்*

சொல்வன்மையின் சிறப்பு விரும்பிக் கேட்கும் வண்ணம் உரைப்பது ஆகும். குறளில் வரும் சொற்களான கேட்டார், கேளார் என்பனவற்றிற்குக் 'கேட்டார் - நட்பாய் ஏற்றுக் கொண்டார்; கேளார் - பகையாய் ஏற்றுக் கொள்ளாதார்' எனப் பரிமேலழகர் உரை கூறுவர். குழந்தை, கேட்பவர் மனத்தைக் கவர்ந்து கொள்ளும் தன்மையை உடையனவாய் என்றும் நேரில் கேளாதவரும் இனி எப்போது கேட்போம் என்று விரும்பும்படிப் பேசுவது என்றும் பொருள் உரைப்பர். விளக்கவுரையில் அறிஞர் அண்ணா அவர்களைச் சான்று காட்டி விளக்கம் தருவது பெரிதும் குறிப்பிடத்தக்கது. அவ்விளக்கவுரை வருமாறு:

'கேட்டார் - நேரில் பேசக் கேட்டவர்', கேளார் - நேரில் கேளாது கேட்டார் சொல்லக் கேட்டவர். நேரில் கேட்டவரேயன்றிக் கேட்டார் வாய்க் கேட்டாரும் கேட்க விரும்பும்படி பேசுவதே சொல்வன்மையாகும். 6-3-67- இல் பதவியேற்ற தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சு இதற்கு எடுத்துக்காட்டாகும்.'

### *தெய்வத்தோடு ஒப்பக்கொளல்*

*ஐயப் படாஅது அகத்தது உணர் வானைத்*
*தெய்வத்தோ டொப்பக் கொளல் (702)*

என்னும் குறளில் வரும் தெய்வம் என்னும் சொல்லிற்கு மேன்மை எனப் பொருளுரைப்பார். தெய்வத்தோடு ஒப்பக் கொளல் - நன்கு மதித்தல். தெய்வத்தமிழ் என்பது போலத் தெய்வம் மேன்மைக்கு எடுத்துக்காட்டு என்பார். முகவுரையிலும் தெய்வம் என்னும் சொல்லுக்குப் பின்வருமாறு விளக்கம் தருவது கருதத்தக்கது:

'மலையில் மூங்கில் ஒன்றோடொன்று தேய்வதனால் தீ உண்டாகிறது. கல்லைச் செதுக்கும்போது தீப்பொறி தோன்றுகிறது. இவற்றிலிருந்தே முதன் மாந்தர் தீக்கடை கோலும் சக்கிமுக்கிக் கல்லும் கண்டுபிடித்திருக்கவேண்டும். பொருள்கள் ஒன்றோடொன்று தேய்வதனால் தீயுண்டாவதால் பழங்காலத்து மக்கள் அதைத் 'தேய்' என்றனர். 'தேயு' வடமொழி. தேய் என்பதே நாளடைவில் தேய் - தே - தீ எனத் திரிந்தது. அயற் சொல்லானதால் வடமொழியில் திரியாது அப்படியே உள்ளது. உணவு சமைத்தல், குளிர் நீக்கல் முதலிய நன்மை குறித்துத் தீயை மேலானது எனப் போற்றிவந்தனர். தேய் என்னும் சொல்லினடியாகப் பிறந்தவையே தேவன், தேவர், தெய்வம் என்னும் சொற்கள், தேவன் - ஆண்பால்; தேவி - பெண்பால் - தேவர் - பலர்பால்; தெய்வம் - பண்புப் பெயர்; அரசனைத் தேவன் என்றதும் அரசியைக் கோப்பெருந் தேவி என்றதும் முதன்மையும் மேன்மையும் பற்றியேயாகும். தெய்வம் என்னும் சொல் குறள் 43, 55, 672 ஆகிய மூவிடத்தும் மேன்மையே குறித்தல் காண்க.

இவ்வியக்கத்திற்கு மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணரின் ஒப்பியல் மொழி நூல் (பக். 252) கருத்தினையும் சான்று காட்டி விளக்குவது குறிப்பிடத் தக்கதாகும்.

### *பழமையும் புதுமையும்*

புலவர் குழந்தையின் கருத்துக்களில் பெரும்பான்மை முன்னையோர் கருத்துக்களைத் தழுவிக்கொள்ளும் நெறி தென்படுகின்றது. சிற்சில இடங்களில் தமக்குரிய கொள்கைக்கேற்றவண்ணம் புதிய சிந்தனைகளை இணைத்துக் கூறும் நெறியும் புலனாகின்றது. மிக எளிமையாகக் கற்போர் புரிந்து





படிப்பகம்

www.padippakam.com



கொள்ளும் நிலையில் உரைகண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

*கூழியல்*

பொருட்பாலில் உள்ள 'நாடு' என்னும் ஓர் அதிகாரத்தைமட்டும் 'கூழியல்' எனப் பகுத்துக்கொண்டுள்ளார் புலவர் குழந்தை. நாட்டை விளைபொருளின் பேரால் குறிப்பதைப் பின்வரும் விளக்கங்காட்டும்.

'கூழ் - உணவு, இங்கு உணவுப் பொருள் முதலியன விளை பொருள்களைக் குறிக்கும் 'தள்ளா விளையுளையுடையதே நன்னாடாகையால் (731) நாட்டை விளை பொருளின் பேரால் கூழ் (381) என்றார். கூழியல் - நாட்டியல், நாட்டின் இலக்கணம்!

*பெரும்பொருள்*

*பெரும் பொருளாற் பெட்டக்க தாகி*
*அருங்கேட்டால்*
*ஆற்ற விளைவது நாடு (732)*

இக்குறளில் வரும் 'பெரும் பொருளால்' என்னும் தொடருக்குப் புலவர் 'நெல் விளைவால் விரும்பத்தக்கதாகி' என்றே உரை கூறுவார். கம்பு, சோளம் முதலிய தாவரங்களைச் சிறு தவசம் என்று கூறும் வழக்கால் பெரும்பொருள் என்பது நெல் எனக்கொள்ளப்பட்டது என்று அவர்குறிப்பது கருதத்தக்கது. வயல் சூழ்ந்த இடங்களில் வாழவே மக்கள் விரும்புவர். இவ்வாறே 'அலகுடை நீழலவர்' (1034) என்னும் குறளுக்கும் 'அலகு- நெல் உழவால் ஏனைத் தவசங்களும் பிற பொருள்களும் விளையுமேனும் மக்களால் விரும்பப்படுவது நெல்லுணவே யாகலான் (631) உழவரை 'அலகுடைய நீழலவர்' என்றார்' என்று எழுதுவர். மேலும் உழவுத் தொழிலின் வளர்ச்சியே அந்நாட்டரசனுக்கு வெற்றியைத் தந்து மண் முழுதும் அவனதாக்கும் என்பதாம் என்று விளக்கமும் கூறுவர். பெரும் பொருள் என்பதற்குப் பரிமேலழகர் அளவிறந்த பொருள் உடைமை என்று கூறப் புலவர் குழந்தை நெல்லைச் சுட்டுவது பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும்.

*பொறை*

இறையல்லாத அரசியல் செலவு பலவற்றையும் தாங்கும் சுமை என்பார். அயல் நாட்டோடு நடக்கும் போர்ச் செலவுக்கோ நாட்டின் ஒரு பகுதியில் உண்டாகிய பஞ்ச நீக்கத்திற்கோ, அணைக்கட்டு முதலிய நாட்டுச் செலவுகளுக்கோ குடிகளிடம் வாங்கும் வரி, இறை - நிலவரி முதலிய அரசிறை. இவ்வாறு பலமுறை அடுத்தடுத்துக் கொடுக்க நேரினும் கொடுத்து முறையாகக் கொடுக்கும் வரியையும் கொடுக்கவல்லதே நாடாகும் என்பார், பரிமேலழகர் பொறை என்பதனைப் பாரங்கள் எனச் சுட்டி மக்கள் தொகுதியும் ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும் என்பார்.

*பல்குழு*

பல்குழு என்பதற்கு இன்றைய அரசியல் சூழலில் பொருள் காண்பது சுவையாக அமைந்துள்ளது. பல் குழு செல்வாக்குள்ள சிலர், தங்கள் தலைமையின் கீழ் ஊர் மக்களை வெவ்வேறாகப் பிரித்து வைத்து ஊரைக் கெடுக்கும் ஊர்க் கட்சிகள், இவை இன்றும் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் இருத்தலை அறிக. இவை இன்றுள்ள அரசியல் வகுப்புக் கட்சிகள் போல் நாட்டுக்குக் கேடு சூழ்வன. இவையன்றி அமைதியாக இருக்கும் நாடே நல்ல நாடாகும் என்பது காலத்துக்கேற்ற பொருளாக விளங்குகின்றது எனலாம்.

*வளம் குன்றாத நாடு*

'கேடறியாக் கெட்ட விடத்தும்' (736) என்பதற்குப் பகைவரால் கெடுதலறியாத என்று எழுதுவர் பரிமேலழகர். புலவர் குழந்தை 'பயிர் நோய் முதலியவற்றால் கெடுதலை அறியாத நாடு' என்பார். அவ்வாறே வளங்குன்றாத நாடு என்பதற்கு ஓரிரு போகம் கெட்டதாயினும் வளங்குன்றாத நாடு என்பார்.





படிப்பகம்

www.padippakam.com



இருபுனலைக் 'கீழ்நீர் மேல்நீர்' எனப் பகுத்துக் கீழ்நீர் என்பதற்குக் கீழிருந்து ஊறிவரும் கிணற்று நீர் என்பார்.

### வளந்தரும் நாடு

வருந்தாமல் வளந்தரும் நாடுகளே நல்ல நாடுகள் என்பார். வருந்த வளந்தரும் நாடு நாடாகாது. நிலவளமும் நீர்வளமும் பொருந்திக் கெடுதி இல்லாமல், தள்ளா விளைவு விளையும் நாடே அறிவுடையோர் விரும்பும் நாடாகையால் வருந்தித் தேடாமல் வளம்தரும் நாட்டை நல்ல நாடு என்று விளக்கம் கூறுவார். போகத்துக்குப் போகம் எருப்போட்டு வருந்த வளந்தருவதும் நீர் வளமற்றதுமான நாடு நாட வளம்தரும் நாடு ஆகும் என்பர்.

புலவர் குழந்தை நாட்டியல் என்னும் கூழியல் அதிகாரத்திற்குப் பெரும்பாலும் கிராமியச் சூழலையே பின்புலமாகக் கொண்டு உரை எழுதியிருப்பது குறிப்பிடத் தக்கது. தான் வாழ்ந்த பின்புலமே இதற்கு ஆதாரமாய் விளங்கியது எனலாம்.

இன்றைய சூழலுக்கேற்ப அரசியல் பின்னணிகளையும் கட்சிச் சூழல்களையும் மையமாக வைத்து உரையெழுதும் இயல்பு பல இடங்களிலும் காணமுடிகின்றது. அவ்வாறே உழவியல் செய்திகளை மண்ணின் மணம் கமழ நாட்டியலுக்கும் பொருத்திக் காண்கின்றார். தவசம் என்னும் கிராமிய உழவியல் வழக்குச் சொல்லைப் பயன்படுத்தி அம்மக்கள் நெற்பயிருக்கு முதன்மை தருவதைச் சுட்டி நெற்பயிரால் உலகாளும் தன்மையைப் பெறமுடியும் என உரைப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

✧ ✧ ✧

## நிறுவன உறுப்பினர்கள்

*தொடர்ச்சி*

1. டாக்டர் கா. அரங்கசாமி
   ஆர்.எஸ்.பி. நகர், தாராபுரம்.

2. பழ. பழநியப்பன்,
   'சரணம்' அண்ணாநகர், சென்னை-40

3. என். பழநியப்பன்,
   வள்ளுவர் பண்ணை, சி.ஐ.டி. நகர்,
   சென்னை-35.

4. சி. தட்சிணாமூர்த்தி
   சி.வை.ப.நகை மாளிகை,
   வடக்கு ரத வீதி,
   திருச்செங்கோடு - 637211.

5. நா. பெரியசாமி,
   தஞ்சாவூர்.



படிப்பகம்

www.padippakam.com



# திருக்குறள் ஆவணங்கள்

கவிஞர் தமிழ்நாடன்



உலகம் போற்றும் பொதுமறை திருக்குறள். திருக்குறள் தமிழ்நாட்டில் ஓர் ஆட்சி நூலாகவும் விளங்கியது. தமிழ் நாட்டில் சோழர், பல்லவர் காலத்தில் மனுதருமமே ஆட்சி நூலாய் விளங்கிற்று. கொங்கு நாட்டில் திருக்குறள் ஆட்சி முறை என்னும் குறிப்பு புதியது. தமிழ் நாட்டில் வேறுபகுதியில்கூடத் திருக்குறள் ஆட்சி நூலாக விளங்கி இருக்கக்கூடும். அத்தகைய ஆவணங்களைத் திரட்ட வேண்டும் என்பார், ஈரோடு முனைவர் செ. ராசு.

## 1. கல்வெட்டு

சேலம் மல்லூர் அருகே உள்ளது பொன் சொரிமலை. இந்த மலையில் திருக்குறள். கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தமிழகத்தில் அறியப்படும் மிகப்பழைய திருக்குறள் கல்வெட்டாகும் இதன் காலம் 15ஆம் நூற்றாண்டாகும். இந்த கல்வெட்டில் கீழ்க்காணும் திருக்குறள் பொறிக்கப்பட்டு உள்ளது.

*தன்னூரன்*
*பெருக்கற்*
*குத் தான் பி*
*றிதூனுண் பா*
*னெங்ஙன*
*மாளுமருள்*

(எண் 251) இந்த குறள் கொங்கு நாட்டு மக்கள் கொல்லாமையை வலியுறுத்தி வாழ்ந்ததை விளக்கும். மேலும்கொங்கு நாட்டில் சமணம் 15ஆம் நூற்றாண்டு வரையிலும் இருந்ததற்கு இது ஒரு சான்றாகும்.

## 2. பழனிசெப்பேடு

அடுத்துபழனி செப்பேடு.

மதுரை நாயக்கர்கள் கொங்கு நாட்டை ஆண்டபோதும் கொங்கு நாட்டுச் சிற்றரசர்கள் திருக்குறளைப் போற்றி ஒழுகினர். திருமலை நாயக்கர் காலத்தில் பழனியில் வீரமுடியாளர் சார்பில் ஒரு மடம் கட்டப்பட்டது. இதனைக் கட்டு வித்தவர் சின்னோப நாயக்கர் என்பார்.






படிப்பகம்

www.padippakam.com





*வள்ளுவர்மரபுகாத்து*
*முப்பால் மொழியின்படிக்கு*
*அல்லவைகடிந்து நல்லவை*
*நாட்டி*
*ஆறிலொன்று கடமை*
*கொண்டு*
*அசையாமணிகட்டி*
*அரசாள்பவர்*
*சின்னோபர்*

என்று வீரமுடியார் செப்பேடு பாராட்டுகிறது. (கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள், தமிழ்ப்பல்கலைக்கழகம், 1991).

### 3. பூந்துறைநாட்டார்மேலோலை

மதுரை முத்துவீரப்ப நாய்க்கர் காலத்தில் கொங்குப்பகுதியிலுள்ள அரச்சலூருக்கும் காரையூருக்கும் எல்லைத்தகராறு இருந்து வந்தது. அதைத் தீர்த்துவைக்கப் பணிக்கப்பட்டவர் நாய்க்கரின் தாராபுரம் அதிகாரி திம்மப்பமுதலியார். தகராறுதீர்ந்து 1617ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இப்பதிவு பூந்துறைநாட்டார் மேலோலை என்றழைக்கப்படுகிறது. அதில்,

*அன்புடைய தாயேபோல்*
*அனைத்து உயிர்கட்கும்*
*இனிமைநல்கி*
*வள்ளுவர் உரைத்த*
*முப்பால் மெழியின்படியே*
*செங்கோல் நீதிவழுவாமல்*

நடத்திவரும்நாளில் என்ற வாசகம் பதியப் பெற்றுள்ளது (கொ.ஆ)

### 4. கபிலமலைச் செப்பேடு

பரமத்தி பகுதியைப் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆண்ட குறுநிலத்தலைவன் அல்லாள இளையாநாய்க்கன் என்னும் வேட்டுவன். அவர் கபிலமலையில் திருவள்ளுவருக்கு ஒரு மடம் அமைத்தார் மடத்தின் தலைவரின் பெயர் திருவள்ளுவர் இணையாநாய்க்கன், திருச்செங்கோடு, பழனியிலும் இவ்வாறான மடங்கள் அமைத்து மூன்றையும் கபிலமலைத் திருவள்ளுவருக்கு எழுதிக் கொடுத்தார். (கபிலமலை செப்பேடு கொ. ஆ) கபிலமலை வள்ளுவர் மடத்திற்கு ஒரு லட்சம் வராகன் செலவானதாம். நூறு கொத்தர்கள் கோவில் பணிசெய்தனராம். திப்புசுல்தான் காலத்தில் இந்தமானியம் நிகழ்ந்தது என்று செப்பேடு விளக்குகிறது.

### 5. பல்லடம் செப்பேடு

பல்லடத்தில் நாரணபுரம் என்று ஓர் ஊர் உண்டு. இந்த ஊரின் தலைவராக நாராயணக் கவுண்டர் இருந்தார். ஊரின் தெய்வம் அங்காள பரமேஸ்வரி. அம்மனுக்குக் குடிவரியாக 24 மனைச் செட்டியார்கள்.






படிப்பகம்

www.padippakam.com





ஆண்டொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட பணம் கொடுத்தனர். அது பற்றிய விவரம் ஒரு செப்பேட்டில் பதியப்பெற்றிருக்கிறது. இதன்காலம் 1-2-1798.

*நீதிசாகரம்*
*நினைவுடன்கற்று......*
*வள்ளுவர்மரபுகாத்து*
*முப்பால் மொழியின்படியே*
*அல்லவைகடிந்து*
*நல்லவைநாட்டி*
*ஆறிலொரு*
*கடமைகொண்டு*

குடிதழைக்க ஆள்பவர் நாராயணக் கவுண்டர் என்று புகழ்கிறது, அந்தச் செப்பேடு (பல்லடம் செப்பேடு, கொ.ஆ)

### 6. காரையூர் செப்பேடு

பாளையக்காரர்கள் காலத்திலும் கொங்குநாட்டில் திருக்குறள் போற்றிப் பின்பற்றப்பட்டது. பழைய கோட்டைப் பட்டக்காரர் அழகன் உத்தமக்காமிண்டர்.

*அன்புடைத்தாய்போல்*
*அனைத்து உயிர்க்கும்*
*இனிதென*
*வள்ளுவர் உரைத்த முப்பால்*
*மொழியின்படியே*
*அறமே அறிந்து*
*ஆறில் நன்று கடமை*
*கொண்டு*

ஆட்சி செய்தார், என்கிறது, காரையூர் செப்பேடு. (தென்னிந்தியக் கோவில் சாசனங்கள்-தொகுதி மூன்று பாகம் ஒன்று, எண் 1223)

### 7. பழையக்கோட்டை பூர்வபட்டயம்

பழையக்கோட்டைப்பாளையக்காரர் குமாரரத்தினக் கவுண்டர் பள்ளிக்கூடமொன்று அமைத்தார். திருவாவாடு துறை ஆதினத்திலிருந்து ஆசிரியர் வரவழைக்கப் பட்டார். அந்தப் பள்ளிக்கூடத்தில்'

*சங்கீதபண்ணுடன்*
*தமிழ்மன்ற*
*சாதிமத பேதமிலாது*
*சகலருக்கும் நலநீதியாய்*

கற்பிக்கப்பட்டதாம். (பழைய கோட்டைப்பட்டக்காரர் நாட்டுப்பாடலும் பூர்வபட்டயமும் 1965) குறள் இசையோடு பயிற்றுவிக்கப்பட்டது, முக்கிய தகவல்.

### 8. திருக்குறள் ஓலைச்சுவடி


ஈரோடு மாவட்டத்தில் திருக்குறள் ஓலைச்சுவடி யொன்றைக் கண்டறிந்தார். கல்வெட்டறிஞர், செ. இராசு. ஓலையில் வலப்புறம்மூன்றில் இருபங்கு இடத்தில் திருக்குறள் கீழே பரிமேலழகர் உரை குறளுக்கு இடதுபுறம் உத்தமம், மத்திமம், அதமம் என்று ஒவ்வொரு குறளுக்கும் ஒருமாதிரி குறிப்பு. இச்சுவடி சோசிய சுவடியாகப்பயன்பட்டதாம். இந்த ஓலைச் சுவடியை ஒன்றாகச் சேர்த்துப் பிடித்து அந்த ஓலைகளுக்கு இடையே கயிற்றை





படிப்பகம்

www.padippakam.com


சோசியர் வீசுவாராம். அதை பிரித்துப் பார்த்தால் பலன் இருக்குமாம். அந்த மூன்றில் ஏதோ ஒன்றை சோசியர் கூறுவாராம். கேட்க வந்தவர் அப்பலனுக்கு ஏற்ப நடந்துகொள்ளவேண்டியது.

இந்தச் சுவடியின் காலம் இருநூறு ஆண்டுகள்.

### 9. மரக்கோட்டைதிருக்குறள்

அண்மையில் சேலம் அருகேயுள்ள மரக்கோட்டை என்னும் ஊரைச்சேர்ந்த பாரம்பரியமிக்க மருத்துவம் பார்க்கும் குடும்பத்தினரது ஓலைச்சுவடிகள் பார்வைக்கு வந்தன. அவற்றில் பெரிய அளவிலான மருத்துவச்சுவடிகள் பத்து. இதிகாசம், புராணங்கள் என எழுபது இருந்தன. திருக்குறள் சுவடியொன்றும் இருந்தது. இது இருநூறு ஆண்டுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்கலாம். அதில் பரிமேலழகர் உரை. அதிகார வைப்பு மாறிக்காண்கிறது. முன்னோர்கள் இந்த திருக்குறள் சுவடியை மருத்துவநூலாக பயன்படுத்தியிருக்கக்கூடும்.

### 10. இராசிபுரம் (ஆங்கிலத் திருக்குறள் கல்வெட்டு)

கடந்த மார்ச்சுத் திங்கள் இராசிபுரம் அரசு மருத்துவமனை சீரமைப்பின் போது, புதையுண்டிருந்த ஓர் ஆங்கிலத் திருக்குறள் கல்வெட்டு அறியப்பட்டது. அதிற்காணுவது

The wealth of generous soul is like the Tree that Healing Balm Distils for every ill

*The Sacret Kural*

*மருந்தாகித்தப்பா மருந்தற்றால் செல்வம்*
*பெருந்தகையான் கண் படின் (217)*

எனும் குறளாம். இக்குறளை வெட்டுவித்தவர் திருமதி எம். ஹெச். ஏ. டோட் அம்மையார்.

1929ஆம் ஆண்டு முதல் 1933ஆம் ஆண்டு வரை 3 முறை (42மாதங்கள்) சேலம் மாவட்ட கலெக்டராக இருந்தவர் ஏ.எச்.ஏ.டூட். அவரது துணைவியார் தாம் திருக்குறள் கல்வெட்டு வெட்டுவித்தவர்.

1931ஆம் ஆண்டில் ஏற்பட்ட காலரா மற்றும் காய்ச்சலினால் தற்போதைய தர்மபுரி, நாமக்கல் மாவட்டங்களையும் உள்ளடக்கிய சேலம் மாவட்டத்தில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இறந்தனர். அதன் பிறகு விரைவாக சேலம் மாவட்டத்தில் சேலம், ஆத்தூர், நாமக்கல், ராசிபுரத்தில் மருத்துவமனைகள் தொடங்கப்பட்டன. ராசிபுரத்தில் 23 படுக்கை வசதியுடன் மருத்துவமனை தொடங்கப் பட்டது. (1932) ஆங்கிலர் ஆட்சியில் மருத்துவமனைகள் இராணுவ




படிப்பகம்

www.padippakam.com



நிர்வாகத்திலிருந்து பொது நிர்வாகத்திற்கு மாறியது. இந்தக் காலகட்டத்தில்தான் பொதுமக்களிடம் நீதி திரட்டித்தான் இராசிபுரம் மருத்துவமனை அமைக்கப்பட்டது. ஆதலின் அதற்குப் பொதுப் பணியில் மக்களை ஈர்க்கும் படியான பொருத்தமானதோர் குறளைத் தேர்ந்து பதிவுசெய்துள்ளனர். அப்போது-ராசிபுரம் மருத்துவமனையின் சமகாலக் கட்டிடங்களில் இன்னும் வேறுபல திருக்குறட்பாக்கள் பதிக்கப்பட்டிருக்கலாம்.

இவை கொங்குநாட்டில் இதுவரை அறியவந்த திருக்குறள் தொடர்பான ஆவணங்கள்.

ஒன்று கல்வெட்டு, சிலசெப்பேடுகள், சில ஓலைச் சுவடிகள் இவை 15, 16, 17, 18, 19- ஆம் நூற்றாண்டுகளின் கொங்கு மக்களின் வாழ்க்கைப்பதிவுகள். இவற்றில்சாதிபேதம் கடந்த அனைத்து மக்களுக்கும் பொதுவான, அறம்சான்ற ஆட்சி என்னும் கோட்பாடு ஒலிக்கக் கேட்கலாம்.

✧ ✧ ✧


## உலக அரங்கில் குறளின் 'குரல்'

தமிழ் நாகரிகத்தில் பூத்த பண்பாட்டு மலர் திருக்குறள். மனிதநேயம் கமழும் ஒப்பற்ற மானுடக் காப்பியம். முழுமையான லட்சிய வாழ்வுக்கு வழிகாட்டி. ஆன்மிக வாழ்வு-அறவாழ்வு, பொருளியல்-அருளியல், இல்லறம்-துறவியல், ஈரம்-வீரம், காதல்-கற்பு ஆகிய பல்வேறு துறைகளையும் தழுவிய வாழ்க்கைக் கையேடு. இந்த ஒப்பற்ற மாமறை உலக நாகரிக அரங்கில் ஒளி விரிக்கவும் அதே சமயத்தில் திருக்குறளை முன்வைத்து தமிழ் மக்களை ஒன்றிணைப்பதற்கும் ஆன அபூர்வத் திட்டம் ஒன்று தமிழ் உலகில் அறிமுகமாகியுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக வாழ்ந்து வரும் தமிழ் உள்ளங்களை இணைக்கும் வசிய மருந்து இது. சென்னையில் உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற திருக்குறள் நூல் வெளியீட்டு விழாவில் இத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் தமிழ் வட்டங்கள் உலகெங்கும், தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் அமைக்கப்படும் என்ற தகவலை அறக்கட்டளை இயக்குநர் அழகப்பா ராம்மோகன் தெரிவித்துள்ளார். தமிழின் பலமுனை வளர்ச்சிக்காக இந்த அறக்கட்டளை உருவாக்கியுள்ள பல்வேறு திட்டங்களையும் அவர் விவரித்திருக்கிறார்.

வெகு விரைவில் தொடங்க இருக்கும் தமிழ் வட்டத்தில் திருவள்ளுவர் சிலையும் குத்துவிளக்கும் இடம்பெறும். தமிழ் உள்ளத்தை மேம்படுத்துவதற்கான நூல் நிலையமும் அமைந்திருக்கும். இது தவிரக் கோயில்களில் 'வள்ளுவர் அறிவகங்கள்' ஏற்படுத்தப்படும். இதன் மூலம் கோயில் வழிகாட்டுடன் சேர்ந்து அறிவு சிறக்கவும் வகை செய்து தரப்படும்.

உயர்ந்த தரத்தில் வசீகர வடிவமைப்பில் நவீன தொழில் நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள 'தமிழ்மறை திருக்குறள்' நூலை, பிரதமரின் அறிவியல் ஆலோசகர் அப்துல் கலாம் வெளியிட்டு கூர்மையான உரை நிகழ்த்தியுள்ளார். அவ்வுரையில் இந்த முன்னணி விஞ்ஞானியின் நெஞ்சகத்துள் மண்டிக்கிடக்கும் தமிழ்ப்பற்று மட்டுமன்றி குறள்வழிச் சிந்தனைப் பொறிகளும் வெளிப்பட்டன. அவருடைய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் திருக்குறள் எங்கெங்கு எப்படியெல்லாம் வழிகாட்டியாக, பற்றுக் கோடாகக் கைகொடுத்து உதவியுள்ளது என்பதையெல்லாம் - ஆரவாரமில்லாமல் பழகுதமிழில் ஒப்பனைப் பூச்சு சிறிதும் இல்லாமல் விவரித்துள்ளார். ஏவுகணைத் தொழில்நுட்ப கர்த்தாவான அப்துல் கலாமின் குறள் சிந்தனை எண்ணங்கள் மென்மையான மலர்க்கணைகளாக மாறி விழாவில் கலந்து கொண்டவர்களின் இதயங்களில் இதமாகத் தைத்து இனிய சிலிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பெற்ற நூல்-இன்றளவும் உயிரோட்டத்துடன் அதே பசுமையுடன் பொலிந்து நிற்கிறது. இன்றைய மனித வாழ்வுக்கும் பொருந்துகிறது. இதைவிட வேறு அதிசயம் என்ன இருக்கமுடியும்?' என்று கேட்காமல் கேட்டுள்ளார்-அவர்.

ஆகத் திருக்குறளை மையமாகக் கொண்டு தமிழ் மக்களின் இதயங்களை இணைப்பதற்கான கலாசார இயக்கம் இதன் மூலம் உதித்திருக்கிறது. இந்த இயக்கம் தமிழினத்துக்கு அதன் முக விலாசத்தை மீட்டுத் தருவதும் கூட. இதன் பரிமாணமாக உலக அரங்கில் தமிழ் நாகரிகம் தனக்குரிய எடுப்பான இடத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் அரும்பியுள்ளது.



*நன்றி - தினமணி*
*16-5-2000*



படிப்பகம்

www.padippakam.com



# குறளும் அயோத்திதாசரும்

*இரா. முத்துக்குமாரசாமி*

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர் அயோத்திதாசர் ஆவர். 'செந்தமிழ் பூண்ட அந்தணன் என்று இவரைப் போற்றுவார் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாணசுந்தரனார்.

*'ஆகமபுராண மிதிகாச மறைகோசங்கள்*
*அத்வைதம் வசிட்டாத்வைதம்*
*சமணமுனிவர்கள் பஞ்சகாவியம் கலைஞானம்*
*ஆயுர்வேதம் தத்துவம் யோகநிலை சாத்திரம்*
*சித்தர் நூல் பக்திநெறி யுகமொடு பல துமாய்ந்த*
*வரகவிஞன் அயோத்தி தாசர்'*

என்று போற்றப் பெற்றவர்.

'இவர் பிரிவு தமிழ்ப் பாஷாவிர்த்திக்கும் பௌத்த மதப் பரவலுக்கும் மநுகோடிகளின் சீர்திருத்தத்துக்கும் பெரிய நஷ்டமே' என்று இவர் மறைந்தபோது மக்கள் வருந்தினர்.

தமிழ்ப் பழங்குடிகளான ஆதி திராவிடர் சமுதாயம், சமயம், இலக்கியம், அரசியல், வரலாறு, தொழில், பகுத்தறிவு, சீர்திருத்தம் போன்ற பலதுறைகளில் ஈடுபட்டு ஒடுக்கப்பட்ட ஆதிதிராவிட சமுதாயத்துக்காக உழைத்தவர்.

பஞ்சாயத்து, நகராட்சி, சட்டமன்றம், பாராளுமன்றம் போன்றவைகளிலும் தொழில்துறை கல்வி, விவசாயம், காவல் துறை போன்ற அனைத்து அரசுத் துறைகளிலும் ஆதிதிராவிடர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று போராடியவர் இவர்.

நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, பாராட்டத்தக்க உழைப்பு என்ற ஐந்தும் ஒருசேரப் பெற்றவராகத் திகழ்ந்தவர் அயோத்திதாசர்.

சென்னை இராயப்பேட்டை பகுதியில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20இன் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் அயோத்திதாசர். இவர் தோற்றம், சொந்த ஊர் போன்ற குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆதிதிராவிடர் குடும்பத்தில் பிறந்தவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் அவர்களை உயர்த்துவதற்காகவும் பாடுபட்ட இவர் சிறந்த சிந்தனையாளராகவும் நல்ல எழுத்தாளராகவும் பண்பட்ட பேச்சாளராகவும் திகழ்ந்திருக்கிறார். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் வல்லவர்.

தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காகவே 'தமிழன்' என்ற வார இதழை 1907 முதல் 1914 வரை சென்னையிலிருந்து வெளியிட்டு வந்தார்.

தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்க்கையில் வசதி பெறவும் அரசுப்பதவிகளில் இடம் பெறவும் வழிவகுக்கும் வகையில் 1885ஆம் ஆண்டு அரசு உருவாக்கிய மக்கள் நிதியுதவித் திட்டத்தின் போதே தாழ்த்தப்பட்டோர் பட்டியலை அரசு உருவாக்கக் காரணமாயிருந்தவர். வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் பற்றிய அரசாணை பின்னாளில் உருவாவதற்கு முன்னரே தாழ்த்தப்பட்டோர் பட்டியல் அரசால் தொகுக்கப்பெறக் காரணமாயிருந்தவர்.

தாழ்த்தப்பட்ட சிறுவர்களுக்காகப் பிரம்ம ஞான சபை ஆல்காட் துரையுடன் சேர்ந்து தனிப்பள்ளிகள் அமைத்து 1900-10களில் மதிய உணவை மாணவர்கள் பெற வழிவகுத்தவர்.



எந்த ஒரு சமயத்தையும் முழுவதுமாக சாராமல் தத்தம் விருப்பம் போல் சைவ, வைணவ சமயங்களைத் தாழ்த்தப்பட்டோர் தழுவியதால் வாழ்க்கையில் முன்னேற முடியவில்லையென்றும் அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



அனைவரும் பௌத்த சமயத்தைத் தழுவ வேண்டுமென்றும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பாடுபட்டார். பௌத்த மதத்தில் சார்ந்து, இலங்கையிலுள்ள பௌத்தமடங்களுக்குச் சென்று முறையாகப் பௌத்த மத தத்துவங்களைப் பயின்று, தமிழ் நாட்டில் 'தென்னிந்திய காக்கைய பௌத்த சங்கம்' ஒன்றை நிறுவினார். இலங்கை மடத்தினர் இவருக்கு 'ஆசாரிய துரை அயோத்திதாச பண்டித தம் மதாயகா' என்ற பெயரைச் சூட்டினர்.

இவருடைய முன்னோர்கள் தமிழுக்காகப் பாடுபட்டவர்கள். 1796இல் சென்னைக்கு அரசுத்துறையில் பணியாற்ற வந்த எல்லீஸ் துரையவர்கள் தமிழ் படிக்க விரும்பினார். அவருக்குத் திருக்குறள் ஏட்டுச் சுவடி யொன்றைத் தாம் வேலை பார்த்து வந்த வெள்ளைக்காரர் வழி சேர்ப்பித்தவர் அயோத்திதாசரின் பாட்டனாரான கந்தசாமி என்பவர்.

எல்லீஸ் தனக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க வந்த பிராமணர்களிடம் 'கந்தசாமி திருக்குறள் கொடுத்தாரெ'ன்றார். 'அவர் தீண்டத்தகாதவர். அவர் கொடுத்த திருக்குறள் தீண்டத்தகாதது' என்றனர். காரணம் வள்ளுவர் புலைச்சியின் மகன் என்பது அவர்கள் எண்ணம்.


'ஏன் இப்படிப் பிராமணர்கள் கருதுகிறார்கள்' என்று கந்தசாமியை அழைத்து எல்லீஸ்துரை கேட்க 'எங்களுக்கும் இவர்களுக்கும் விரோதம். எங்கள் வீதிக்குள் இவர்கள் வந்தால் உங்கள் பாதம் பட்ட இடம் பழுதாகிவிடும் என்று சொல்லிக் கொண்டு இவர்களைத் துரத்தி இவர்கள் வந்த வழியிலும் சென்ற வழியிலும் சாணத்தைக் கரைத்துத் தெளித்து சாணக் கட்டியையும் உடைத்து வருகிறார்கள்' என்று கூறினாராம். உண்மையான காரணத்தைப் புரிந்து கொண்ட எல்லீஸ்துரை திருக்குறளை ஆழமாகப் படித்து அதை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தார். 1819-இல் துரை திடுமென மறையநேர்ந்ததால் நூல் முழுவதும் மொழிபெயர்க்கப்படாமல் போயிற்று. செய்தவரை நூல் அந்தக் காலகட்டத்தில் அச்சாயிற்று. பின்னர் சென்னைப் பல்கலைக்கழகமும் மறு அச்சு செய்தது.

குறள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட ஒருவகையில் காரணமாக இருந்தார் அயோத்தி தாசனாரின் பாட்டனார். அவ்வகையில் தாசரும் குறளில் ஈடுபாடு கொண்டு தாம் தொடங்கிய 'தமிழன்' ஏட்டில் அவர் மறையும்வரை திருக்குறளுக்கு உரை எழுதலானார். 55 அதிகாரங்களுக்கு உரை எழுதியுள்ளார். கடவுள் வாழ்த்து முதல் தொடர்ச்சியாக எழுதினாலும் இடையில் சில அதிகாரங்களைப் பிற்பகுதியிலிருந்து எடுத்து முன்னால் வைத்துள்ளார். இதற்கான காரணம் தெரியவில்லை.

தாசர் பௌத்த மதத்தைச் சார்ந்தவராதலின் அந்த மதக் கொள்கைகளைப் பின்பற்றியே உரை எழுதியுள்ளார்.

முதலில் நூலின் பெயரையே 'திரிக்குறள்' என்று மாற்றியுள்ளார். காரணம் ஆதிபகவனாம் புத்தபிரான் ஓதியுள்ள திரிபிடக வாக்கியங்களாம் திரிபேத வாக்கியங்களைத் தழுவித் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் என்று நம்பினார்.

வழக்கமாக எல்லா உரையாசிரியர்களும் 'ஆதிபகவன்' என்பதை ஒரே தொடராகக் கொண்டு முதற்கடவுள் என்று பொருள் கூறுவர். ஆனால் தாசர் 'அகரம் மற்றுள்ள எழுத்துக்களுக்கெல்லாம் ஆதி (முதல்). புத்தபிரான் (பகவன்) உலகுக்கு முதலாயிருக்கிறான் என்று பொருள் கொள்கிறார். இவர் சில முக்கியமான சொற்களுக்குத் தந்துள்ள உரைக் குறிப்பு மட்டும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.





படிப்பகம்

www.padippakam.com



எண்குணத்தான் தூய உடம்பினன், தன்வயத்தனன், இயற்கையுணர்வினன், முற்றும் உணர்ந்தவன், பற்றற்றவன், பேரருளாளன், முடிவிலா ஆற்றலுடையவன், வரம்பில் இன்பமடைந்தவன் - இந்த எண் குணங்களையுடையவர் புத்தர்.

அந்தணர் சமணமுனிவரிற் சிறந்தோர்.

இயல்புடைய மூவர் - துறந்த சான்றோர், (இல்லறம் துறந்த சமண முனிவர்கள்) துறவாத ஆதுலர் (அங்கவீனர்கள் அநாதைகள்) மரித்தோர்.

தென்புலத்தார் - புலன்கள் தென்பட உழைக்கும் சமணமுனிவர்கள்.

எழுபிறப்பு - தேவர், மக்கள், விலங்கு, பட்சி, தாவரம், ஊர்வன, நீர் வாழ்வன ஆகிய எழுவகைத் தோற்றங்கள்.

இவை தவிர சில குறட்பாக்களுக்குப் புதுவகையாகப் பொருள் காணுகின்றார். 'விருந்து ஒக்கல் தான்' என்று முன்றாகப் பலரும் உரைகண்டிருக்க 'விருந்தொக்கு மென்றாங்கு' என்று பாடம் கொண்டு முனிவர்களுக்கும் தேவகதியுற்றவர் களுக்கும் ஒத்த விருந்தினரென்றளிக்கும் ஈகையுடையோனை ஐம்புல அவாவுள்ளோர் யாவரும் தங்கள் சிரத்திலேந்திக் கொண்டாடுவார்கள் என்று பொருள் கண்டுள்ளார்.

'வித்துமிடல் வேண்டும் கொல்லோ' என்ற தொடருக்குப் பலரும் விதை விதைக்க வேண்டுமோ தானாக பயிர் வளர்ந்து விடும் என்று பொருள் உரைக்கின்றனர். ஆனால் தாசர் 'விதை விதைத்தல் வேண்டும்! கொல்லோ - ஆயினும் விருந்தோம்புவனது நிலத்தில் மிகுதியான பலன் கிடைக்குமென்கிறார்.

'மறப்பினும் ஒத்துக் கொளலாகும்' என்ற குறளுக்கு மக்கட் பிறப்பிற் தோன்றியும் தன்னைத்தான் அறியாதவனாயினுங் குற்றமில்லை; மக்கட் பிறப்பாம் மானிடனெனப் பிறந்து தன்னை ஆராய முயன்றும் நல்லொழுக்க நெறியில் தவறுவானாயின் கெடுவான்' என்று பொருள் கண்டுள்ளார்.

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்பதற்குத் தாசர் வரைந்துள்ள உரை' ஒரு காரியத்தைத் தொடுத்து வெளித்தே ன்றில் அதனாலோர் கீர்த்தியுண்டாகத் தோன்றுக. அவ்வகையில்லாததோர் அக்காரியத்தைத் தொடுத்து வெளிவருதலிலும் தோன்றாம லிருத்தலே நன்று!

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலன்' என்ற குறளுக்கு ஆயிரங்கலியாணங்களைச் செய்து நெய்பிசைந்த சோற்றை அளிப்பவனாயினும் ஒரு சீவனைக் கொன்று அதன் புலாலைப் புசியாதோன் என்பானே நல்லவன்' என்பது தாசரின் உரை.

'மழித்தலும்நீட்டலும் வேண்டா' என்ற குறளுக்குத் தாசர் தந்துள்ள விளக்கம். தறவு: பூண்ட பின் அவ் ஒழுக்கத்தில் தவறாது நின்றானாயினும் அவன் அதில் வெற்றி பெற்றான் என்று பொருள் அவன் இருபிறப்படைந்தான் என்று ஆதி தேவனுக்கொப்பாக மக்கள் கொண்டாடுவார்கள். அன்று முதல் சிரமயிர் கழிக்க வேண்டும், சடைமுடி வளர்க்க வேண்டும் என்று கூறும் விதிகளற்றுப்போவான்.

'அறத்தாறிது' என்ற குறளுக்குத் தாசரின் விளக்கம்: தருமத்தின் ஆற்றலாம் பயன்களை அவனவன் செய்தொழில் சித்தியாலும் சுகானுபாவத்தினாலும் அறியலாம். ஒருவன் கடினமான செயல் செய்து வாழ்வதும் மற்றொருவன் எளிமையான சொகுசான செயல் செய்து வாழ்வதும் தருமத்தின் ஆற்றலாகும்.

'கல்லாதான் சொற்காமுறுதல்' என்ற குறளுக்கு அவர் தந்துள்ள விளக்கம்: தனங்கள் தோன்றாத பெண்ணை யாரும் விரும்பமாட்டார்கள். அது போலவே கல்லாதவர் சொல்லையும் பெரியோர் ஏற்கமாட்டார்கள்.





படிப்பகம்

www.padippakam.com



'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் என்ற குறளுக்கு அறிவின் விருத்தியால் கண்டடைய வேண்டிய பொருளைத் தன்னிற்றானே கண்டடைய வேண்டும். அன்றி ஏனையோரால் கண்டடையலாகாது என்று தாசர் உரை கண்டுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. உட்படப் பல பெரியோர்கள் உரை கண்டுள்ளனர். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக அயோத்திதாசர் குறளுக்குப் புத்துரை கண்டதில் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்.

தமிழ்மீது அவருக்கிருந்த ஆர்வம் அளவிடற்கரியது. ஒவ்வொரு குறளுக்கும் பதவுரை, கருத்துரை பொழிப்புரை, விளக்கவுரை என நான்கும் தந்துள்ளார். ஒவ்வோர் அதிகாரத்தின் தொடக்கத்திலும் அதிகாரப் பொருளின் கருத்தைத் தொகுத்தளித்துள்ளார்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திலும் தாசரின் கருத்து சென்றுள்ளது. ஐகாரத்திற்கு எகரமும் ஒளகாரத்திற்கு 'அவு' என்பதும் தாசரால் பின்பற்றப் பெற்றுள்ளது.

(எ.டு)

பழைமை - பழமெ.

பெருமை - பெருமெ.

அரையன் - அரயன்.

மௌனம் - மவுனம்.

இவ்வாறு தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கும் முன்னோடியாக விளங்கியுள்ளார்.

ஒரு நூற்றாண்டுக் காலமாக மறைந்து கிடந்த அயோத்திதாசரின் சிந்தனைகளைப் பெரும்பாடுபட்டுத் தொகுத்து ஞான. அலோசியசு அவர்களும் நூலாக வெளியிட்ட பாளை தூயசவேரியர் கல்லூரி நாட்டார் வழக்கியல் ஆய்வு மையத்தினரும் பாராட்டுக்குரியவர்கள். ✧ ✧ ✧

### புரவலர்

1. அண்ணாமலை, என்.எம்.,
   மீனா அண்ணாமலை கார்டன்ஸ்,
   சென்னை - 4

2. சரவணன் கே.பி., பி.இ.,
   மேற்கு பல்லடம்,
   பல்லடம்.



படிப்பகம்

www.padippakam.com


# திருக்குறள் கட்டமைப்பைச் சிதைத்து ஓர் உரையாக்கம்

க.சி. அகமுடை நம்பி

உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு இதோ, மற்றுமோர் உரை என்ற மகிழ்ச்சி, பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் 'திருக்குறள் - உரையுடன்' என்ற நூலைப் பார்த்தவுடன் ஏற்பட்டது. பட்டிமன்றப் புகழ்ப் பேராசிரியர் திருக்குறளுக்கு உரை எழுதியிருப்பது, மக்களிடையே திருக்குறள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் என்ற நினைப்புத் தோன்றியது.

ஆனால், இவருடைய உரைநூலைப் புரட்டிப் பார்த்தபோது மகிழ்ச்சிக்கு மாறாக ஏற்பட்டது அதிர்ச்சிதான். இந்த நூலில், திருக்குறளின் கட்டமைப்பே சிதைக்கப் பட்டுள்ளது. பொருத்தமற்ற முறையில் அதிகாரங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

திருக்குறளின் அதிகார வரிசையையோ ஒவ்வோர் அதிகாரத்திலுள்ள பத்துக்குறள் களின் வரிசையையோ சில உரையாசிரி யர்கள் ஓரளவு மாற்றியமைத்துள்ளனர் என்பது உண்மைதான். ஆனால், இதன் முப்பால் பகுப்பைப் பிளக்கும் செயலை இதுவரை எவரும் செய்திடத் துணிய வில்லை. இத்தகு செயலைச் செய்திட இந்தப்பேராசிரியர்க்கு மட்டும் எப்படித் துணிவுவந்தது?

அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் களைக் கொண்டுள்ளதால் திருக்குறளுக்கு 'முப்பால்' என்ற பெயரும் வழக்கில் உள்ளது. டாக்டர் மு. வரதராசனார் தமது 'திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலில், இன்பத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் என்று வரிசைப்படுத்திக் குறள் விளக்கக் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆனால், 'திருக்குறள் தெளிவுரை' என்ற தமது உரைநூலில், முப்பால் வரிசையை டாக்டர் மு.வ. மாற்றவில்லை.

மேலும், முப்பால் வரிசையை மாற்றுவது என்பது வேறு, முப்பால் அமைப்பையே சிதைப்பது என்பது வேறு.



முன்னதைச் சுட்டிக் காண்பித்து, திருக்குறள் கட்டமைப்பையே சீர்குலைத்துள்ள தமது செயலை இவ்வுரையாசிரியர் நியாயப்படுத்திக் கொள்வது, நேர்மைக்குப் புறம்பானது.

அறத்துப்பால், பொருட்பால் இரண்டும் மக்களுக்குரிய அறிவுரைகளாகவும் அறிவுறுத்தல்களாகவுமே அமைந்துள்ளன. ஆனால், இன்பத்துப்பால்? இதன் அமைப்பு, தலைவன் தலைவி இருவரின் உணர்வுக் களமாகவும் நாடகப்பாங்காகவும் அமைந்துள்ளது. இந்த அமைப்புடன் இன்பத்துப்பால் தனித்து விளங்குவதற்கே உரியது.

சிறப்பான இவ்வமைப்பு முறையைக் கருதிப் பார்க்காமல், அறத்துப்பாலின் அதிகாரங்களையும் இன்பத்துப்பாலின் அதிகாரங்களையும் அடுத்தடுத்து வருமாறு இவ்வுரை நூலில் அமைத்திருப்பது, சிறிதும் பொருத்தமற்ற, அடாத செயலாகும்.

'அறன்வலியுறுத்த'லுக்கு அடுத்ததாகத் 'தகையணங்குறுத்த'லைக் காண்கிறார் சாலமன் பாப்பையா!

*செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு*
*உயற்பாலது ஓரும் பழி*

என்ற குறளுக்கு அடுத்து,

*அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலும் என் நெஞ்சு*

என்ற குறள் வருவதே சரி என்று வழக்காடுகிறாரா இவர்?

அதேபோல்,

*இன்னாமை இன்பம் எனக் கொளின் ஆகும்தன்*
*ஒன்னார் விழையும் சிறப்பு*

என்ற 'இடுக்கண் அழியாமை'யில் வரும் குறளுக்கு அடுத்ததாகத் தலைவனின்


படிப்பகம்

www.padippakam.com



பிரிவுக்கு அஞ்சுகின்ற தலைவியின் உணர்வாகவும் உரையாகவுமாய் அமைந்துள்ள 'பிரிவாற்றாமை' என்ற அதிகாரத்தின்,

*இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவுஅஞ்சும்*
*புன்கண் உடைத்தால் புணர்வு*

என்ற குறள் வருகிறது. இவ்வாறு வரிசைப் படுத்துவதற்கு இப்பேராசிரியரின் மனம் எவ்வாறு இடம் கொடுத்தது? புலப்படவில்லை.

இனி, இப்பேராசிரியரின் சீர்குலைப்பு வேலை, திருக்குறள் அதிகாரங்களின் பெயர் மாற்றத்திலும் தொடர்கிறது. எடுத்துக்காட்டு களாகச் சிலவற்றை இங்குக் காண்போம்:

| திருக்குறள் அதிகாரத் தலைப்பு | உரையாசிரியர் இட்டுள்ள புதிய தலைப்பு |
|---|---|
| இகல் (மாறுபாட்டுணர்வு) | நல்லிணக்கம் |
| வெஃகாமை (பிறர் பொருளைக் கவர விரும்பாமை) | கையூட்டு (லஞ்சம்) |
| இரவச்சம் (பிச்சை கேட்டுப் பெற அஞ்சுதல்) | பிச்சை எடுக்க அஞ்சாமை |
| கண்ணோட்டம் (கனிவுடன் ஒத்துப் போகும் தன்மை) | முகம் பார்த்தல் |
| புகழ் (பாராட்டுப் பெறுதல்) | என்றும் நிற்பது |

இவ்வாறு அதிகாரப் பெயர்களைத் தம் விருப்பம்போல் ஏனோதானோ வென்று மாற்றியுள்ளார். 'வெஃகாமை' என்பதற்குப் பிறர் பொருளைக் கவர விரும்பாமை என்பது பொருள். கையூட்டு என்பது பிறர் பொருளைக் கவர்கின்ற பல வழிமுறைகளில் ஒரு முறையே. பிறரை ஏமாற்றி அவர் பொருளைக் கவர முயலுதல், அடாவடித்தனமாகக் கைப்பற்ற முனைதல் போன்ற பல்வேறு செயல்பாடு களைக் குறிக்கின்ற ஒரு அதிகாரத் தலைப்புக்குக் கையூட்டு 'என்கின்ற ஒன்றை மட்டும் காண்பிப்பது குறையுடையதாகாதா? (இரவு) அச்சம் என்பது அஞ்சாமை என்று இவருக்கு எவ்வாறு பொருள்படுகிறது?

பட்டிமன்றத்தில் சிரிப்பை உண்டாக்கு வதற்காக இப்பேராசிரியர் பல வழிமுறை களைக் கையாள்வார்; பார்வையாளர் களிடையே கலகலப்பை உண்டாக்குவார். திருக்குறளுக்கு உரை எழுதுவதையும் அவ்வாறே நினைத்துவிட்டார் போலும், திருக்குறளின் கட்டமைப்பைப் பிளந்து, அதிகாரங்களை அலங்கோலமாக வரிசைப் படுத்தி, அதிகாரப் பெயர்களை ஏனோ தானோவென மாற்றி, பாத்திரக்கடையில் யானை புகுந்த கதையாகக் கவியாட்டம் ஆடியிருக்கிறார் இவர்.

இவர் திருக்குறளுக்கு உரை எழுதியதன் நோக்கமே, திருக்குறள் கட்டமைப்பை உடைத்து, தம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்குத் தகுந்தபடி வள்ளுவத்தைச் சிதைப்பது தானோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

'தமிழில் எத்தகைய இலக்கியப் பயிற்சியும் இல்லாத சாமானியரும் திருக்குறளைத் தெரிந்துகொள்ளும்படி தர முயலும் முயற்சி இது' என்ற நூலின் முகவுரையில் இவர் கூறிக் கொள்கிறார். திருக்குறள் கட்டமைப்பைப் பிளந்து பொருத்தமற்ற முறையில் அதிகாரங்களை அடுக்கி அலங்கோலப்படுத்தினால்தான் சாமானியர்களும் திருக்குறளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாகும் என்று இவர் நினைக்கிறாரா? எதை வைத்துச் சாமானியரின் புரிதலுக்கு உதவியிருப்பதாக இவர் நினைக்கிறார்?

தமிழ்ப்பேராசிரியர் சாலமன் பாப்பையா இவ்வாறு தம் உரை நூலை எழுதி வெளியிட்டுத் திருக்குறளுக்குச் செய்துள்ள இந்தளவு கேட்டை இதுவரை யாரும் செய்திடத் துணியவில்லை. ஆங்கிலத்தில் high handedness என்பதற்குத் தன்முனைப்பு, அடாவடித்தனம், தான் தோன்றித்தனம் என்றெல்லாம் அகராதியில் பொருள் கூறப்பட்டுள்ளது. முதுபெரும் தமிழாசிரியரின் இச்செயல்பாட்டை இப்படியெல்லாம் கருதிப் பார்க்கக்கூடாது.

ஊழ்வினைப் பயன் என்று கொண்டு, நம் ஆற்றாமையைத் தாங்கிக்கொள்ள வேண்டியதுதான்.



*நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்*
*நல்லவாம் செல்வம் செயற்கு*

என்ற குறள் நம் முன் வந்து நிற்பதைத் தவிர்க்க முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



# குறள் விளக்கு

## வேழவேந்தன்

பகுத்துண்டு பல்லுயிரை ஓம்ப வேண்டும்
பாருக்கு வள்ளுவரே முதலில் சொன்னார்
வகுத்திதையே 'மூலதன' நூலில் பின்னால்
வடித்தவரே 'காரல்மார்க்ஸ்' இதுபோல் தீய
பகைவருக்குத் தண்டனைதான் நன்மை செய்தல்
பக்குவமாய்ச் சொன்னவரும் குறளார்தானே
நகைமுகத்தால் 'மறுகன்னம் காட்டாய்' என்ற
நாடறிந்த 'ஏசுபிரான்' இவரின் தம்பி!

எப்பொருளை யார்யார்வாய்க் கேட்ட போதும்
ஏற்றதையே கொள்கவென்று குறளார் சொன்னார்
'சிப்பியெலாம் முத்திருக்கும் எனநம் பாதே
சிந்தி'என்ற சாக்ரடீஸ் இவரின் தோழர்
இப்புவியில் கொல்லாமை நோன்பை ஏற்றோன்
இறைவனென்றே வள்ளுவரும் சொன்னார்
மண்ணின்
செப்பைப்போல் உடைகின்ற உடல்வ ளர்க்கச்
சிதைக்காதீர் உயிர்களையே என்றார் புத்தர்

மழித்தலிலும் நீட்டலிலும் பொருளா உண்டு?
மாவையம் பழிப்பதையே ஒழிக்க வேண்டும்
செழிப்பான பகுத்தறிவு விதையை அன்று
சீரோடும் ஊன்றியவர் குறளார்! இங்கே
விழித்திருக்கும் விழியெல்லாம் விழியே அல்ல
விழுங்கல்வி விழியென்றார் இரந்தேவாழ
பழிச்சட்டம் படைத்தவனும் கடவு ளென்றால்
பாவியவன் அழிகஎன்றே புரட்சி செய்தார்

'கனியிருக்கக் காய்பறித்தல் அறிவா' என்றார்
'காலத்தால் ஞாலத்தை வெல்வோம்' என்றார்
'வினைமுடிக்கும் திடமிருந்தால் தெய்வம் செய்த
விதிச்சட்டம் தூள்தூள் தூள்'என்றார் 'சொந்த
'மனையிருக்கப் பொதுமகளை நாடிச்
செல்வோன்
மாண்பில்லா பிணம்தழுவி' என்றார் 'உச்சி
நுனிக்கொம்பில் ஏறாதீர்' என்றார் 'கற்ற
நூலளவே அறி'வென்று உரக்கச் சொன்னார்

'வையத்து மாந்தரெலாம் சேற்றில் நிற்கும்
வயல்உழவர் காலடியில்' என்றார்! 'மாற்றார்
கையகத்துச் சோற்றுக்கு மானம் விற்றோன்
கால்தூசு இவ்வுலகில் என்றார்! இங்கே
'தையலுக்குக் கற்பொன்றே உயிர்தான்' என்றார்
'தாழ்எங்கே அன்புக்கே' என்றார்! தாழ்ந்து
ஐயஎன்றே இரப்பவர்க்கே இல்லை என்றோன்
அழிந்துவிட்ட பிண்டமென்றே அடித்துச்
சொன்னார்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப துக்குள்
அண்டமெலாம் அடக்கியவர் இவரே அன்னார்
வாயிருந்து பிறந்திட்ட கருத்தாம் ஊற்றே
வையமெலாம் அறிவாகக் கண்டோம்; தோன்றி
ஆயிரங்கள் இருமடங்கு ஆண்டா னாலும்
அழியாத 'கருவூலம்' படைத்தார்; அஃது
ஞாயிறுள்ள வரையிங்கே வாழும்; அந்நூல்
ஞாலமெலாம் பரப்புதற்கு வழிகள்
காண்போம்.


படிப்பகம்

www.padippakam.com


அறிவாயுதங்களை உருவாக்குவோம்

அய்யா பணியை நிறைவாக்குவோம்

- பாவலர் பல்லவன்

**நல்வாழ்த்துக்கள்**

அடையாறு

**மாணவர் நகலகம்**

ADYAR

**STUDENTS XEROX**

28, ச.ப. சாலை,

அடையாறு, சென்னை - 600 020.

☎ 4911358, 4919353

| | | | |
|---|---|---|---|
| அடையாறு | ☎ 4911358 | நுங்கம்பாக்கம் (மேற்கு) | ☎ 8278983 |
| | ☎ 4919353 | நுங்கம்பாக்கம் (கிழக்கு) | ☎ 8224801 |
| அண்ணாசாலை | ☎ 8521433 | கிண்டி | ☎ 2347016 |
| அண்ணாநகர் | ☎ 6261764 | மயிலாப்பூர் | ☎ 4997380 |
| பாண்டிபஜார் | ☎ 4346580 | பாரிமுனை | ☎ 5382513 |
| தேனாம்பேட்டை | ☎ 4349845 | சைதாப்பேட்டை | ☎ 4356254 |
| புரசைவாக்கம் | ☎ 5327065 | திருப்பதி I | ☎ (08574)27528 |
| வடபழனி | ☎ 4844988 | திருப்பதி II | ☎ (08574)24493 |
| தாம்பரம் | ☎ 2369597 | மயிலாடுதுறை | ☎ (04364)29651 |
| திருவான்மியூர் | ☎ 4421398 | மாணவர் மறுதோன்றி அச்சகம் | |
| ஆழ்வார்பேட்டை | ☎ 4327361 | பாண்டிபஜார் | ☎ 4343862 |
| கோடம்பாக்கம் | ☎ 4911358 | பாரிமுனை | ☎ 5382513 |
| கீழ்ப்பாக்கம் | ☎ 6428818 | கோவை (பீளமேடு) | ☎ (0422)561547 |


படிப்பகம்

www.padippakam.com

# வள்ளுவம்

தி.ஆ.2031 வைகாசி - ஆனி



படிப்பகம்